கல்கி



KALKI அக்டோபர் 26, 1952 4 அணா

கல்கி பொருளடக்கம்

மலர் 12 | இதழ் 13

1952 அக்டோபர் 26

நந்தன ஐப்பசி 10

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே


சென்னை
வெலிங்டன், கிரௌன்
இரு தியேட்டர்களிலும்
மற்றும்
தமிழ் நாட்டில் பல முக்கிய நகரங்களிலும்
வெற்றிகரமாக
ஓடிக் கொண்டிருக்கிறது!
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி
பிலிம் கம்பெனியாரின்
ஏழை உழவன்
— முற்றிலும் மாறுபட்ட முன்னேற்றச் சித்திரம் —
டைரக்ஷன்: கே. பி. நாகபூஷணம்
அஞ்சலிதேவி · கண்ணாம்பா · லக்ஷ்மிபிரபா · துளஸி · முத்துலக்ஷ்மி ·
ஸ்ரீராமமூர்த்தி · லிங்கமூர்த்தி : பந்துலு · துரைஸ்வாமி · ரேலங்கி · நடித்தது
வசனம்: உதயகுமார் · ஸ்டுடியோ: ஜெமினி

கல்கி

மலர் 12 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 13

மூன்று நகரங்கள்

சென்னை இராஜ்ய மெங்கும் சமீபத்தில் நகர சபைத் தேர்தல்கள் நடைபெற்றன. மிகப் பெரும்பாலும் முடிவுகளும் வெளியாகி விட்டன. தேச நன்மையில் கருத்துள்ளவர்களுக்கு அம் முடிவுகள் ஓரளவு திருப்தி அளித்திருக்கும்.

இந்த இராஜ்யத்தில் புதிய ராஜாஜி மந்திரி சபை ஏற்பட்டு வெகு சீக்கிரத்திலேயே நகரசபைத் தேர்தல்கள் வந்து விட்டன. (மற்ற இராஜ்யங்களில் இப்படி நடைபெறவில்லை.) புதிய ஆட்சியினால் ஏற்பட்ட மாறுதல்களை மக்கள் உணர்வதற்கும் அவரவர்களுடைய மனோபாவத்தில் மாறுதல் ஏற்படுவதற்கும் அவசியமான அவகாசம் அளிக்கப்படவில்லை. புது மந்திரி சபை ஏற்பட்டு முழுமையாக ஆறு மாதங்கூட ஆகவில்லை. சீர்குலைந்திருந்த காங்கிரஸ் ஸ்தாபனங்களை நல்லபடியாகச் சீர்திருத்தி அமைத்துக் காங்கிரஸ் வேலைக்குப் புத்துயிர் தரவேண்டிய காரியமும் சரிவர நடைபெறவில்லை. அதற்குள்ளே இந்த நகரசபைத் தேர்தல் அவசரப்பட்டுக் கொண்டு வந்து விட்டது. அவசரக் கோலம் அள்ளித் தெளித்த கதையாகவே பல இடங்களில் காங்கிரஸ் ஸ்தாபனங்கள் நகரசபைத் தேர்தல்களில் ஈடுபட்டன. மற்றும் பல இடங்களில் காங்கிரஸ் ஸ்தாபனங்கள் நகரசபைத் தேர்தல்களில் நேரடியாகக் கலந்து கொள்ளாமலே இருந்து விட்டன.

எல்லா நிலைமைகளையும் சீர் தூக்கி லாபநஷ்டக் கணக்குப் பார்க்கும் போது, பொதுவாக இத்தேர்தல்களில் காங்கிரஸ் கணிசமான வெற்றி அடைந்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

காங்கிரஸ் அடைந்த வெற்றியைக் காட்டிலும் முக்கியமான அம்சம், காங்கிரஸுக்கு விரோதமான முக்கிய கட்சிகளும் கோஷ்டிகளும் சென்னை இராஜ்ய மெங்கும் படு தோல்வி அடைந்திருப்பதாகும்.

இப்படி இரண்டு விதமாகவும் தேர்தல் முடிவுகளை ஆராய்ந்து பார்க்கும்போது இந்த இராஜ்யத்தில் அரசியல் காற்று காங்கிரஸுக்கு அநுகூலமாகத் திரும்பியிருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

* * * *

பெரிய நகரங்களுக்குள்ளே கோயமுத்தூரிலும் மதுரையிலும் காங்கிரஸ் மாபெரும் வெற்றி அடைந்திருக்கிறது.

கோயமுத்தூர் எப்போதுமே காங்கிரஸ் பற்றுள்ள நகரம். சென்ற பொதுத் தேர்தலிலும் காங்கிரஸுக்கு அந் நகரில் வெற்றி கிடைத்தது. அதே நிலைமை நீடித்திருக்கிறது. இன்னும் சிறிது அபிவிருத்தியும் அடைந்திருக்கிறது என்று நகரசபைத் தேர்தலின் மூலம் தெரிய வந்திருக்கிறது.

மதுரை நகரில் காங்கிரஸின் வெற்றி மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸின் சரிவு மதுரைமா நகரிலேதான் ஆரம்பமாயிற்று. அந்த நிலைமை இப்போது மாறிவிட்டது என்பது நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் அடைந்துள்ள மகத்தான வெற்றியின் மூலம் நிதரிசனமாகிறது. ராஜாஜி முதன் மந்திரியானதும் முதலில் மதுரை மா நகருக்குத்தான் சென்றிருந்தார். அப்போது மதுரை மக்கள் ராஜாஜிக்கு அளித்த வரவேற்பு அதற்கு முன்னாலும் கண்டதில்லை, இனியும் காணப்போவதில்லை என்று சொல்லக்கூடியதாக இருந்தது. மதுரை மக்கள் அப்போது காட்டிய உற்சாகம் நீர்க்குமிழி போன்ற வெளிப் பகட்டான உற்சாகமல்ல வென்பது நகரசபைத் தேர்தலின் மூலம் வெளியாகி யிருக்கிறது.

பொதுஜனங்களுக்கு எவ்வளவு உற்சாகம் இருந்தபோதிலும் அது காரியத்தில் பயன்படுவதற்கு வேண்டிய வழி முறைகளை வகுத்துக் கொடுப்பது காங்கிரஸ் தலைவர்கள் — ஊழியர்களின் கடமையும் உரிமையுமாகும்.

மதுரை நகரின் காங்கிரஸ் கமிட்டி திருத்தி அமைக்கப்பட்டதும், ஸ்ரீ ஏ. வைத்திநாதய்யர் அந்தக் கமிட்டியின் தலைவராகித் தேர்தலை நடத்தி வைக்கும் பொறுப்பை

ஏற்றுக் கொண்டதும் மதுரை நகர மக்களின் உற்சாகம் காரியத்தில் பயன்படுவதற்கு முக்கிய காரணங்களாயின.

மதுரை நகர மக்களையும் மதுரை நகர்க் காங்கிரஸ் தொண்டர்களையும் அவர்களுக்குத் தலைமை வகிக்கும் ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

இன்று போலவே என்றும் அவர்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் முன்னணிப் படையாக நிலைத்து நின்று சென்னை இராஜ்யத்துக்கே வழி காட்டி வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

* * *

சென்னை நகரசபைத் தேர்தலிலும் காங்கிரஸ் வெற்றி அடைந்து பெரும்பான்மை பெற்றிருக்கிறது. ஆனால் அதைப் பரிபூரண வெற்றி என்றோ, அல்லது உற்சாகப்படக் கூடிய வெற்றி என்றோ சொல்ல முடியாது.

வட சென்னையில், காங்கிரஸ் எதிரிகளின் கோட்டைகள் என்று கருதப்பட்ட சில தொகுதிகளில், காங்கிரஸ் வெற்றி அடைந்தது மிகவும் திருப்திகரமான அம்சம்.

மற்றும் சில இடங்களில், நியாயமாகக் காங்கிரஸ் வெற்றி அடைந்திருக்க வேண்டிய தொகுதிகளில் காங்கிரஸ் தோல்வி அடைந்தது. இது அதிருப்திகரமான அம்சம்.

மொத்தத்தில் தேர்தல் நடந்த ஸ்தானங்கள் 60ல் காங்கிரஸ் 33 ஸ்தானங்களைப் பெற்றது. காங்கிரஸ் அபேட்சகர்களாக நின்று வெற்றி அடைந்த 33 அபேட்சகர்களைத் தவிர மற்றும் 10 பேர் நிச்சயமான காங்கிரஸ் சார்புள்ளவர்கள் என்பது 'ஆல்டர்மன்' தேர்தலிலிருந்து வெளியாகியிருக்கிறது. ஆல்டர்மன் தேர்தலுக்குக் காங்கிரஸ் கட்சியார் நிறுத்தி வைத்த ஐந்து அபேட்சகர்களும் வெற்றி அடைந்தார்கள். அவர்களில் முதல் இருவரும் 46 வோட்டுக்கள் பெற்றார்கள். கடைசி அபேட்சகர் 43 வோட்டுக்கள் பெற்றார்.

ஆல்டர்மன்களையும் சேர்த்துப் பார்த்தால், மொத்தம் 75 அங்கத்தினர்கள் உள்ள சென்னை நகர சபையில் அசல் காங்கிரஸ் கட்சியினரும் காங்கிரஸ் பற்றுள்ளவர்களும் சேர்ந்து ஐம்பது அங்கத்தினர் இருப்பார்கள்.

ஆகவே, சென்னை நகர சபையிலுள்ள காங்கிரஸ் கட்சியை நல்ல முறையில் கட்டுப்பாடு குலையாமல் நடத்திக் கொண்டு போனால் சென்னை நகரசபை காங்கிரஸ் ஆதிக்யத்திலேயே நடந்து வரக் கூடும்.

வெற்றி பெற்ற காங்கிரஸ் அபேட்சகர்கள் கட்டுப்பாடு இன்றித் தங்களுக்குள் பூசல் விளைவித்துக் கொண்டிருந்தால் சீர்குலைந்து போவதற்கும் இடம் இருக்கிறது.

காங்கிரஸ் அங்கத்தினர் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வதுடன், காங்கிரஸ் சார்புள்ள மற்றப் பத்து அங்கத்தினரையும் சுமுகமாக அணைத்துப் பாதுகாத்துத் தங்களுடனேயே வைத்துக் கொள்ளவும் முயல வேண்டும்.

இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால், காங்கிரஸ் நகரசபைக் கட்சிக்கு முதல்தரமான ஆற்றல் வாய்ந்த தலைவர் ஏற்படுவது அவசியம்.

மற்றும், நகரசபை மேயர் பதவிக்கு நகர மக்கள் உற்சாகத்துடன் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர் நீடித்த பொதுஜன ஊழியராகவும் அறிவாற்றலில் சிறந்தவராகவும் நேர்மையும் கண்யமும் வாய்ந்த காங்கிரஸ்வாதியாகவும் இருக்க வேண்டும்.

ஏதாவது காரணத்தைச் சொல்லிப் பெரும் பணக்காரர் ஒருவரைப் பதவிக்கு அலங்காரமாகத் தேர்ந்தெடுத்தால், காங்கிரஸிடம் மக்களுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கும் நம்பிக்கை மீண்டும் சிதறிப் போய்விடும்.

சென்னை நகரசபையில் உள்ள காங்கிரஸ் கட்சியினர் இந்தத் துறைகளில் தங்கள் கடமையை நன்கு நிறைவேற்றிக் காங்கிரஸின் பலம் வளர்வதற்குத் துணை செய்வார்கள் என்று நம்புகிறோம்.

மக்களை எதிர்த்து வெல்ல முடியாது!

சென்னை நகரில் நடந்த நகரசபைத் தேர்தல் முடிவுகளிலிருந்து ஒரு முக்கியமான படிப்பினை கிடைத்தது. அதைக் காங்கிரஸ் தலைவர்களும் நிர்வாகிகளும் ஊழியர்களும் மனத்தில் பதிய வைத்துக் கொள்வது மிகவும் அவசியம். ஆகையால் அதை இங்கு ஒரு முறை பெரிய எழுத்தில் அச்சிட்டு எடுத்துக் காட்ட விரும்புகிறோம். அந்தப் படிப்பினை என்னவென்றால்:—

காங்கிரஸ் வாதிகள் கம்யூனிஸ்ட்டுகளை எதிர்த்து ஜயிக்கலாம்; கருப்புச் சட்டை வீரர்களை எதிர்த்து வெற்றி கொள்ளலாம்; பிரஜா கட்சியையும் சோஷலிஸ்ட்டுகளையும் ஜயித்து வீரமுரசு கொட்டலாம்; வகுப்பு வாதிகளை எதிர்த்து முறியடிக்கலாம்; காங்கிரஸ் எதிரிகள் அனைவரும் சேர்ந்து கூட்டணி அமைத்துக் கொண்ட போதிலும் அந்தக் கூட்டணியைத் தோற்கடித்து வாகை மாலை சூடலாம்.

ஆனால், பொதுமக்களையே எதிர்த்துக் கொண்டு காங்கிரஸ் கட்சி வெற்றி பெற முடியாது என்பதுதான்!

ஒரு தொகுதியிலுள்ள மக்களின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டவர்களை அவர்களின் தலைமீது காங்கிரஸ் அபேட்சகர்களாகச் சுமத்தி வெற்றி அடைய முடியாது.


ஒரு தொகுதியிலுள்ள வோட்டர்களின் மனோநிலை நன்கு தெரிந்திருந்தும், வேண்டுமென்று அவர்களுடைய விருப்பத்துக்கு விரோதமாக ஒரு அபேட்சகரைப் போட்டு ஜயிக்க முடியாது.

காங்கிரஸின் பெயரை உபயோகித்தாலும், காந்திஜி, நேருஜி ராஜாஜி இவர்களின் பெயர்களை உபயோகித்தாலும், பொதுமக்களையே எதிர்த்து ஜயிப்பது இயலாத காரியந்தான்.

மக்களின் விருப்பத்துக்கு மாறான அபேட்சகர்களை "அவர் சொன்னார்; இவர் அழுதார்" என்ற காரணங்களுக்காகப் போட்டு விட்டு, பிறகு காங்கிரஸ் தலைவர்களின் பெயர்களை உபயோகித்து வெற்றி பெற முயல்வது பயன் தராமல் போவது மன்றி, காங்கிரஸுக்கும் அந்தத் தலைவர்களுக்கும் செய்யும் பெருந் தீங்காகவும் முடிகிறது.

சென்னை நகர சபைக்குக் காங்கிரஸ் அபேட்சகர்களின் ஜாபிதா வெளியானவுடனேயே, "வட சென்னையில் ஒரு தொகுதியில் காங்கிரஸ் அபேட்ச

சமாதானம் பிழைக்குமா?



ரஷ்யா சமாதானத்துக்குரிய புதிய திட்டம் ஒன்று வகுத்து வெளியிட்டிருக்கிறது. அமெரிக்கா வெகு காலமாகவே உலக சமாதானத்துக்கு வழி காட்டி வருகிறது. இவர்களுடைய போட்டியில் உலக சமாதானம் பிழைக்குமா என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது.

கர் தோற்று விடலாம்" என்று சொன்னார்கள். பொறுக்கி எடுத்தவர்களே கூட அவ்விதம் சொன்னார்கள். "பின் எதற்காக அவரைப் போட்டீர்கள்!" என்று கேட்டதற்கு, "வேண்டாமென்றுதான் பார்த்தோம். வந்து அழுதார்; போட்டு விட்டோம்" என்றார்கள். அவர் நெடுநாளைய காங்கிரஸ்காரர் என்பதற்காக, அத்தொகுதியிலுள்ளவர்கள் விரும்ப மாட்டார்கள் என்று தெரிந்தும் அவரை நியமித்தார்கள்.

தென் சென்னையில் ஒரு தொகுதியில் மக்களுக்கு மிகச் சிறந்த தொண்டு புரிந்து நல்ல பெயர் வாங்கிய ஒருவர் காங்கிரஸ் அபேட்சகராக நிற்க விரும்பினார். அவரை எடுப்பதாக முதலில் தீர்மானித்து, பிறகு அத்தீர்மானத்தை மாற்றி, இன்னொருவரை அபேட்சகராக நியமித்தார்கள்.

'முதலில் செய்த நல்ல தீர்மானத்தை ஏன் மாற்றினீர்கள்!" என்று கேட்டதற்கு, "அந்தத் தொகுதி எம். எல். ஏ. வந்து அழுதார்! அதனால் மாற்றிப் போட்டோம்!" என்றார்கள்.

மேற்படி காங்கிரஸ் எம். எல். ஏ. எதற்காக வந்து அழுதாராம் தெரியுமா! "சென்ற பொதுத் தேர்தலில் அவர் எனக்கு எதிராக வேலை செய்தார்! அவரைப் போட்டால் என் மானம் போய் விடும்!" என்று அழுதாராம்.

கடைசியில் முடிவு என்னவென்றால், மேற்படி தொகுதியில் எல்லாரும் சேர்ந்து கட்டிக் கொண்டு அழும்படி ஆகிவிட்டது!

அசாவது தொகுதியில் நல்ல வேலை செய்து மக்களின் அபிமானத்தைப் பெற்றவர் ஜயித்தார்; காங்கிரஸ் அபேட்சகர் தோற்றுப் போனார்.

இம்மாதிரி அந்தந்தத் தொகுதி மக்களின் விருப்பத்துக்கு மாறாகக் காங்கிரஸ் அபேட்சகர்களைப் போட்டு அதனால் காங்கிரஸுக்குத் தோல்வியும் பலவீனமும் ஏற்பட்டதற்குச் சென்னையிலேயே இன்னும் நாலைந்து உதாரணங்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றைக் குறித்து விஸ்தரிக்க வேண்டிய அவசியமில்லை.

சென்னை இராஜ்யத்தில் அடுத்தாற்போல் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெறப் போகின்றன. அவற்றிலும் பல இடங்களில் காங்கிரஸ் அபேட்சகர்களை நிறுத்தும்படியாக நேரிடலாம். அப்படி நிறுத்துவதற்காக அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கும்போது, அபேட்சகர்கள் நல்ல காங்கிரஸ்வாதிகளா, யோக்யர்களா, திறமைசாலிகளா, ஒழுக்கம் உடையவர்களா என்பதை வெல்லாம் யோசிக்க வேண்டியதுதான். அவற்றுடன் மிக முக்கியமாக, அந்தந்தத் தொகுதி ஜனங்களின் அபிமானத்தைப் பெற்றவர்களா அல்லது பெறக் கூடியவர்களா என்பதையும் கவனிக்க வேண்டும்.

அபேட்சகர்களைப் பொறுக்கும்போது சிற்சில சந்தர்ப்பங்களில் தர்மசங்கடமான நிலைமை ஏற்படக்கூடியதுதான். அத்தகைய நிலைமையில் தொகுதி மக்களின் விருப்பத்துக்கு விரோதமாக ஒருவரைத் திணிக்க முயலுவதைக் காட்டிலும், காங்கிரஸ் அபேட்சகர் யாரையும் போடாமல் விட்டுவிடுவது சாலச் சிறந்ததாகும்.

கம்யூனிஸ்டுகளின் பெருஞ் சரிவு

இந்த இராஜ்யத்தில் நடந்த நகரசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் கணிசமான வெற்றி அடைந்திருக்கிறது என்று சொன்னோம். அந்த வெற்றியின் அளவை நிர்ணயித்து இவ்வளவுதான் என்று சொல்லுவது அவ்வளவு எளிதன்று.

ஆனால் மேற்படி தேர்தல்களில் கம்யூனிஸ்டுக் கட்சி படுதோல்வி அடைந்திருக்கிறது என்பது பற்றி யாதொரு சந்தேகமும் இல்லை.

காங்கிரஸ் கட்சிக்குத் திட்டவட்டமான வெற்றி கிட்டாத இடங்களிலே பெரும்பாலும் சுயேச்சையாளர்கள் வெற்றி அடைந்திருக்கிறார்கள். (இவர்களில் பலர் பின்னால் காங்கிரசில் சேர்வதற்கு ஆர்வம் தெரிவித்திருக்கிறார்கள்.)

மற்ற அரசியல் கட்சிகளும் குறிப்பிடத் தக்க வெற்றி அடையவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சியோ குறிப்பிடத் தக்க விதத்தில் தோல்வி அடைந்திருக்கிறது.

சென்ற பொதுத் தேர்தலில் வென்ற பிரபல கம்யூனிஸ்ட் அபேட்சகர்கள் அனைவரும் வெற்றி அடைந்தார்கள்.

இந்த நகரசபைத் தேர்தலிலோ, போட்டியிட்ட பிரபல கம்யூனிஸ்ட் அபேட்சகர்கள் அனைவரும் தோல்வி அடைந்திருக்கிறார்கள்.

ஆந்திர தேசத்திலேயுங்கூடக் கம்யூனிஸ்ட் அபேட்சகர்கள் முறியடிக்கப் பட்டிருக்கிறார்கள்.

நிலைமையில் இத்தகைய மாறுதல் ஏற்பட்டதற்கு முக்கிய காரணம் இம்மாகாணத்தில் ராஜாஜியின் நல்லரசாட்சி ஏற்பட்டு நடந்து வருவதுதான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

அதைத் தவிர முக்கியமான துணைக் காரணம் ஒன்றும் உண்டு. அதை முன்னதாகவே நாம் எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

வெற்றி வெறி தலைக்கு ஏறிய கம்யூனிஸ்ட் தலைவர்களும் அவர்களுடைய புதுமைத் தோழர்களும் பிரசங்க மேடைகளில் மிகக் கீழ்த்தரமான வசைத் தமிழைக் கையாண்டார்கள். மதிப்புக்குரிய தேசத் தலைவர்களை "அடா, புடா" என்று டகரப் பிரயோகம் செய்து குறிப்பிட்டார்கள். 'நாய், பேய்' என்றும் திட்டினார்கள். மேடையிலே காறி உமிழும் கைங்கர்யமும் செய்தார்கள்

மேடைப்பேச்சில் கையாண்ட கேவல முறையை அவர்களும் அவர்களுடைய கூட்டணிகளும் நடத்திய பத்திரிகைகளிலும் கடைப்பிடித்தார்கள்.

"தமிழ் மக்கள் பண்பாடு மிக்கவர்கள். இத்தகைய இழிவான பேச்சையும் எழுத்தையும் பொறுக்க மாட்டார்கள்" என்று அப்போதே நாம் எடுத்துக் காட்டினோம்.

ஸ்ரீ ராமசாமிப் பெரியாரும் சென்னைக் கடற்கரையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பகிரங்கமாக எச்சரிக்கை செய்தார். "காங்கிரஸ் தலைவர்களைப் பற்றி நாயே, பேயே என்றெல்லாம் பேசக் கூடாது. காங்கிரஸைச் சேர்ந்தவர்களிலும் சிலர் அம்மாதிரி நம்மைப் பற்றிப் பேசத் தொடங்குவார்கள். மொத்தத்தில் பொது வாழ்க்கையே கேடு அடைந்து விடும்!" என்று பெரியார் தெளிவாக எடுத்துச் சொன்னார்.

ஆயினும் அவருடைய எச்சரிக்கையை அச்சமயம் அவரைக் 'காரல் மாக்ஸ்' என்று போற்றிய கம்யூனிஸ்டுகள் பொருட் படுத்தவில்லை.

பின்னர் ஸ்ரீ ராமசாமிப் பெரியாரே அவர்களைக் கைவிட்டுப் போய்விட்டார்.

நகரசபைத் தேர்தல்களில் கம்யூனிஸ்டுகளின் பெருஞ் சரிவுக்கு அவர்கள் மேடையிலும் பத்திரிகைகளிலும் கையாண்ட கீழ்த்தர வசைமொழிப் பிரயோகம் ஒரு முக்கிய காரணம் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. காங்கிரஸ் பிரசாரகர்களுக்கும் மற்ற யோக்கியமான அரசியல் கட்சிக்காரர்களுக்கும் இது ஓர் எச்சரிக்கையாகப் பயன்படுமாக.

கட்சிகளையும் கொள்கைகளையும் எதிர்த்துத் தாக்கிப் பேசட்டும். வாதப் பிரதிவாதங்கள் நடத்தட்டும். தனிப்பட்ட நபர்களையும் தலைவர்களையும் அவர்களுடைய காரியங்களைக் குறிப்பிட்டுக் கண்டனம் செய்யட்டும்.

ஆனால் கீழ்த்தர ஆபாச மொழிப் பிரயோகங்களில் இறங்கித் தமிழ் மக்களின் உயர்ந்த பண்பாட்டைக் கெடுக்க முயல வேண்டாம்.

தமிழ் நாட்டில் அத்தகைய முயற்சிகளில் இறங்குவோர் எதிரிகளுக்கு உண்டாக்கும் தீங்கைக் காட்டிலும் தங்களுக்கே அதிக கேட்டை விளைவித்துக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

அறுபது வயதான வாலிபர் ஆர். கே. எஸ்.

ஸ்ரீ ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களுக்கு அறுபது வயது ஆகிறது என்பதை நம்புவது கடினமாயிருக்கிறது. பல இடங்களில் விழாக் கொண்டாடப் பட்டிருப்பதாலும், கோவையில் நடந்த கூட்டத்தில் ஸ்ரீ ஆர். கே. சண்முகம் செட்டியாரே விஜயம் செய்து வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டிருப்பதாலும் நம்ப வேண்டியதாகி யிருக்கிறது.

ஸ்ரீ ஆர். கே. சண்முகம் செட்டியார் தமிழ் அன்னையின் செல்வப் புதல்வர்களில் ஒருவர். கல்வியும் செல்வமும் அறிவும் ஆற்றலும் வாக்கு வன்மையும் செயல் திறமையும் ஒருங்கே பெற்றவர். செல்வர்கள், ஏழைகள், படித்தவர்கள், பாமரர்கள் அனைவருடைய அபிமானத்துக்கும் உகந்தவர். பிறந்த ஊரில் பிரபலமடைந்திருப்பது போலவே பரந்த உலகத்திலும் தம் புகழை நிலை நாட்டியவர்.

ஆங்கில மொழியை நன்கு பயின்று ஆங்கிலேயரும் பிரமிக்கும் வண்ணம் அந்த மொழியைக் கையாளும் ஆற்றல் படைத்தவர் ஸ்ரீ ஆர். கே. சண்முகம் செட்டியார். இவ்விதம் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் பலர் ஆங்கில மொழிக்கே தங்களை சுவீகார புத்திரர்களாக அர்ப்பணம் செய்து விடுவது வழக்கம். அவ்விதமின்றி ஸ்ரீ ஆர். கே. சண்முகம் ஆங்கிலத்தில் எவ்வளவு தேர்ச்சி பெற்றிருந்தாலும் அதை அன்னிய மொழியாகவே கருதி, தமிழ்த் தாயினிடம் சளியாத பக்தி செலுத்தி வருகிறவர். எழுத்தினாலும் பேச்சினாலும் தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்து வந்திருக்கிறார். பிரசங்க மேடையில் ஆங்கிலத்தைக் காட்டிலும் ரஸமாகவும் லாகவமாகவும் தமிழைக் கையாள முடியும் என்பதை நிரூபித்து வருகிறார். ஸ்ரீ ஆர். கே. சண்முகம் தமிழில் பேசும்போது

அவருடன் கருத்து வேற்றுமை கொண்டவர்களும் கேட்டு ரஸிக்கும்படி யிருக்கும்.

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

என்ற திருவள்ளுவரின் வாக்குக்கு ஸ்ரீ ஆர். கே. சண்முகம் செட்டியாரின் தமிழ்ச் சொற்பொழிவு தகுந்த உதாரணமாகும்.

சமீபகாலத்தில் தமிழிசை இயக்கத்துக்கும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் ஸ்ரீ ஆர். கே. சண்முகம் இயற்றியிருக்கும் தொண்டுகள் தமிழர் அனைவரும் அறிந்தவையாகும்.

அரசியல் துறையில் ஸ்ரீ ஆர். கே. சண்முகத்தின் தொண்டு அவ்வப்போது தடைப்பட்டு வந்திருக்கிறது. அரசாங்கத்தில் மிக உன்னதமான பதவிகளை அவர் வகித்திருக்கிறார். பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இந்திய சட்டசபையின் அக்ராசன பீடத்தில் அமர்ந்திருந்து அனைவரும் வியக்கும்படி பணி ஆற்றினார். சுதந்திர இந்திய அரசாங்கத்தில் பிரதம மந்திரி ஸ்தானத்துக்கு அடுத்த படியான பொக்கிஷ மந்திரி பதவியைச் சில காலம் புகழுடன் வகித்தார்.

இன்றைக்குக் கல்வித் துறையில் ஈடுபட்டு அண்ணாமலை சர்வகலாசாலையின் உப அத்தியட்சகர் பதவியை வகித்து வருகிறார்.

வருங்காலத்தில் பாரத நாட்டுக்கும் தமிழ் அன்னைக்கும் ஸ்ரீ ஆர். கே. சண்முகம் இன்னும் எவ்வளவோ அரும்பெரும் தொண்டுகள் செய்யக் கூடும். அதற்கு வேண்டிய ஆற்றல் அவரிடம் பரிபூரணமாக நிறைந்து இருக்கிறது. சந்தர்ப்பங்களும் அவரைத் தேடி வரும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

ஸ்ரீ ஆர். கே. சண்முகம் அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் தேக நலத்தையும் மனோ திடத்தையும் அருளுமாறு இறைவனை வேண்டுகிறோம்.

விவசாயக் கட்டுரைக்கு நூறு ரூபாய் பரிசு!

இந்தக் "கல்கி" இதழில் மற்றொரு பகுதியில் "விவசாயத்தில் சில விந்தைகள்" என்ற கட்டுரை வெளியாகியிருக்கிறது. சென்னைக்கு வடக்கே திருவள்ளூர் போகும் சாலையில் உள்ள கொத்தம்பாக்கம் என்னும் கிராமத்தில் ஒரு விவசாயியின் சாதனைகளைப் பற்றி அதில் விவரித்திருக்கிறது.

அக் கட்டுரையைப் படித்து, அதே முறையில், வேறு இடங்களில் நடந்திருக்கும் விவசாய சாதனைகளைப் பற்றி எழுதுமாறு விவசாயத்தில் அக்கறையுள்ள நேயர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

விவசாயத் தொழிலின் மேன்மையைக் குறித்தோ அவசியத்தைக் குறித்தோ எழுதப்படும் வெறும் ஏட்டுச் சுரைக்காய்க் கட்டுரைகள் தேவையில்லை.

நன்செய், புன்செய் காய்கறி, பழத்தோட்டம் ஆகிய பல்வேறு விவசாயத் துறைகளில் காரியாம்சத்தில் நடந்திருக்கும் உண்மையான சாதனைகளைப் பற்றிய கட்டுரைகளே தேவை.

அத்தகைய கட்டுரைகள் மற்ற விவசாயிகளுக்கு உபயோகப்படக் கூடிய யோசனைகளுடனும் புள்ளி விவரங்களுடனும் இருக்க வேண்டும்.

அதே சமயத்தில் வாசகர்கள் சுவையுடன் படிக்குமாறும் அமைந்திருக்க வேண்டும்.

சில விவசாயிகள் தங்கள் நிலங்களில் அதிகமாக நெல்லும் மற்ற தானியங்களும் விளைவித்துச் சர்க்காரிடம் பரிசு பெற்றிருக்கிறார்கள்.

பரிசு பெற்றவர்கள் தங்களுடைய சொந்த அனுபவங்களை வைத்துக் கொண்டு கட்டுரை எழுதலாம். அல்லது பக்கத்தில் உள்ளவர்கள் அந்தகைய பரிசு பெற்ற விவசாயிகளைக் கண்டு அவர்களுடைய சாதனைகளைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டு எழுதலாம்.

கட்டுரைகள் நவம்பர் மாதம் 30-ம் தேதிக்குள் காரியாலயத்துக்கு வந்து சேரவேண்டும்.

மேற்படி தேதிக்குள் வரும் விவசாய சாதனைக் கட்டுரைகளில் மிகச் சிறந்த கட்டுரைக்கு நூறு ரூபாயும், அடுத்தபடியாக நல்ல கட்டுரைக்கு ஐம்பது ரூபாயும் பரிசு வழங்கப்படும்.

மற்றப்படி பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் கட்டுரை ஒவ்வொன்றுக்கும் பதினைந்து ரூபாய் சன்மானம் அளிக்கப்படும்.

இந்தப் போட்டிக்கு அனுப்பப்படும் கட்டுரைகளின் மேல் உறையில் 'விவசாய சாதனைக் கட்டுரை' என்று குறிப்பிடக் கோருகிறோம்.

அட்டைப்பட விளக்கம்


தமிழில் எத்தனையோ காவியங்கள் இருக்கின்றன. அந்தக் காவியங்களில் எத்தனையோ மாதரசிகள் வருவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் திறமை மிக்கவர்களாக இருப்பார்கள். ஒருத்தி நாட்டியத்தில் திறமை மிக்கவளாக இருந்தால், இன்னொருத்தி வீணை வாசிப்பதில் திறமை மிக்கவளாக இருப்பாள்.

பெருங் கதை என்னும் காவியத்தில் இராசனை என்னும் ஒரு பெண்ணரசி வருகிறாள். மகத நாட்டுக் குறுநில மன்னனான சுதன்மன் என்பவனுடைய புதல்வி. இவள் பந்து ஆடுவதில் மிகவும் தேர்ச்சி பெற்றவளாம். அவளுடைய தேர்ச்சியைப் பற்றிப் பெருங்கதை பின்வருமாறு வர்ணிக்கிறது:—

"வண்ண மேகலை வளையொடு சிலம்பப்
பாடகக் கால்மிசைப் பரிந்தவை விடுத்தும்
சூடக முன்கையிற் சுழன்றுமா றடித்தும்
அடித்த பந்துகள் அங்கையின் அடக்கியும்
மறித்துந் தட்டியும் தனித்தனி போக்கியும்"

விளையாடக் கூடியவளான அந்தப் பெண்ணரசியை வீரன் ஒருவன் பொழிலிடைச் சந்திக்கிறான். அப்போது ஒருவரைக் கண்டு ஒருவர் காதல் கொள்கின்றனர்.

அக் காட்சியை நம் சித்திரக்காரர் இந்த இதழ் அட்டைப்படச் சித்திரமாகத் தீட்டியிருக்கிறார்.


மேனி அழகிற்கும்
யௌவன
எழிலுக்கும்
SWASTIK
KANTI TOILET SOAP
KANTI
காந்தி
தரத்தில் சிறந்த ஸோப்
அளவில் பெரிய ஸோப்
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், வடாலா, பம்பாய்.
SOM 176-Tamil

பொன்னியின் செல்வன்

கல்கி

அத்தியாயம் 12

வேல் முறிந்தது!

கந்தமாறன் அவனுடைய அருமை நண்பனாயிருந்த வந்தியத்தேவன் மீது கூறிய குற்றச் சாட்டைக் கேட்டு ஆதித்த கரிகாலன் இடி இடி என்று உடல் குலுங்கச் சிரித்தான்.

"கந்தமாறா! வந்தியத்தேவன் உன் முதுகில் குத்தி விட்டான் என்றா சொல்லுகிறாய்? நீ என்னத்திற்காக அவனுக்கு முதுகு காட்டினாய்?" என்று கேட்டு விட்டு மறுபடியும் குலுங்கக் குலுங்கச் சிரிக்கத் தொடங்கினான்.

கந்தமாறனுடைய கரிய முகம் சிவந்தது. கண்கள் கோவைப் பழம்போலாயின. உதடுகள் துடித்தன.

"ஐயா! தாங்கள் இதைச் சிரிக்கக் கூடிய விஷயமாகக் கருதுகிறீர்களா?" என்று கேட்டான்.

"கந்தமாறா! நான் சிரிக்கக் கூடாது என்று சொல்லுகிறாயா? சிரிப்பு என்பது மனிதர்களுக்குத் தெய்வம் கொடுத்திருக்கும் ஒரு வரப்பிரஸாதம். மாடு சிரிக்காது; ஆடு சிரிக்காது; குதிரை சிரிக்காது; சிங்கம் சிரிக்காது; வேடிக்கை விளையாட்டுகளில் மிக்க பிரியம் உள்ள குரங்குகள் கூடச் சிரிப்பதில்லை. மனித ஜன்மம் எடுத்தவர்கள் மட்டுந்தான் சிரிக்க முடியும். அப்படியிருக்க, நீ என்னைச் சிரிக்கக் கூடாது என்கிறாயே? நான்கூடச் சிரித்து ரொம்ப காலமாயிற்று, நண்பா! இப்போது நான் சிரிக்கும் சத்தத்தைக் கேட்டு எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. நீ என்னைப் பார்த்துச் சிரிக்கக் கூடாது என்கிறாயே?" என்றான் ஆதித்தகரிகாலன்.

"ஐயா! தாங்கள் சிரித்து மகிழ்வது பற்றி எனக்கும் சந்தோஷந்தான்! ஆனால் நான் இந்தச் சூராதி சூரனுக்கு முதுகு காட்டியதாக எண்ணிக் கொண்டு சிரிக்க வேண்டாம். நான் எதிர்பாராத சமயத்தில் பின்னால் மறைந்திருந்து இவன் என்னைக் குத்தினான். துர்க்கா தேவியின் அருளாலும் நந்தினி தேவியின் அன்பான சிகிச்சையினாலுமே நான் பிழைத்து எழுந்து வந்தேன். இவன் செய்த அந்தத் துரோகச் செயலைக் குறித்துத் தாங்கள் விசாரித்து நியாயம் செய்யுங்கள். அல்லது நானே இவனைத் தண்டிப்பதற்கு எனக்கு உடனே அதிகாரம் கொடுங்கள்!" என்றான் கந்தமாறன்.

"நண்பனே! நானே அவசியம் விசாரித்து நியாயம் வழங்குகிறேன். செம்பியன் குலத்து மன்னர்களிடம் ஒருவன் நியாயம் கேட்டு, அவனுக்கு நியாயம் கிட்டவில்லை என்ற பேச்சு இதுவரையிலே கிடையாது. எங்கள் பரம்பரையின் ஆதி மன்னனாகிய சிபி புறாவுக்கு நியாயம் வழங்குவதற்காகத் தன் சதையைத் துண்டு துண்டாக வெட்டிக் கொடுக்கவில்லையா? எங்கள் குலத்தைச் சேர்ந்த மனுநீதிச் சோழன் பசுவுக்கு நியாயம் வழங்குவதற்காகத் தன் குமாரனையே பலி கொடுக்கவில்லையா! நீ புறாவைவிட, பசுவைவிட, மட்டமானவன் அல்ல. உனக்கு நான் நியாயம் வழங்க மறுக்க மாட்டேன். இவனை நான் விசாரிக்கும் வரையில் பொறுமையாயிரு! வல்லவரையா! உன் பிரயாணத்தைப் பற்றிய மற்ற விவரங்களைச் சொல்வதற்கு முன்னால், கந்தமாறனுடைய குற்றச் சாட்டுக்கு நீ மறுமொழி சொல்லி விடுவது நல்லது. என்ன சொல்லுகிறாய்? இவனை நீ பின்னாலிருந்து முதுகில் குத்தியது

உண்மையா? அப்படியானால், அத்தகைய வீரலட்சணமில்லாத நீசத்தனமான காரியத்தை ஏன் செய்தாய்? எதற்காகச் செய்தாய்?" என்று கேட்டான்.

"இளவரசே! நான் இந்த வீராதி வீரனைக் குத்தவும் இல்லை; முதுகில் குத்தவும் இல்லை; அதுவும் பின்னால் நின்று முதுகில் குத்தவும் இல்லை. முதுகில் குத்தப்பட்டு நினைவிழந்து இரத்த வெள்ளத்தில் கிடந்தவனைத் தோளில் தூக்கிக் கொண்டுபோய்ச் சேந்தன் அமுதன் வீட்டில் போட்டுக் காப்பாற்றினேன். ஆனால் அப்படி இவன் உயிரைக் காப்பாற்றியதற்காக நான் இப்போது வருத்தப்படுகிறேன். இவனை மார்பிலே குத்திக் கொல்லாமற் போனேனே என்று பச்சாத்தாபப் படுகிறேன். சிநேக தர்மத்தை முன்னிட்டு என் அரசருக்குச் செய்யவேண்டிய கடமையைப் புறக்கணித்து விட்டேன். ஐயா! இவன் என்னைச் சிநேகத் துரோகி என்று சொன்னான். ஆனால் இவன் சிநேகத் துரோகி மட்டுமல்ல; எஜமானத் துரோகி. இவன் முதுகில் குத்தப்பட்டது எங்கே, எந்த சந்தர்ப்பத்தில் என்று கேளுங்கள்! தஞ்சாவூர்க் கோட்டையின் இரகசிய சுரங்க வழியாக இவன் யாரைப் பழுவேட்டரையர் அரண்மனையில் கொண்டு போய் விட்டுத் திரும்பினான் என்று கேளுங்கள். பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷ நிலவறையில் இவன் அன்றிரவு யாரைப் பார்த்தான் என்று கேளுங்கள். ஆடி மாதம் பதினெட்டாம் பெருக்கு தினத்தில் இவனுடைய கடம்பூர் மாளிகையில் என்ன நடந்தது என்று கேளுங்கள். அன்றைக்கு அங்கே மூடு பல்லக்கிலே மறைந்து கொண்டு வந்தது யார் என்று கேளுங்கள்!"

இந்தச் சமயத்தில் கந்தமாறன், உடல் நடுங்க, நாக்குழற, "அடே! அற்பப் பயலே! நிறுத்து உன் அபத்தப் பேச்சை! இல்லாவிட்டால் இதோ இந்த வேலுக்கு இரையாவாய்!" என்று கூறி வேலைக் கையில் எடுத்தான்.

ஆதித்த கரிகாலன் அவனுடைய படபடப்பைக் கண்டு சிறிது வியப்படைந்தான். கந்தமாறனுடைய கையிலிருந்த வேலைப் பிடுங்கித் தனது இரும்பையொத்த கரங்களினால் அதன் அடிக்காம்பை வளைத்தான். வேல் படார் என்று முறிந்தது. அதன் இரு பகுதிகளையும் ஆதித்த கரிகாலன் வீசித் தூர எறிந்துவிட்டு, "ஜாக்கிரதை! என் சிநேகிதர்கள் என் முன்னாலேயே சண்டையிடுவதை நான் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது...பார்த்திபேந்திரா! இவர்களில் யாராவது இனி வேலையோ, வாளையோ, கையில் எடுத்தால் உடனே அவனைச் சிறைப் படுத்துவது உன் பொறுப்பு!" என்றான்.

உடனே வந்தியத் தேவன் தன்னிடமிருந்த வாளை எடுத்துப் பார்த்திபேந்திரனிடம் கொடுத்தான். பார்த்திபேந்திரனும் வேண்டா வெறுப்பாக அந்த வாளைப் பெற்றுக் கொண்டான்.

"கந்தமாறா! உன்னுடைய குற்றச்சாட்டுக்கு வல்லவரையன் மறுமொழி கூறினான். அதன் உண்மையைக் குறித்து நானே சாவகாசமாக விசாரித்துத் தீர்ப்புக் கூறுகிறேன். அவன் கேட்ட கேள்விகளுக்கு நீ விடை சொல்லப் போகிறாயா?" என்று கரிகாலன் கேட்டான்.

கந்தமாறன் தட்டுத் தடுமாறி மென்று விழுங்கிக் கொண்டு, "ஐயா! அந்த விஷயங்களைப் பற்றி நான் யாரிடமும்



சொல்லுவதில்லை என்று சத்தியம் செய் திருக்கிறேன்'' என்றான்.

பார்த்திபேந்திரன் இப்போது தலை யிட்டு, ''அரசே! இவர்கள் ஒருவரை யொருவர் குற்றம் சாட்டுவது ஏதோ பெண்ணைப் பற்றிய விஷயமாகக் காண் கிறது. ஆகையால் இவர்களைத் தனித் தனியாகக் கேட்டுத் தெரிந்து கொள்வது நலம்!'' என்றான்.

''ஆம், பார்த்திபா! நானும் அப்படித் தான் கருதுகிறேன். நீங்கள் மூன்று பேரும் தனித்தனியாகப் பழுவூர் இளைய ராணியைப் பார்த்து அவளுடைய மோக வலையில் விழுந்திருக்கிறீர்கள். ஆகை யினால்தான் ஒருவரை ஒருவர் விழுங்கி விடப் பார்க்கிறீர்கள்!'' என்று கரிகாலர் கூறிவிட்டு மறுபடியும் சிரித்தார்.

பார்த்திபேந்திரனுடைய முகம் சிறுங் கியது. அவன், ''பிரபு! தாங்கள் இன் றைக்கு எந்த முக்கிய விஷயத்தையும் இலேசாகக் கருதிச் சிரிக்கத் தீர்மானித் திருப்பதாகத் தெரிகிறது. நல்லது! நானும் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறேன். இந்த வந்தியத் தேவன் பேரில் எனக்கும் பல சந்தேகங்கள் இருக்கின்றன. முக்கியமானதை மட்டும் இப்போது சொல்லுகிறேன். இவனைத் தீப்பிடித்த கப்பலிலிருந்து காப்பாற்றுவ தற்காகவே தங்கள் அருமைச் சகோதரர் நடுக்கடலில் கடும் புயலில் குதித்தார்.



பிறகு பொன்னியின் செல்வரைக் காணவே இல்லை. இவன் மட்டும் அன்றிருந்த மேனிக்கு அழிவில்லாமல் கொட்டாப் புளியைப் போல் இங்கே வந்து முளைத்திருக்கிறான். தங்கள் சகோதரர் என்ன ஆனார் என்று இவனைக் கேளுங்கள். அவரைக் கடல் கொண்டிருந்தால் அதற்கு இந்தப் பாதகனே காரணமாவான்!" என்றான்.

கரிகாலர் வந்தியத்தேவனைப் பார்த்து, "இதற்கு என்ன மறுமொழி சொல்லுகிறாய்?" என்று கேட்டார்.

"ஐயா! நான் இவருடைய கேள்விக்கு மறுமொழி சொல்லுவதற்கு முன்னால், இவர் ஒரு கேள்விக்கு விடை சொல்லட்டும். பொன்னியின் செல்வரை இலங்கையிலிருந்து இவர்தான் தம்முடைய கப்பலில் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். முதன் மந்திரி அநிருத்தரும் சேனாபதி பூதிவிக்கிரம கேசரியும் இலங்கையிலேயே இருக்கும்படி பொன்னியின் செல்வரைக் கேட்டுக் கொண்டார்கள். ஆயினும் தமையன் கட்டளையைப் பெரிதாய் மதித்து இளவரசர் இவருடைய கப்பலில் ஏறிக் கிளம்பினார். அவரை ஏன் இவர் பத்திரமாகத் தங்களிடம் கொண்டு வந்து சேர்க்கவில்லை? நடுக்கடலில் பொன்னியின் செல்வர் குதித்த போது இவர் ஏன் பார்த்துக் கொண்டு நின்றார்? ஏன் இளவரசரைத் தடுக்கவில்லை? ஏழையும் அநாதையுமான என்னைக் காப்பாற்றுவதற்காக பொன்னியின் செல்வர் தம் உயிருக்குத் துணிந்து இறங்கினாரே! வீர பல்லவ குலத்தின் தோன்றலாகிய இவரும் இவருடைய ஆட்களும் இளவரசரைப் பாதுகாப்பதற்காக ஏன் கடலில் குதிக்கவில்லை? அவரைக் கடல் கொண்டு போவதை வேடிக்கை என்று எண்ணிப் பார்த்துக் கொண்டு நின்றார்களா?......"

பார்த்திபேந்திரனுடைய முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. அவனுடைய கைகள் துடித்தன; உதடுகளும் துடித்தன; உடல் ஆடியது.

"ஐயா! இந்த மூடன் என் மீது குற்றம் சுமத்துகிறான் என்று தோன்றுகிறது. இளவரசரை நானே கொன்று விட்டேன் என்று கூடச் சொல்லுவான் போலிருக்கிறது. இதை நான் ஒரு கணமும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது!" என்றான்.

கரிகாலன் அவனை உற்று நோக்கி, "பார்த்திபா! நான் தான் சொன்னேனே? என் அருமைத் தோழர்களாகிய நீங்கள் மூன்று பேரும் ஒருவரையொருவர் கடித்துத் தின்றுவிடும் நிலைக்கு வந்து விட்டீர்கள். இதற்கெல்லாம் நான் உங்கள் பேரில் குற்றம் சொல்லவில்லை. அந்தப் பழுவூர் ராணியின் சக்தி அப்படிப்பட்டது என்பதை நானே உணர்ந்திருக்கிறேன். நீயும் கந்தமாறனும் குதிரை மீது ஏறிச் சற்று முன்னால் மெதுவாகப் போய்க் கொண்டிருங்கள். இவனுடைய பிரயாண விவரங்களைக் கேட்டுக் கொண்டு நான் சற்றுப் பின்னால் வருகிறேன். உங்கள் குற்றச் சாட்டுகளைப் பற்றி விசாரித்து உண்மையைக் கண்டு பிடிக்கிறேன். ஆனால் ஒன்று நிச்சயமாய் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் மூன்று பேரும் சிநேகமாக இருந்தே தீர வேண்டும். ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டீர்களானால், அதைக் காட்டிலும் எனக்கு அதிருப்தி உண்டாக்குவது வேறொன்றுமிராது!"

பார்த்திபேந்திரனும் கந்தமாறனும் வேறு வழி இன்றித் தத்தம் குதிரைமீது ஏறி முன்னால் சென்றார்கள்.

அப்போது ஆழ்வார்க்கடியான் வந்தியத் தேவன் அருகில் வந்து அவன் காதோடு "அப்பனே! நீ வெகு கெட்டிக்காரனாகி விட்டாய்! பொய்யும் சொல்லாமல் உண்மையையும் வெளியிடாமல் வெகு சாமர்த்தியமாகப் பேசித் தப்பித்துக் கொண்டாய்!" என்றான்.

அப்போதுதான் ஆதித்த கரிகாலன் பார்வை அங்கு வந்த ஆழ்வார்க்கடியான் மீது விழுந்தது.

"ஓகோ! இவன் யார்? எப்போதோ, எங்கேயோ பார்த்த முகமாக இருக்கிறதே!" என்று கேட்டான்.

"ஆம், அரசே! சில ஆண்டுகளுக்கு முன்பு என்னைப் பார்த்திருக்கிறீர்கள்!"

"உன் குரல் கூடக் கேட்ட குரலாகத் தானிருக்கிறது."

"ஆம், ஐயா! மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மிக முக்கியமான ஒரு தருணத்தில் என் குரலைக் கேட்டீர்கள்......"

ஆதித்த கரிகாலரின் முகத்தில் திடீரென்று ஒரு கரிய நிழல் வேகமாகப் படர்வது போலிருந்தது.

"மூன்று ஆண்டுகளுக்கு முன்னால்... முக்கியமான தருணம்...அது என்ன?... வைகை நதித் தீவில் பகைவனைத் தேடி அலைந்தபோது நான் கேட்ட குரலா? அப்படியும் இருக்க முடியுமா?"

"அந்தக் குரல் என் குரல்தான், அரசே! பகைவன் ஒளிந்திருந்த இடத்தைத் தங்களுக்கு மரத்தின் மறைவிலிருந்து சொன்னவன் நான்தான்!"

"ஆகா! என்ன பயங்கரமான தினம் அது? அன்றைக்கு எனக்குப் பிடித்திருந்த வெறியை நினைத்தால் இன்று கூட உடல் நடுங்குகிறது. வைஷ்ணவனே! நீ ஏன் அன்று காட்டில் மறைந்திருந்தாய்? எதற்காக உன்னை அசரீரியாக மாற்றிக் கொண்டாய்?"

"அரசே! சற்று முன் தாங்களே சொன்னீர்களே! தங்களுக்கு அன்று பிடித்திருந்த வெறியைப் பற்றி! எதிரில் கண்டவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்திக் கொண்டு போனீர்கள். சில காலம் நான் உயிர் வாழ விரும்பினேன்......"

"அது மட்டுந்தானா காரணம்? 'அசரீரி வெளி வந்து எனக்கு வழி காட்டட்டும்' என்று எவ்வளவோ முறை தொண்டை வலிக்கக் கூவினேனே? அப்போதும் நீ, ஏன் வெளி வரவில்லை?"

"நான் வளர்த்த சகோதரி—இப்பொழுது பழுவூர் இளையராணி—அவளுடைய தீராத கோபத்துக்கு ஆளாக நான் விரும்பவில்லை......"

"அவளுடைய தீராத கோபத்துக்கு நான் மட்டும் ஆளாகட்டும் என்று எண்ணினாயாக்கும்! அட சண்டாளா!" என்று கூறி ஆதித்த கரிகாலர் இடையிலிருந்த கத்தியை உருவினார்.

வந்தியத் தேவன் பயந்து போனான். ஆழ்வார்க்கடியானுடைய வாழ்வு அன்றோடு முடிந்தது என்றே எண்ணினான். மிக்க தயக்கத்துடன் "ஐயா! இந்த வைஷ்ணவன் முதன்மந்திரியிடமிருந்து வந்திருக்கிறான். இவன் கொண்டு வந்த செய்தியைக் கேட்டுக் கொண்டு பிறகு இவனைத் தண்டியுங்கள்!" என்றான்.

"ஆகா! இவனைத் தண்டித்து என்ன பிரயோஜனம்? இனி யாரைத் தண்டித்து என்ன பயன்?" என்று கூறிக் கரிகாலன் கத்தியை உறையில் போட்டான்.

கரிகாலரின் கோபத்தைக் கண்டு வந்தியத்தேவன் பயந்ததுபோல் ஆழ்வார்க்கடியான் பயந்ததாகத் தெரியவில்லை. முகத்தில் விசித்திரமான புன்னகையுடன், "அரசே! தங்கள் கோபத்தை என்பேரில் திருப்புவீர்கள் என்று எண்ணித்தான் இத்தனை நாளும் தங்களை நான் நேரில் சந்திக்காமலிருந்தேன். என் பேரில் என் சகோதரி கொண்ட கோபமும் இன்னும் தீரவில்லை. இன்று வரையில் என்னைப் பார்ப்பதற்குப் பிடிவாதமாக மறுத்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் தங்கள் பேரில் அவளுடைய கோபம் தீர்ந்துவிட்டதாகக் காண்கிறது நந்தினி தேவியின் அன்பான திருமுக ஓலையைப் பார்த்து விட்டுத்தானே தாங்கள் கடம்பூர் அரண்மனைக்கு விருந்துக்குப் புறப்பட்டீர்கள்?" என்றான்.

"ஆகா! துஷ்ட வைஷ்ணவனே! அது உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கரிகாலன் கேட்டான்.

"ஐயா! முதன் மந்திரி அநிருத்தன் பணியாளன் நான். முதன் மந்திரிக்குத் தெரியாமல் இந்தச் சோழ ராஜ்யத்தில் எந்தச் சிறிய காரியமும் நடக்க முடியாது" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"பார்த்துக்கொண்டே இரு! ஒருநாள் அந்த அன்பில் அநிருத்தனையும் உன்னையும் சேர்த்துத் தேசப் பிரஷ்டம் செய்து விடுகிறேன்! ...... இப்போது இருவரும் குதிரைமீது ஏறிக் கொள்ளுங்கள்! என் இரு பக்கத்திலும் வந்து கொண்டிருங்கள். பேசிக் கொண்டே போகலாம்" என்றான் ஆதித்த கரிகாலன்.

அத்தியாயம் 13

மணிமேகலையின் அந்தரங்கம்

கடம்பூர் மாளிகையின் விருந்தினர் பகுதியில், விசேஷமாக அலங்கரிக்கப்பட்டிருந்த அந்தப்புரத்து அறையில், சப்ரமஞ்சக் கட்டிலில் நந்தினி சாய்ந்து கொண்டிருந்தாள். அவளும் அன்றைக்கு மிக நன்றாக அலங்கரித்துக் கொண்டு விளங்கினாள். அவளுடைய முகம் என்றுமில்லாத எழிலுடன் அன்று திகழ்ந்தது. அவள் பகற் கனவு கண்டு கொண்டிருக்கிறாள் என்பது அவளுடைய பாதி மூடிய கண்களிலிருந்து தெரிந்தது. கண்களின் கரிய இமைகள் மூடித் திறக்கும் போதெல்லாம் விழிகளிலிருந்து மின்னலைப் போன்ற காந்த ஒளிக் கிரணங்கள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. இதிலிருந்து அவள் பார்ப்பதற்கு அரைத் தூக்கத்தில் இருப்பதாகத் தோன்றினாலும் அவளுடைய உள்ளம் உத்வேகத்துடன் சிந்தித்துக் கொண்டிருந்தது என்பது நன்றாகப் புலனாயிற்று.

இன்னும் சிறிது கூர்ந்து கவனித்துப் பார்த்தால், அவளுடைய பாதி மூடிய கண்களின் பார்வை அந்த அறையின் ஒரு பக்கத்தில் அகிற் குண்டத்திலிருந்து கிளம்பிக் கொண்டிருந்த புகைத் திரளின் மீது சென்றிருந்தது என்பதை அறியலாம். குண்டத்திலிருந்து புகை திரளாகக் கிளம்பிச் சுழி சுழியாக வட்டமிட்டுக் கொண்டு மேலே போய்ச் சிதறிப் பரவிக் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போய்க் கொண்டிருந்தது. அந்த அகிற் புகைச் சுழிகளிலே நந்தினி என்னென்ன காட்சிகளைக் கண்டாளோ, தெரியாது. திடீரென்று அவள் ஒரு பெரு மூச்சு விட்டாள். அவளுடைய பவள இதழ்கள் "ஆம், ஆம்! நான் கண்ட கனவுகள் எல்லாம் இந்தப் புகைத் திரளில் தோன்றும் சுழிகளைப் போலவே ஒன்றுமில்லாமல் போயின. இந்தப் புகைத் திரளாவது அருமையான நறு மணத்தைத் தனக்குப் பின்னால் விட்டு விட்டு மறைகிறது. என் கனவுகள் பின்னால் விட்டுப் போனவையெல்லாம் வேதனையும் துன்பமும் அவதூறும் அபகீர்த்தியுந்தான்!" என்று முணுமுணுத்தன.

அச்சமயம் "தேவி! தேவி! உள்ளே வரலாமா?" என்று மணிமேகலையின் மெல்லிய குரல் கேட்டது.

"வா, அம்மா, வா! உன்னுடைய வீட்டில் நீ வருவதற்கு என்னைக் கேட்பானேன்?" என்றாள் நந்தினி.

மணிமேகலை அந்தக் கதவைத் திறந்து கொண்டு மெள்ள நடந்துதான் வந்தாள். ஆனால் அவளுடைய முகத் தோற்றத்திலும் நடக்கும் நடையிலும் கையின் வீச்சிலும் உற்சாகம் ததும்பியபடியால் அவள் துள்ளிக் குதித்து ஆடிப் பாடிக் கொண்டு வருவதாகத் தோன்றியது.

நந்தினி சிறிது நிமிர்ந்து உட்கார்ந்து, கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த தந்த பீடத்தைக் காட்டி, அதில் மணிமேகலையை உட்காரச் சொன்னாள்.

மணிமேகலை உட்கார்ந்து கொண்டு, "தேவி! தங்களிடம் நான் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று என் தமையன் எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறான். தென் தேசத்தாரின் நாகரிகத்தைப் பற்றி ரொம்பவும் சொல்லியிருக்கிறான். கேட்காமல் கொள்ளாமல் திடீரென்று இன்னொருவர் அறைக்குள் நுழையக் கூடாது என்று தெரிவித்திருக்கிறான்!" என்றாள்.

"தென் தேசத்தாரும் அவர்களுடைய நாகரிகமும் நாசமாய்ப் போகட்டும். உன் அண்ணன் உனக்குச் சொல்லிக் கொடுத்ததையெல்லாம் உடனே மறந்துவிடு! என்னைத் 'தேவி' என்றோ 'மகா ராணி' என்றோ ஒருபோதும் கூப்பிடாதே! 'அக்கா!' என்று அழை!"

"அக்கா! அக்கா! அடிக்கடி உங்களிடம் நான் வந்து தொந்தரவு செய்வது உங்களுக்குக் கஷ்டமாயிராதல்லவா?"

"நீ அடிக்கடி வந்து தொந்தரவு செய்வது எனக்குக் கஷ்டமாய்த்தானிருக்கும்; என்னை விட்டுப் போகாமல் இங்கேயே இருந்து விட்டாயானால் ஒரு தொந்தரவும் இராது!" என்று கூறி நந்தினி புன்னகை புரிந்தாள்.

அந்தப் புன்னகையில் சொக்கிப் போன மணிமேகலை சற்று நேரம் நந்தினியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, "தங்களைப் போன்ற அழகியை நான் பார்த்ததே இல்லை. சித்திரங்களிலே கூடப் பார்த்ததில்லை" என்று சொன்னாள்.

"பெண்ணே! நீ வேறு என் மீது மோகம் கொண்டுவிடாதே! ஏற்கனவே நான் ஒரு 'மாய மோகினி' என்பதாக ஊரெல்லாம் பேச்சாயிருக்கிறது. என் பக்கத்தில் வரும் ஆண்பிள்ளைகளை மயக்கி விடுகிறேன் என்று என்னைப் பற்றி அவதூறு பேசுகிறார்கள்!......"

"அக்கா! அப்படி யாராவது அவதூறு பேசுவது என் காதில் மட்டும் விழுந்தால் அவர்களுடைய நாக்கை ஒட்ட அறுத்து விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பேன்!" என்றாள் மணிமேகலை.

"ஊராரைக் குற்றம் சொல்லுவதில் பயனில்லை, மணிமேகலை! நான் கிழவரைக் கலியாணம் செய்து கொண்டிருக்கிறேன் அல்லவா? அதனால் அப்படித்தான் பேசுவார்கள்!"

மணிமேகலையின் முகம் சுருங்கிற்று.

"ஆம், ஆம்! அதை நினைத்தால் எனக்குக் கூட வருத்தமாகத்தானிருக்கிறது. என் தமையனும் சொல்லிச் சொல்லி வருத்தப் பட்டான். அதற்காக ஒருவரைப் பற்றி கண்டபடி அவதூறு பேசலாமா, என்ன?......"

"பேசினால் பேசிக்கொண்டு போகிறார்கள், மணிமேகலை! அப்பேர்ப்பட்ட சீதா தேவியைப் பற்றிக் கூடத்தான் ஊரில் அவதூறு பேசினார்கள். அதனால் சீதைக்கு என்ன நஷ்டம் வந்துவிட்டது? என் விஷயம் இருக்கட்டும்; உன்னைப் பற்றிச் சொல்லு!"

"என்னைப் பற்றிச் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது, அக்கா!"

"அடி, கள்ளி! இன்று மாலையில் வந்து உன் மனத்தில் உள்ள அந்தரங்கத்தைச் சொல்லுகிறேன் என்று நீ கூறி விட்டுப் போகவில்லையா? இப்போது என்ன சொல்லுவதற்கு இருக்கிறது என்கிறாயே?" என்று கூறிவிட்டு நந்தினி மணிமேகலையின் அழகிய கன்னத்தை இலேசாகக் கிள்ளினாள்.

"அக்கா! எப்போதும் எனக்கு இப்படியே தங்களுடன் இருந்துவிட வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது. எனக்குச் சுயம்வரம் வைத்து, பெண்கள் பெண்களையே கலியாணம் செய்து கொள்ளலாம் என்று ஏற்படுத்தினால் நான் தங்களுக்குத்தான் மாலையிடுவேன்!" என்றாள் மணிமேகலை.

"என்னை நீ பார்த்து முழுமையாக ஒரு நாள் கூட ஆகவில்லை! அதற்குள் இப்படி மாய்மால வார்த்தைகள் பேசுகிறாயே? அதைப் பற்றி எனக்குச் சந்தோஷம்தான். எனக்குப் பிரியமான தோழி உன்னைப்போல் ஒருத்தி இல்லையே என்று எவ்வளவோ தாபப்பட்டுக் கொண்டிருந்தேன். சோழ நாட்டின் சிற்றரசர் வீட்டுப் பெண்கள் எல்லாரும் அந்தப் பழையாறைப் பிசாசைத்தான் தேடிக் கொண்டு போவார்கள். நீ ஒருத்தியாவது எனக்கு மிச்சமிருக்கிறாயே?—ஆனால் நீ சற்று முன் கூறியது நடவாத காரியம். பெண்ணுக்குப் பெண் மாலையிடுவது என்பது உலகில் என்றும் நடந்ததில்லை. யாராவது ஓர் ஆண் பிள்ளையைத்தான் நீ மணந்து கொண்டு தீர வேண்டும்......"

"கன்னிப் பெண்ணாகவே இருந்து விட்டால் என்ன, அக்கா?"

"முடியாது, கண்ணே! முடியாது! கன்னிப்பெண்ணாயிருக்க இந்த உலகம் உன்னை விடவே விடாது. உன் அம்மாவும் அப்பாவும் விடமாட்டார்கள். உன் தமையனும் விடமாட்டான். யாராவது ஓர் ஆண்பிள்ளையின் கழுத்தில் உன்னைக் கட்டி விட்டால்தான் அவர்களது மனது நிம்மதி அடையும். அப்படி நீ கலியாணம் செய்து கொள்வது என்று ஏற்பட்டால், யாரை மணந்துகொள்ளப் பிரியப்படுகிறாய், சொல்லு!"

"பெயரைக் குறிப்பிட்டுக் கேளுங்கள் அக்கா! சொல்கிறேன்!"

"சரி, சரி! அப்படியே கேட்கிறேன். சிவ பக்தியில் சிறந்த மதுராந்தகத் தேவரை மணந்து கொள்ள விரும்புகிறாயா? அல்லது வீரதீர பராக்கிரமங்கள் மிகுந்த ஆதித்த கரிகாலருக்கு மாலையிடப் பிரியப்படுகிறாயா?"

திடீரென்று மணிமேகலை எதையோ நினைத்துக் கொண்டவள் போல் கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய், மணிமேகலை? நான் பரிகாசம் செய்கிறேன் என்று எண்ணிக் கொண்டாயா? இந்த விஷயத்தை முடிவு செய்வதற்காகவே என்னை உன் தமையன் இங்கே முக்கியமாக வரச் சொன்னான். இன்னும் சற்று நேரத்தில் கரிகாலர் இங்கே வந்து விடக்கூடும். உன் தமையனும் வந்து விடுவான். உன் அந்தரங்கத்தை அறிந்து சொல்லுவதாக அவனுக்கு நான் வாக்குக் கொடுத்திருக்கிறேன்" என்றாள் நந்தினி.

"என் அந்தரங்கம் இன்னதென்று எனக்கே தெரியவில்லையே, அக்கா! நான் என்ன செய்யட்டும்?"

"எதற்காகச் சிரித்தாய், அதையாவது சொல்!" என்று கேட்டாள் நந்தினி.

"மதுராந்தகர் பெயரைச் சொன்னதும் ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது.

நாலு மாதத்துக்கு முன்பு அவர் இந்த வீட்டுக்கு ஒரு தடவை வந்திருந்தார். தாங்கள் வழக்கமாக வரும் மூடு பல்லக்கில் ஏறிக் கொண்டு ஒருவரும் பார்க்காமல் திரை போட்டுக் கொண்டு வந்தார். அந்தப்புரத்தில் எங்களுக்கு அந்த இரகசியம் தெரியாது. தாங்கள்தான் வந்திருக்கிறீர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தோம். 'பழுவூர் ராணி ஏன் அந்தப்புரத்துக்கு வரவில்லை?' என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டிருந்தோம். அக்கா! பெண்களைப் பெண்கள் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று சற்று முன் சொன்னீர்கள் அல்லவா? மதுராந்தகரை நான் மணந்து கொள்வது ஒரு பெண்ணை மணம் புரிந்து கொள்ளுவது போலத்தான்!..."

நந்தினி புன்னகை புரிந்து, "ஆம், ஆம்! மதுராந்தகரை நீ விரும்பமாட்டாய் என்றுதான் நானும் நினைத்தேன். உன் அண்ணனிடமும் சொன்னேன். மதுராந்தகத் தேவர் முன்னமே என் மைத்துனர் மகளை மணந்து கொண்டிருக்கிறார். அவள் ரொம்ப அகம்பாவக்காரி. அவளுடன் உன்னால் ஒரு நாள் கூட வாழ்க்கை நடத்த முடியாது. அப்படியானால், இளவரசர் கரிகாலரிடம் நீ மனத்தைச் செலுத்தி விட்டாய் என்று சொல்லு!' என்றாள் நந்தினி.

"அப்படியும் சொல்ல மாட்டேன், அக்கா! அவரை நான் பார்த்ததே இல்லை. எப்படி என் மனம் அவரிடம் சென்றிருக்க முடியும்?"

"அடியே! இராஜகுலத்துப் பெண்கள் பார்த்து விட்டுத் தான் மனத்தைச் செலுத்துவது என்பது உண்டா? கதைகளிலும் காவியங்களிலும், சித்திரங்களைப் பார்த்துவிட்டும் கீர்த்தியைக் கேட்டுவிட்டும் காதல் கொண்ட பெண்களைப் பற்றி நீ அறிந்ததில்லையா?"

"ஆம், ஆம்! அறிந்திருக்கிறேன். ஆதித்தகரிகாலர் வீராதி வீரர் என்று உலகமெல்லாம் அவர் புகழ் பரவியிருக்கிறதென்றும் அறிந்திருக்கிறேன். அக்கா! வீரபாண்டியனுடைய தலையை ஆதித்தகரிகாலர் ஒரே வெட்டில் வெட்டி விட்டாராமே? அது உண்மையா?"

நந்தினியின் முகம் அச் சமயம் எவ்வளவு பயங்கரமாக மாறியது என்பதை மணிமேகலை கவனிக்கவில்லை.

நந்தினி சில வினாடி நேரம் வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் திரும்பினாள். அதற்குள் அவள் முகம் பழையபடி பார்ப்போரை மயக்கும் மோகன வசீகரத்துடன் விளங்கியது.

"மணிமேகலை! ஒருவனுடைய தலையை ஒரே வெட்டில் வெட்டி விடுவது பெரிய வீரம் என்று கருதுகிறாயா? அது பயங்கர அசுரத்தனம் அல்லவா?" என்றாள்.

"நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை, அக்கா! பகைவனின் தலையை வெட்டுவது வீரம் இல்லையா? அது எப்படி அசுரத்தனமாகும்?"

"இந்த மாதிரி யோசனை செய்து பார்! உனக்கு ரொம்ப வேண்டியவன் ஒருவனை அவனுடைய பகைவன் தலையை வெட்ட வருகிறான் என்று வைத்துக்கொள். உன் தமையனை எண்ணிக் கொள். அல்லது நீ மணம் செய்து கொள்ள உத்தேசித்திருக்கும் காதலன் ஒருவன் இருப்பதாக நினைத்துக் கொள். அவன் காயம் பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடக்கும் போது, இன்னொருவன் — அவனுடைய பகைவன், — கத்தியை ஓங்கிக் கொண்டு தலையை வெட்ட வருகிறான் என்று எண்ணிக் கொள். அப்படி வெட்ட வருகிறவனுடைய வீரத்தை நீ மெச்சிப் பாராட்டுவாயா?" என்றுகேட்டாள் பழுவூர் ராணி.

மணிமேகலை சற்று யோசித்துவிட்டு, "அக்கா! மிக விசித்திரமான கேள்வி நீங்கள் கேட்கிறீர்கள். ஆயினும் எனக்குத் தோன்றும் மறுமொழியை நான் சொல்லுகிறேன். அத்தகைய நிலைமை எனக்கு ஏற்பட்டால், நான் சும்மா பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். கொல்ல வருகிறவனுடைய கையிலிருந்து கத்தியைப் பிடுங்கி அவனை நான் குத்திக் கொன்றுவிடுவேன்!" என்றாள்.

நந்தினி மணிமேகலையை ஆர்வத்துடன் கட்டித் தழுவிக் கொண்டாள். "என் கண்ணே! நல்ல மறுமொழி சொன்னாய்! இவ்வளவு புத்திசாலியாகிய உனக்கு நல்ல கணவன் வாய்க்க வேண்டுமே என்று எனக்குக் கவலையாயிருக்கிறது. ஆதித்த கரிகாலர்கூட உனக்குத் தக்க மணவாளர் ஆவாரா என்பது சந்தேகந்தான்" என்றாள் நந்தினி.

"நானும் அப்படித்தான் எண்ணுகிறேன். கரிகாலருடைய குணநிசயங்களைப் பற்றிக் கேட்ட பிறகு அவரை நினைத்தால் எனக்குச் சற்றுப் பயமாகவே இருக்கிறது. என்னுடைய அந்தரங்கத்தை, என் மனத்திலுள்ளதை, உள்ளபடி சொல்லட்டுமா, அக்கா?" என்று கேட்டாள் மணிமேகலை. (தொடரும்)

விவசாயத்தில் சில விந்தைகள்

[நமது விசேஷ நிருபர்]

சென்னையில் இந்த வருஷம் நடந்த ஒரு திருமண விருந்துக்கு அதிசயமான வெள்ளரிக்காய் ஒன்று வந்திருந்தது. அது சுமார் ஒன்றரை முழ நீளம் இருந்தது. சாப்பிடுவதற்கு மிக ருசியாகவும் இருந்தது. இந்த அதிசய வெள்ளரிக் காயைப் பற்றி விசாரித்தபோது அதன் பெயர் 'லக்னௌ அற்புதம்' (Lucknow Marvel) என்று தெரிந்தது. லக்னௌ என்னும் லக்ஷ்மணபுரி நகரின் சுற்றுப் பக்கங்களில் அது அதிகம் பயிரிடப் படுவதால் அதற்கு அந்தப் பெயர் வந்தது.

'லக்னௌ அற்புதம்' என்னும் வெள்ளரிக் காயைப் பற்றி ஒரு ரஸமான கதை கேள்விப் பட்டிருந்தேன். நம் மாகாணத்தில் ஜமீன்தார்களும், மிட்டாதார்களும் எப்படியோ, அப்படி உத்தரப் பிரதேசத்தில் தாலுக்தார்கள். இவர்கள், வழி வழியாகப் பெரிய மனுஷ பரம்பரையில் வந்தவர்கள். அவர்களின் குணாதிசயத்தில் கெடுதலான அம்சங்கள் எப்படி உண்டோ, அப்படியே சில மேலான அம்சங்களும் உண்டு. ரொம்பவும் டம்பப் பிரியர்கள்; அதேசமயத்தில் மிகவும் மரியாதைக்காரர்கள்.

வசந்த காலத்தில் முதன் முதலாக வெள்ளரிப் பிஞ்சுகள் மார்க்கெட்டுக்கு வரும்போது, அவற்றை வாங்குவதில் மேற்படி தாலுக்தார்களின் வேலைக்காரர்களிடையே போட்டி ஏற்படும். ஒவ்வொரு வேலைக்காரனும் முதலில் வரும் வெள்ளரிப் பிஞ்சுகளைத் தன் எஜமானுக்கு வாங்கிக் கொண்டு போவதில் ஆர்வமா யிருப்பான்.

ஒரு வருஷத்தில் முதன்முதலாக பத்துப் பன்னிரண்டு வெள்ளரிப் பிஞ்சுக்கள் மார்க்கெட்டுக்கு வந்தன. அவற்றை வாங்க இரண்டு தாலுக்தார்களின் வேலைக்காரர்கள் ஒரே சமயத்தில் போட்டி யிட்டார்கள். சாதாரண நாட்களில் எட்டணா பெறக்கூடிய அந்தப் பிஞ்சுகளை ஒரு வேலைக்காரன் ஐந்து ரூபாய்க்குக் கேட்டான். இன்னொருவன் ஏழு ரூபாய்க்குக் கேட்டான். விலை உயர்ந்து கொண்டே போய் நூறு ரூபாய்க்கு வந்து விட்டது. ஒருவன் நூறு ரூபாய் மட்டும் கொண்டு வந்திருந்தான். ஆகையால் இன்னொருவன் அதை நூற்றொரு ரூபாய்க்குத் தட்டிக் கொண்டு போய் விட்டான்!

தாலுக்தாரிடம் சென்று அந்த வேலைக்காரன் தன்னுடைய சாமர்த்தியத்தைக் கூறினான். தாலுக்தாரும் அவனைப் பாராட்டி ஐந்து ரூபாய் அவனுக்குச் சன்மானம் கொடுத்தார். பிறகு ஒரு வெள்ளித் தட்டில் அந்த வெள்ளரிப் பிஞ்சுகளை வைத்தார். எந்த தாலுக்தாருக்காக இன்னொரு வேலைக்காரன் போட்டி யிட்டானோ, அந்த தாலுக்தாரின் வீட்டுக்கு வெள்ளித் தட்டோடு வெள்ளரிப் பிஞ்சுகளையும் எடுத்துக் கொண்டு சென்று, தமது வசந்த கால வாழ்த்துக்களையும் சேர்த்துத் தெரிவித்து விட்டு வரும்படியாக அதே வேலைக்காரனை அப் பெரிய மனிதர் அனுப்பி வைத்தார்!

* * *

இப்படிப்பட்ட அருமையான கதைக்குக் காரணமான அபூர்வமான வெள்ளரிக்காய் சென்னையில் நடந்த திருமண விருந்துக்கு மூட்டைக் கணக்கில் எப்படி வந்தது என்று விசாரித்தபோது, அது சென்னையிலிருந்து சுமார் 16 மைல் தூரத்தில் உள்ள கொத்தம்பாக்கம் என்னும் கிராமத்தில் உற்பத்தியாவதாகத் தெரிய வந்தது. கொத்தம்பாக்கத்தில் ஸ்ரீ எஸ். வி. ராகவன் என்ற விவசாயி ஒருவர் விவசாயத் துறையில் இன்னும் பல விந்தைகளையும் சாதித்திருக்கிறார் என்று அறிந்தேன்.

விவசாயத் துறையில் விசேஷ ஊக்கமுள்ள ஸ்ரீ ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள் சில காலத்துக்கு முன்பு கொத்தம் பாக்கம் பண்ணையை வந்து பார்த்து விட்டுச் சென்றார் என்று அறிந்த போது, அந்தப் பண்ணையில் விசேஷ சாதனைகள் நிச்சயம் நடந்திருக்க வேண்டும் என்று நிச்சயம் செய்து கொண்டேன். சென்ற மாதத்தில் "கல்கி" ஆசிரியருடன் மேற்படி பண்ணைக்கு நேரில் சென்று பார்த்ததில் அந்தச் சாதனைகளைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள முடிந்தது.

புடலங்காய் அற்புதம்

நாங்கள் போயிருந்த சமயத்தில் 'லக்னௌ அற்புத'த்தைக் காண முடியவில்லை. ஏனெனில், இது வெள்ளரிக்காய் காய்க்கும் பருவம் அல்ல. ஆனால் வேறு சில உள்ளூர் அற்புதங்களைப் பார்க்க முடிந்தது. அவற்றில் முக்கியமாக என் கண்ணின் முன்னால் இப்போது நிற்பது புடலங்காய் அற்புதம்!

கொத்தம்பாக்கம் பண்ணையில் உள்ள புடலம் பந்தலைப் பார்த்த போது எனக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய் விட்டது. ஏதாவது மாய வித்தை செய்து நம்மை ஏமாற்றுகிறோரோ என்று எண்ணும் படி இருந்தது. ராணுவப் படையினர் அணி அணியாக நின்று பயிற்சி பெறுவார்களே அது போல்ப் புடலங்காய்கள் அணி அணியாகப் பூமிக்கும் பந்தலுக்குமாக முட்டிக் கொண்டு நின்றன. பந்தலைப் பரிசல் என்று ஆறடி உயரத்துக்கு மேல் (அதாவது நல்ல வளர்ச்சியுள்ள ஒரு ஆளை விட உயரமாக) நூற்றுக் கணக்கான புடலங்காய்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றில் சில பூமியைத் தொட்டு விட்டபடியால் மேலும் நீளுவதற்காகத் தரையில் குழி பறிக்கப் பட்டிருந்தது. இலேசான மஞ்சள் நிறம் முதல் செக்கச் செவேலென்ற செம்பவள



கொத்தம்பாக்கம் வித்தைக்காரர்

நிறம் வரைக்கும் உள்ள பல புடலம் பழங்களும் தொங்கின. இவை விதை எடுப்பதற்காக விடப் பட்டவை என்று தெரிந்தது. இடையிடையே புடலம் பிஞ்சுகளும் தொங்கின.

சின்னஞ் சிறு புடலம் பிஞ்சுகள் சிலவற்றைப் பறித்துக் கொடுத்து எங்களைச் சாப்பிடச் சொன்னார் ஸ்ரீ ராகவன். 'லக்னௌ அற்புதம்' கெட்டது போங்கள்! அவ்வளவு சுவையாகவும், புடலம் பிஞ்சுக்கு என்று தனிப்பட்ட மணத்துடனும் அவை திகழ்ந்தன.

"இவ்வளவு புடலங்காய்கள் நெருக்கமாகக் காய்த்திருப்பதை இதற்கு முன்னால் நான் பார்த்ததே யில்லை. இந்த அற்புதத்தை எவ்வாறு சாதித்தீர்கள்!" என்று கல்கி ஆசிரியர் கேட்டார்.

"இது மூன்றாவது காய்ப்பு. இதற்கு முன்னால் இம்மாதிரி இரண்டு தடவை காய்த்திருக்கிறது" என்றார் ஸ்ரீ ராகவன்.

பின்னர், புடல் விவசாயம் பற்றிய பின்வரும் விவரங்களைக் கூறினார்:—

"நிலத்தை நன்றாகக் கொத்தி வாங்கிச் சாதாரண குப்பை எருப் போட்டு உழ வேண்டும். பிறகு சிறு சிறு பாத்திகளாகக் கோலி நல்ல புடலம் விதைகளை ஊன்றித் தண்ணீர் ஊற்ற வேண்டும். விதை முளைத்து இலை விட்டுக் கொடியாகிப் படர ஆரம்பிக்கும் போது அதற்குப் பந்தல் போட வேண்டும். பந்தல் போடுவதற்கு வருஷா வருஷம் செலவு செய்வதை விட ஒதிய மரப் போத்துகளை கட்டுப் பந்தல் போட்டு விட்டால் போத்துக்கள் வேர் ஊன்றித் தளிர்த்து விடும். கொடி படரும்போது ஒதியந் தழைகளை வெட்டிப் போட்டு உரமாக்கி விடலாம். பந்தலும் உறுதியாக இருக்கும்.

"புடலங்கொடி நன்றாகப் படர ஆரம்பிக்கும் போது ஒவ்வொரு கொடிக்கும் அடியில் கொஞ்சம் பெருங்காயத்தைக் கரைத்து ஊற்ற வேண்டும். உடனே கொடி செழுமையாகப் படர்ந்து நன்றாகக் காய்க்க ஆரம்பிக்கும். அந்தச் சமயங்களில் வாரம் இரண்டு தரம் தண்ணீர் விட்டால் போதுமானது. இது நாலு மாதப் பயிர்தான். அதற்குள் மூன்று தரம் புடலங்காய் அறுக்கலாம். இந்தப் புடலம் பந்தல் 15 செண்ட் நிலப் பரப்பு உள்ளது. அதாவது ஒரு ஏக்கரில் ஏழில் ஒரு பங்குதான். இந்தப் பதினைந்து செண்டு நிலத்தில் புடல் பயிர் செய்ததில் இந்த வருஷம் 200 ரூபாய்க்குப் புடலங்காய் விற்றிருக்கிறேன். புடலம் விதை 300 ரூபாய்க்கு விற்றிருக்கிறேன்" என்று ஸ்ரீ எஸ். வி. ராகவன் பெருமையோடு சொன்னார்.

மறுபடியும் சில கேள்விகள் கேட்டதில், புடல் நன்றாக மகசூல் தருவது முக்கியமாக நல்ல விதையைப் பொறுத்திருக்கிறது என்று தெரிந்தது. நன்றாக முற்றிய புடலங்காய் பழுப்பு நிறமாகி மேலும் சிவந்து நல்ல செம்பவள நிறத்துக்கு வர வேண்டும். அதற்குள் பட்சிகள் கொத்தித் தின்று விடாமல் பாதுகாக்க வேண்டும். இப்படி நன்றாக விளைந்து முதிர்ந்த பழத்திலிருந்து எடுத்த விதைகளைப் போட்டால்தான் நல்ல புடல் மகசூல் கிடைக்கும். அத்தகைய உயர்தரமான விதைகள் தயாரிப்பதில் ஸ்ரீ ராகவன் விசேஷ சிரத்தை எடுத்து வருகிறார். அதனாலேதான் அவருடைய புடலம் பந்தலில் அவ்வளவு காய்கள் முதிர்ந்து பழங்களாவதற்கு விடப்பட்டிருந்தன என்று தெரிந்தது. ஸ்ரீ ராகவன் தயாரிக்கும் விதைகளைச் சர்க்கார் விவசாய இலாக்காவில் வாங்கிக் கொள்கிறார்களாம். இந்த வருஷத்தில் இருபது பவுண்டு விதை எடுத்து விற்றாராம். ஒரு பவுண்டில் 1400 விதைகள் இருக்குமாம்.

"புடலம் கொடிக்கு ஏதேனும் வியாதிகள், பூச்சிகளின் தொந்தரவுகள் ஏற்படுமோ!" என்று கேட்டார் 'கல்கி' ஆசிரியர்.

"வியாதி ஒன்றும் வராது. ஆனால் ஒரு மாதிரி புழு கொடியில் புகுந்து அழித்து விடும். தினம் கொடிகளைப் பார்த்து வந்தால் சில கொடியில் சிறு துவாரமும் அதன் முனையில் முடிச்சுக் கட்டியதுபோல் கறுப்பாகவும் தெரியும். சவர பிளேடினால் அந்த இடத்திலிருந்து கொடியை வகுத்துக் கொண்டு போனால் புழுவைக் கண்டு பிடித்து விடலாம். புழுவை எடுத்துக் கொன்று விட்டுப் பிளந்திருக்கும் புடலம் கொடியை பழை



அணி அணியாகத் தொங்கும் ஆறு அடிப் புடலங் காய்கள்

படி பொருத்தி சிறுநாரால் சுற்றிக் கட்டிவிட்டால் கொடி மீண்டும் பழையபடி நன்றாகப் படர்ந்து காய்க்க ஆரம்பித்து விடும்' என்றார்.

"நீங்கள் இங்கே தயாரிக்கும் புடலம் விதைகளை எப்போதும் சர்க்கார் விவசாய இலாக்காவில் வாங்கிக் கொள்கிறார்களா?" என்று ஆசிரியர் கேட்டார்.

"சில சமயம் வாங்கிக் கொள்கிறார்கள்; சில சமயம் திடீரென்று 'வேண்டாம்' எனச் சொல்லி விடுகிறார்கள். அப்போது விதை எடுப்பதில் நாங்கள் பட்ட பிரயாசை யெல்லாம் வீணாகப் போய்விடும்!" என்றார் ஸ்ரீ எஸ். வி. ராகவன்.

"அப்படி வீணாக வேண்டிய அவசியமில்லை. பொது ஜனங்களுக்கு நேராகவே நீங்கள் காய்கறி விதைகள் விற்பனை செய்யலாமே! முதலில் கொஞ்சம் விளம்பரப்படுத்த வேணும். அப்புறம் தேடி வந்து வாங்கிக் கொண்டு போவார்கள்!" என்று கல்கி ஆசிரியர் கூறினார்.

இந்த யோசனையை ஸ்ரீஎஸ். வி. ராகவன் ஏற்றுக் கொண்டு காரியத்தில் நடத்தினால் பெரிய தொரு சமூகத் தொண்டா யிருக்கும்.

அடுத்தாற்போல் பூசினித் தோட்டத்துக்குப் போனோம். ஏராளமான பூசினிக்காய்களும் பிஞ்சுகளும் பச்சைப் பசேல் என்ற கொடிகளுக்கு மத்தியில் கண்ணுக்கினிய காட்சி அளித்துக் கொண்டிருந்தன. இதுவும் நல்ல லாபகரமான விவசாயம் என்று தெரிந்தது. ஸ்ரீராகவன் சென்ற ஆண்டில் 50 சென்டு நிலத்தில் பூசினி பயிர் செய்தார். அதில் சுமார் ஆயிரம் பூசினிக் காய்கள் கிடைத்தன. ஒரு காய் எட்டணாவிலிருந்து ஒன்றே கால் ரூபாய் வரையில் மார்க்கெட் நிலவரத்துக்குத் தகுந்தாற் போல் விற்குமாம். ஸ்ரீ ராகவன் சில நூறு பூசினிக்காய்களைத் தான் விற்றார். மற்ற பூசினிக்காய்களை நன்றாக முற்றவிட்டு விதை எடுத்து விதைகளாக விற்றார். ஒரு பவுண்டு பூசினி விதையின் விலை ஆறு ரூபாய். எட்டு பூசினிக் காய்களில் ஒரு பவுண்டு விதை கிடைக்கும்.

இப்படிப்பட்ட பிரமிக்கத்தக்க முறையில் மற்றும் பல காய்கறி வகைகளையும் ஸ்ரீ எஸ். வி. ராகவன் உற்பத்தி செய்து வருகிறார். சென்னை சர்க்காரின் விவசாய இலாகாவுக்கு வேண்டிய முதல் தரக் காய்கறி விதைகளைக் கொடுத்து வருகிறார்.

விந்தை மனிதர் இவர்!

ஸ்ரீ எஸ். வி. ராகவனே ஒரு விந்தையான மனிதர்தான். அவர் விவசாயத் துறைக்கு வந்ததும் ஒரு விந்தையான விஷயம். அதற்காக ஜப்பானுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். சென்னையில் ஸ்ரீ ராகவன் வர்த்தகத் துறையில் ஈடுபட்டிருந்தார். 1941-ம் வருஷத்தில் ஜப்பான் குண்டு பயம் ஏற்பட்டுப் பலரும் சென்னை நகரைக் காலி செய்தபோது ஸ்ரீராகவன் இந்தக் கொத்தம்பாக்கத்துக்கு வந்து சேர்ந்தார். அவருக்காக அவருடைய நண்பர் ஒருவர் இங்கே கொஞ்சம் நிலம் வாங்கி யிருந்தார். நிலத்தைப் பார்த்ததும் ஸ்ரீ ராகவனுக்குப் பகீர் என்றது. அத்தகைய வறட்சியான பொட்டைக் காடா யிருந்தது. அதில் புல் பூண்டுகூட முளைக்காது என்று தோன்றியது. ஆனால் ஸ்ரீ ராகவன் பிடிவாதக்காரர். வாங்கிய நிலத்தை எப்படியாவது பயன்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தார். கிணறுகள் தோண்டினார். தண்ணீர் சுமாராகக் கிடைக்கலாம் என்று தோன்றியது. சொற்பமான தண்ணீரைக் கொண்டு லாபகரமான விவசாயம் என்ன செய்யலாம் என்று யோசித்தார். அப்போது காய்கறிகளுக்கு நல்ல கிராக்கி இருந்தது. இராணுவத்துக்கு நிறையக் காய்கறி வாங்கினார்கள். ஆகையால், முதலில் காய்கறி விவசாயம் ஆரம்பித்தார். நாலைந்து வருஷம், இராணுவத்தார் காய்கறி வாங்கிக் கொண்டிருந்தவரை, காய்கறி விவசாயம் நல்ல லாபகரமாக இருந்தது. பிறகு, காய்கறிகளுக்குக் கிராக்கி குறைந்து விட்டது. இதற்கிடையில் கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி நல் பொட்டைக் காட்டு நிலம் 300 ஏக்கரா வரையில் சேர்ந்து விட்டது. ஸ்ரீ ராகவனும் அதற்குள்ளாக விவசாயத்தில் மூளையைச் செலுத்தி அநுபவமும் பயிற்சியும் பெற்றுவிட்டார். ஆகையால் வர்த்தகத் துறைக்குத் தலை முழுக்குப் போட்டு விட்டு விவசாயத்திலேயே முழுதும் ஈடுபட்டார்.

"லாப நஷ்டம் ஒரு புறம் இருக்கட்டும்; விவசாயத் துறையில் உள்ள சந்தோஷம் வேறு எந்தத் தொழிலிலும் கிடையாது. பூமியில் ஒரு விதையைப் போட்டு அது முளைத்து வளர்ந்து பலன் தருவதைப் பார்ப்பதைக் காட்டிலும் உலகத்தில் வேறு என்ன சந்தோஷம் இருக்க முடியும்!" என்கிறார் ஸ்ரீ ராகவன்.

கறிகாய் விவசாயத்தில் கவனம் செலுத்திக் கணிசமான வெற்றி கண்ட பிறகு, உணவு



விதைக்காக விட்டிருக்கும் வெள்ளைப் பூசினிக்காய்

தானிய விவசாயத்தில் ஸ்ரீ ராகவன் அறிவைச் செலுத்தினார். பல பெரிய கிணறுகள் எடுத்தார். ஒவ்வொரு கிணற்றிலும் தண்ணீர் இறைப்பதற்கு ஒரு எண்ணெய் என்ஜின் ஸ்தாபித்தார். பொட்டைக்காடாக இருந்த நிலங்களை நன்செய் புன்செய் பயிர்களின் சாகுபடிக்குத் தகுதியாக்கினார்.

தமிழ் நாட்டில் ஐந்து வருஷமாக நல்ல மழை இல்லை என்பது அனைவரும் அறிந்ததே. ஆகையால் கிணறுகளில் தண்ணீர் வற்றிக்கொண்டே வந்து விட்டது. ஆயினும் கிடைத்த தண்ணீரைக் கொண்டு சென்ற வருஷத்தில் 56 ஏக்கரா நெல் பயிர் செய்தார். அதில் சுமார் ஆயிரம் மூட்டை நெல் கிடைத்தது. முப்பத்தோராயிரம் ரூபாய்க்கு நெல் விற்றார்.

நெல்லைத் தவிர முப்பது ஏக்கராவில் ராகி (கேழ்வரகு) பயிர் செய்து 300 மூட்டை ராகி கண்டு முதல் பண்ணினார். மற்றும் முப்பது ஏக்கரா நிலத்தில் சோளம் போட்டதில் ஏக்கருக்கு 18 மூட்டை வீதம் சோளம் கிடைத்தது.



"ரப்பர் சக்கரத்தை எடுத்தெறிந்து விட்டு இரும்பு மூன் சக்கரம் அமைத்தேன்"

ராகி, சோளத்துக்கு நெல்லைப் போல் அவ்வளவு தண்ணீர் தேவையில்லை. மேற்படி தானியங்களுக்கு நல்ல கிராக்கியும் உண்டு. ஆகையால் நெல்லைப் போலவே ராகி, சோளமும் லாபகரமான பயிர்கள்தான் என்று ஸ்ரீ ராகவன் கூறினார்.

ஆஸ்திரேலியாவிலிருந்து 'ஸெமோலினா' என்று சொல்லப்படும் வெள்ளை ரவை நம் நாட்டில் ஏராளமாக இறக்குமதியாகிறது. பவுண்டு ஒரு ரூபாய் வீதம் நல்ல கிராக்கியுடன் விற்கிறது. "அது போன்ற ரவை நம் ஊர் சோளத்திலிருந்து செய்யலாம்" என்று ஸ்ரீ ராகவன் கூறினார். இதற்குச் சர்க்காரின் உதவி வேண்டும் என்று தெரிவித்தார்.

டிராக்டரில் ஒரு வித்தை!

இவ்வளவு நிலங்களையும் உழுது பண்படுத்துவதற்கு ஏராளமான மாடுகளும் கலப்பைகளும் ஆட்களும் வேண்டுமே என்று எண்ணி, அதைப் பற்றிக் கேட்க எத்தனித்தபோது பக்கத்து வயலில் உழுது கொண்டிருந்த டிராக்டர் இயந்திரம் கண்ணில் பட்டது.

"ஓஹோ! தங்கள் பண்ணையில் டிராக்டர் கூட உபயோகப்படுத்துகிறீர்களா! டிராக்டர் பெரிய நிலப்பரப்பில்தான் உபயோகப் படுத்தலாம், அதுவும் சேற்று உழவுக்கு வராது என்று சொல்லுகிறார்களே!" என்று ஆசிரியர் கேட்டார்.

"நானும் முதலில் அப்படித்தான் பயந்து போனேன். பத்தாயிரம் ரூபாய் கொடுத்து டிராக்டர் வாங்கினேன். அதைக் காய்ந்த நிலத்தில் விட்டால் கூட, புழுதி நிலமாயிருந்தால், சக்கரங்கள் சுழலுமே தவிர நகருவதில்லை. சேற்றிலே இறக்கினால் இயந்திரமே உள்ளே அமுங்கிவிடும் போலிருந்தது. பத்தாயிரம் ரூபாய் தண்டம்தானோ என்ற கவலை உண்டாகிவிட்டது. பிறகு யோசனை செய்து டிராக்டரை உபயோகப் படுத்துவதற்கு ஒரு யுக்தி கண்டு பிடித்தேன்" என்றார் ஸ்ரீ ராகவன். அந்த யுக்தியைப் பற்றி அறிந்த பிறகு ஸ்ரீ ராகவன் அவர்களைக் "கொத்தம் பாக்கம் வித்தைக்காரர்" என்று அழைக்கத் தோன்றியது.

அந்த யுக்தி இது தான் :—


டிராக்டரில் தகராறு செய்வதெல்லாம் அதன் ரப்பர் டயர் சக்கரங்கள்தான் என்பதை ஸ்ரீ ராகவன் கண்டு பிடித்தார். உடனே டிராக்டரின் ரப்பர் டயர்களைக் கழற்றி வைத்தார்.

கொல்லுப் பட்டறைக்கு டிராக்டரைக் கொண்டு போய் அதன் சக்கரங்களைக் காண்பித்தார். அவற்றுக்குப் பதில் வேறு சக்கரங்களைச் செய்யச் சொன்னார். டிராக்டரின் முன் சக்கரங்களை அதன் பழைய டயர் சக்கரங்கள் மாதிரியே இரும்பால் செய்தார்.

பின் சக்கரங்கள் சேற்று நிலத்தில் அழுந்தாமலும் அதே சமயத்தில் வேகமாக உருளும்படியும் இருப்பதற்கு: முக்கால் அடி அகலம் உள்ள மூன்று உருளைகள் செய்து அவற்றை ஒன்றாகப் பொருத்தி இரண்டேகாலடி அகலமுள்ள சக்கரங்களைச் செய்வித்தார்.

ஒவ்வொரு முக்கால் அடி அகல சக்கரத்திலும் அதைச் சுற்றி நான்கு அங்குல உயரமும் ஒன்பது அங்குல நீளமும் உள்ளதாக இரும்பு முட்களை நெருக்கமாக அமைக்கப் பண்ணினார்.

அந்த மூன் சக்கரங்களை டிராக்டரில் பூட்டிச் சேற்றில் இறக்கினார். நன்கு தடையில்லாமல் உழுது கொண்டு சென்றது. பிறகு இன்னும் சில குறைகளையும் கண்டு பிடித்து நிவர்த்தி செய்து



சேற்று உழவு சக்கைப் போடாக நடக்கிறது.

தம் நிலங்களுக்கு ஏற்றவாறு டிராக்டரின் சில பாகங்களைத் திருத்தி அமைத்திருக்கிறார்.

இந்த அதிசய டிராக்டரையும் அது புழுதியிலும் சேற்றிலும் உழுத காட்சியையும் கண்ணால் கண்டு வியந்தோம். ஸ்ரீ ராகவன் தம்முடைய சாதாரணப் பண்ணை ஆள் ஒருவனுக்கு அதாவது எழுதப் படிக்கத் தெரியாத ஆளுக்கு டிராக்டரை ஓட்டக் கற்றுக் கொடுத்திருக்கிறார். அந்தப் பண்ணை ஆள் தலையில் முண்டாசைக் கட்டிக் கொண்டு டிராக்டரில் ஜம்மென்று உட்கார்ந்து ஓட்டுகிறான்!

விஸ்தாரமான நிலப்பரப்பிலே தான் டிராக்டரை உபயோகிக்கலாம் என்று சிலர் சொல்லுவதுண்டு. அதுவும் தவறு என்று தெரிந்தது. பத்து செண்டு வயலில் கூட (அதாவது ஏக்கராவில் பத்தில் ஒரு பங்கு விஸ்தீரணத்திலே கூட) டிராக்டர் வளைந்து வளைந்து சென்று உழுவதைக் கண்ணால் கண்டு நிச்சயம் அடைந்தோம்.

சொந்தம் பாக்கம் பண்ணையில் உள்ள டிராக்டருக்குப் பதின்மூன்று கொழு முனைகள் இருந்தன. நன்றாகக் காய்ந்த பூமியில், சாதாரண ஏர்க் கலப்பையால், ஏன் கடப்பாரையால் கூடப் பெயர்க்க முடியாத கட்டாந் தரையில், ஒரு அடி ஆழத்துக்கு அலட்சியமாக உழுகிறது. நாங்கள் அங்கிருந்த ஏழு மணி நேரத்தில் அவசரப்படாமல் ஆற அமர ஆறு ஏக்கர் நிலத்தை உழுது காண்பித்தார்கள். வேண்டுமானால் இன்னும் கூட அதிக நிலம் அதே நேரத்தில் உழும்படி செய்யலாம் என்றார் பண்ணையார்.

இந்த ஒரு டிராக்டர் செய்யும் வேலையை ஏர் உழவு மூலம் செய்ய வேண்டுமானால் சுமார் 26 ஜோடி மாடுகள் வேண்டும். பதின்மூன்று ஏர்க் கலப்பை நுகத்தடிகள் வேண்டும். பதின்மூன்று பண்ணை ஆட்கள் வேண்டும். காலையில் பதின்மூன்று ஜோடி மாடுகள் வேலை செய்தால் அதே மாடுகள் மாலையிலும் வேலை செய்ய முடியாது அல்லவா! அதனால் மொத்தம் 26 ஜோடி மாடுகள் வேண்டும் என்று அறிந்தோம்.

மாட்டு ஏரில்" எவ்வளவு திடமான மாடுகளையும் திறமையான ஆட்களையும் கொண்டு உழுதாலும் மணிக்கு இரண்டு மைல் வேகத்துக்கு மேல் போக முடியாது. ஆனால் பதின்மூன்று கொழு முனைகளையுடைய டிராக்டரோ மணிக்கு இருபது மைல் வேகத்தில் நிலத்தை உழும்.

நல்ல பலம் உள்ள மாட்டு உழவில் எவ்வளவு ஆழமாக உழுதாலும் அரை அடி அல்லது முக்கால் அடி ஆழத்துக்கு மேல் உழ வே முடியாது. டிராக்டரோ ஒரு அடி முதல் ஒன்றரை அடி ஆழம் வரையில் உழும். இதில் இன்னொரு விசேஷ சௌகரியம் இருக்கிறது. ஒன்றரை அடி ஆழம் சேற்று உழவும் புழுதி உழவும் உழுது விட்டால் களையே உண்டாவதில்லை.

வரப்பிரஸாத உரம்

டிராக்டர் உழவால் ஏற்படும் மேற்கூறிய பல சௌகரியங்களை ஸ்ரீ ராகவன் சொல்லி முடித்ததும், 'கல்கி' ஆசிரியர், "இதெல்லாம் சரிதான். ஆனால் உழவு மாடுகள் இருந்தால் வயலுக்கு வேண்டிய சாணி உரம் நிறையக் கிடைக்குமே! டிராக்டர் உரம் தராதே! அதற்கு என்ன செய்கிறீர்கள்!" என்று கேட்டார்.

"அது ஒரு முக்கியமான விஷயந்தான். ஆனால் மாட்டு உரத்துக்கு இப்போது அவ்வளவு அவசியம் இல்லாமல் போய் விட்டது. மாட்டுச்சாண உரத்தைக் காட்டிலும் பசுந்தழை உரம் அதிக பலனுள்ளதாயிருக்கிறது. அதோ பாருங்கள்!" என்று ஸ்ரீ ராகவன் சுட்டிக் காட்டினார்.

வயல்களுக்கு மத்தியில் ஆங்காங்கு அமைந்திருந்த பாதைகளில் இரண்டு பக்கமும் தழைத்து வளர்ந்திருந்த குத்துச் செடிகளைத்தான் அவர் குறிப்பிட்டார்.

"இந்தச் செடிகளுக்கு கிளிரிஸிரியா என்று பெயர். இது விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றுதான் சொல்ல வேண்டும். இதை நமக்கு அளித்த புண்ணியம் சென்னை விவசாய இலாகா டைரக்டர் ஸ்ரீ எம். எஸ். சிவராமன் அவர்களைச் சேர்ந்தது. விவசாயத்தில் அவர் நல்ல ஊக்கமும் உற்சாகமும் கொண்டவர். பசுந்தழை உரத்தைப் பற்றி அவர் செய்த பிரசாரம் என் கவனத்தைக் கவர்ந்து அதனால் பயன் அடைந்திருக்கிறேன். அவரைப் போல் விவசாய இலாகாவிலுள்ள இதர உத்தியோகஸ்தர்களும் இதர விவசாயிகளும் உற்சாகத்துடன் வேலை செய்தால் நம் நாட்டில் உணவுப் பஞ்சமே பறந்துவிடும்!" என்றார் ஸ்ரீ ராகவன். மேலும் அவர் கூறியதாவது:—

"கிளிரிஸிரியா செடியை வயல்களுக்கு மத்தியில் உள்ள பாதை ஓரங்களில் வைத்து வளர்க்கலாம். தனியாக ஒரு நிலப் பகுதியை ஒதுக்கி


வருடந்தோறும்...ஆயிரக்கணக்கான இந்தியத் தாய்மார்கள் கூறுவது: குழந்தைகளின் இருமல்களுக்கு 'ஸிரோலின்' தான் சிறந்தது!
SIROLIN
'ஸிரோலின்' விலை உயர்வாயிருந்தும்கூட ஜாக்கிரதையுள்ள விஷயமறிந்த தாய்மார்கள் அதையே விரும்புவது ஏன்? —காரணம் என்னவெனில்:
ஸிரோலின் இருமல்களை துரிதமாக சமனமூட்டுகிறது
ஸிரோலின் குறைந்த நேரத்தில் இருமல்களை நிறுத்துகிறது
ஸிரோலின் இனிய ருசியுள்ளது
ஸிரோலின் குழந்தைகளுக்கும் பயமின்றி கொடுக்கலாம். அதில் ஊறானி தரும் வஸ்துக்கள் யாதொன்றும் இல்லை
'ஸிரோலின்' இருமல்களை நிறுத்துகிறது



நன்றாக வளர்ந்திருக்கும் கிளிரிஸிரியா செடி. இதில் வருஷத்துக்கு மூன்று முறை தழை கழிக்கலாம்

யும் அச்செடியை வளர்க்கலாம். வைத்த புதிதில் முறையாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

சுமார் ஒன்றரை வருஷத்துக்குள் செடி தளதள வென்று தழைத்து நன்றாக வளர்ந்து விடும். அதற்குப் பிறகு அந்தச் செடிகளின் தழைகளைக் கழித்து வயல்களுக்கு உரமாகப் போட்டு உழ வேண்டும். ஐம்பது கிளிரிஸிரியா செடிகளில் ஒரு ஏக்கராவுக்கு வேண்டிய 3000 பவுண்டு பசுந் தழை உரம் கிடைத்து விடும். இந்தப் பண்ணையில் மொத்தம் 5000 கிளிரிஸிரியா செடி வைத்திருக்கிறேன். நூறு ஏக்கரா நிலத்துக்கு வேண்டிய உரம் அவற்றில் கிடைக்கும் என்று எதிர் பார்க்கிறேன்" என்றார் ஸ்ரீராகவன்.

"இந்தப் பசுந்தழை உரம் போட்டால் வேறு வகை உரங்களே போட வேண்டிய தில்லையா!" என்று "கல்கி" ஆசிரியர் கேட்டார்.

"மற்ற உரத்தோடு கலந்து தான் இதையும் போட்டுக் கொண்டு வந்தோம். இந்த வருஷத்தில் சில வயல்களுக்கு இந்தப் பசுந்தான் உரம் மட்டும் தனியாகப் போட்டுப் பார்த்தோம். ஏக்கருக்கு முப்பது மூட்டை நெல் கிடைத்தது. கிளிரிஸிரியா தழை போதுமான அளவு போட்டால் நிலத்துக்கு வேறு உரமே வேண்டியதில்லை என்பதுதான் என் அபிப்பிராயம். ஆனால் இன்னும் நன்றாய்ச் சோதனை செய்து பார்த்துவிட்டு நிச்சயமாய்ச் சொல்கிறேன்!" என்றார் பண்ணையார்.

மேற்படி செடியிலிருந்து வருஷத்துக்கு மூன்று தடவை தழை கழிக்கலாம் என்று அறிந்தபோது "அப்படியானால் வருஷத்துக்கு மூன்று போகம் சாகுபடியும் செய்யலாமே! அவ்விதம் செய்கிறீர்களா!" என்று ஆசிரியர் கேட்டார்.

"சில நிலங்களில் ஒரு போகமும் சில நிலங்களில் இரண்டு போகமும் இப்போது பயிர் செய்கிறோம். இந்த வருஷம் மட்டும் அக்டோபர் - நவம்பரில் நல்ல மழை பெ__ கிணறுகள் நிரம்பட்டும். மூன்று போகமும் விளைவித்துக் காட்டுகிறேன்" என்றார் கோத்தம்பாக்கம் பண்ணையார்.

ஸ்ரீ ராகவனுக்குக் குறைகளும் புகார்களும் இல்லாமற் போகவில்லை. விவசாய இலாகாவுடன் அடிக்கடி மல்லுக்கு நிற்கவேண்டி யிருப்பது பற்றியும், அந்த இலாகா அதிகாரிகளுடைய ஒத்தாசை போதுமான அளவு இல்லையென்பது பற்றியும் அவருக்குச் சில குறைகள் இருக்கின்றன.

கோத்தம்பாக்கத்துக்கு வெகு சமீபம் வரையில் மின்சார சக்தி வந்திருக்கிற ஆனால் அவருடைய கிராமத்துக்கு மட்டும் வரவில்லை. இது விஷயமாகவும் அவருக்கு மிக்க மனத்தாங்கல் இருக்கத்தான் செய்கிறது.

எல்லாவற்றிலும் பெரிய குறை ஐந்து வருஷமாகச் சரியாக மழை பெய்யவில்லை என்பதுதான்.

ஆனால் அவர் பெரிதும் தமது ஊக்கத்தையும் முயற்சியையுமே நம்பி யிருப்பதால் புகார்களை அதிகமாக வளர்த்துவதில்லை. "எது எப்படியிருந்தாலும் விவசாயத்துக்கு இணை இல்லை" என்ற தோரணையில் பேசுகிறார்.

முயற்சியும் ஊக்கமும் ஒருபுறம் இருக்க, ஏராளமான மூலதனத்தை ஸ்ரீ ராகவன் தம் பண்ணையில் போட்டிருக்கிறார் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது.

அதைப் பற்றிக் கேட்டதற்கு, "ஆமாம்; வியாபாரத்தில் சம்பாதித்ததையெல்லாம் போட்டிருக்கிறேன். விவசாயத்தில் கிடைப்பதையும் திருப்பி நிலத்திலேயே போடுகிறேன். போட்ட அளவுக்குப் பலன் இருக்கிறது!" என்றார் பண்ணையார்.

"ஒருவர் இவ்வளவுதான் நிலம் வைத்துக் கொள்ளலாம் என்று சர்க்கார் சட்டம் கொண்டு வந்தால் அப்போது என்ன செய்வீர்கள்!" என்று ஒரு அணுகுண்டு கேள்வியைப் போட்டோம். அதற்கும் ஸ்ரீ ராகவன் அஞ்சவில்லை.

"அப்படிச் சட்டம் செய்வது நியாயம் அல்ல என்பது என் அபிப்பிராயம். விவசாய வளர்ச்சிக்கு அது குந்தகமாயிருக்கும். ஆனாலும் அத்தகைய சட்டம் வந்தால் அதற்கேற்ப சரிப்படுத்திக் கொள்வேன். ஐம்பது ஏக்கராதான் வைத்துக் கொள்ளலாம் என்று சட்டம் வந்தால், அந்த ஐம்பது ஏக்கரா நிலத்திலும் லாபகரமான விவசாயம் செய்து காட்ட முடியும்!" என்றார் கோத்தம்பாக்கம் பண்ணையார்.

இந்த மாதிரி விவசாயத்தைப் பற்றி உற்சாகமாகப் பேசும் ஒரு விவசாயியைப் பார்த்ததில் எங்களுக்கெல்லாம் ஏற்பட்ட மகிழ்ச்சியைச் சொல்லி முடியாது.

ஆண்டவன் அருளில் இந்த வருஷத்திலாவது நன்றாக மழை பொழிய வேண்டும் என்றும், கோத்தம்பாக்கம் பண்ணையில் மூன்று போகம் விளையவேண்டும் என்றும் பிரார்த்தனை செய்து கொண்டு சென்னைக்குத் திரும்பினோம்.



குழந்தைப் பரிசு

எஸ்.வி.எஸ்

சரஸ்வதிக்கு ஏழு வயது. ராஜாவுக்கு ஐந்து வயது.

இந்த இரண்டு குழந்தைகளையும் பாட்டியிடம் விட்டு விட்டு அவர்கள் அப்பாவும் அம்மாவும் கடை கண்ணிகளுக்குச் சாமான் வாங்கி வரப் போவார்கள். ஆனால் வரும்போது அவர்களுக்குக் கட்டாயம் ஏதாகிலும் விளையாட்டுச் சாமான்களோ அல்லது தின்பண்டங்களோ வாங்கி வருவார்கள். அது மட்டுமல்ல, அவற்றைக் கொடுக்கும் போது அவளுடைய அம்மா, "அன்றைக்கு நான் 'சீப்பு, சீப்பு' என்று தேடிக் கொண்டிருந்த போது எங்கிருந்தோ தேடிக் கொண்டு வந்து கொடுத்தாயல்லவா, சரசு! அதற்குப் பரிசாகத்தான் இந்தப் பொம்மை!" என்று சொல்லிக் கொடுப்பாள்.

ராஜாவுக்குக் கொடுக்கும் போது, "அன்றைக்குப் பள்ளிக்கூடம் போகிறபோது 'அக்கா! அக்கா! கார் வருகிறது' என்று சொல்லித் தெருவில் குறுக்கே போக இருந்த அக்காவைத் தடுத்தாயாமே! அதற்காகத்தான் இந்தப் பட்சணம்! இனி மேலும் எப்பவும் இப்படியே சமர்த்தாக நல்ல காரியங்கள் செய்ய வேணும்" என்பார் தகப்பனார்.

இப்படிக் குழந்தைகளுக்கு அடிக்கடி அந்தப் பெற்றோர் பொம்மை வாங்கி வந்து கொடுப்பார்கள்; தின்பண்டங்கள் வாங்கி வந்து கொடுப்பார்கள். குழந்தைகள் புரியும் நல்ல காரியங்களைப் பாராட்டிப் பேசுவார்கள்.

அன்றைக்கொரு நாள் மாலை இந்த அப்பாவும் அம்மாவும் வழக்கம்போல் குழந்தைகளை வீட்டில் பாட்டியிடம் ஒப்படைத்து விட்டு, அவர்கள் நண்பர்கள் வீட்டுக்குப் போய் வரப் புறப்பட்டார்கள். திரும்பி வரும்போது வெகு நேரமாகி விட்டது. மணி பத்துக்குமேல் ஆகி விட்டது. கடை கண்ணிகள் இந்தக் காலத்தில்தான் எட்டு மணிக்கே மூடி விடுகிறார்களே! அதனால் ஒன்றும் வாங்காமல் வெறுங்கையுடனேயே வீட்டுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

சாதாரணமாக எட்டு மணிக்கெல்லாம் தூங்கிப்போகும் ராஜா, சரஸ்வதி இரண்டு பேரும் தங்கள் பெற்றோர் வருகைக்காக இன்னும் விழித்துக் கொண்டிருந்தார்கள்.

வீட்டு நடையில் செருப்புக் கழற்றிப் போடும் சத்தம் கேட்டவுடன் அப்பாவும் அம்மாவும் வந்து விட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டார்கள். இருந்தாலும் அவர்கள் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல், அவர்கள் உள்ளே நுழையும் திசையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

குழந்தைகள் இத்தனை நேரமாகியும் தூங்காமலிருப்பதைக் கண்ட அப்பா, "ராஜா! சரஸ்வதி! இன்னுமா தூங்கவில்லை! போய்த் தூங்குங்கள். ரொம்பநேரம் ஆச்சு!" என்றார்.

அம்மா, "ஆமடா, கண்களா! நாளைக்குப் பள்ளிக்கூடம் வேறே போகணுமோ இல்லையோ! போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்! சீக்கிரம் படுத்துக் கொண்டால்தான் சீக்கிரம் எழுந்திருக்கலாம்" என்றாள்.

குழந்தைகள் இருவரும் அவரவர்கள் படுக்கைக்குச் சத்தம் போடாமல் போனார்கள். போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்தார்கள். கொஞ்ச நேரம் மௌனம் நிலவியது.

பிறகு "அக்கா! அக்கா!" என்றான் ராஜா.

"உம்...உம்..." என்று தான் விழித்துக் கொண்டிருக்கிறாள் என்பதை உணர்த்தினாள் சரஸ்வதி.

"அக்கா! நான் கெட்ட காரியம் ஏதோ செய்திருப்பேன் போலிருக்கு. அதனால்தான் அம்மா இன்றைக்கு ஒன்றுமே வாங்கி வரவில்லை" என்றான் ராஜா.

"நான்கூடப் பெரிய கெட்ட காரியம் செய்திருப்பேன் போலிருக்கு!" என்றாள் சரஸ்வதி.

"ஏன் அக்கா பெரிய கெட்ட காரியம் என்கிறாய்? நம்ம இரண்டு பேருக்கும் எப்பவும் ஒரே மாதிரியான பொம்மை தானே வாங்கிக் கொடுத்திருக்கிறா அப்பாவும் அம்மாவும்!"

"நான் உன்னை விடப் பெரியவளோ இல்லையா? அதனால்தான் அப்படிச் சொல்கிறேன்" என்றாள் சரஸ்வதி.

இப்படிச் சற்று நேரம் இரண்டு குழந்தைகளும் தங்கள் ஆத்ம பரிசோதனை செய்து கொண்டு விட்டுத் தூங்கிப் போயின.

* * *

"பாவம்! குழந்தைகளுக்கு இன்றைக்குப் பெரிய ஏமாற்றமாகப் போச்சு நாம் ஒன்றும் வாங்கிக் கொண்டு வராதது" என்றாள் அவர்களுடைய அம்மா.

"அதுமட்டுமில்லை! குழந்தைகள் 'ஏன் வாங்கிக் கொண்டு வரவில்லை' என்று ஒரு வார்த்தைகூட நம்மைக் கேட்காமல் போய்ப் படுத்துக் கொண்டு விட்டதுகளே! ஒவ்வொரு குழந்தையானால் என்ன அடம், என்ன பிடிவாதம் பிடிக்கும்! எனக்கானால் ரொம்ப மனசு இளகிப் போச்சு! சமர்த்துக் குழந்தைகள்!" என்றார் அப்பா.

அவர் மனசு உணர்ச்சியின் காரணமாக மிகவும் கனத்து வருவதைக் கண்ட அவள், "சமர்த்துக்கு உங்களையே கொண்டிருக்கின்றன" என்றாள். அப்போது அவள் இதழ்களில் விஷமப் புன்னகை தவழ்ந்து வந்தது.

"ஆமாம். சமர்த்துக்கு என்னையும் அசட்டுத்தனத்துக்கும் உன்னையும் கொண்டு பிறந்திருக்கின்றன!" என்று சற்று கோபித்துக் கொள்வதுபோல் கடும் குரலில் கூறினார்.

"என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். நம்ம குழந்தைகள் அசடுகளே அல்ல. வேணுமானால் உங்க சமர்த்து, என் சமர்த்து இரண்டும் அவைகளிடம் இருக்கின்றனவே தவிர, நம் இரண்டு பேர் அசட்டுத்தனம் நம்மிடமே விட்டு விட்டன!" என்றாள் அவள். அவளுக்கும் இந்த வார்த்தைகளைக் கூறத் தொடங்கியபோது கண்கள் பனித்து விட்டன.

இப்படிச் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவர்கள் தூங்கிப்போனார்கள்.

* * *

காலையில் ராஜாதான் முதலில் எழுந்தவன். அவனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை!

"அக்கா! அக்கா! இதோ பார்த்தாயா?" என்று கூறிக் கொண்டு அவளை எழுப்பினான்.

"எனக்கு?" என்றாள்.

"இதோ, உன் தலைமாட்டிலே இருக்கிறது!" என்றான் ராஜா.

ஆம், அவர்கள் இரண்டு பேருடைய தலைமாட்டிலும் இரண்டு பிளாஸ்டிக் பொம்மைகள் இருந்தன. பொழுது விடிந்தது. அவற்றைக் கண்டபோது அவர்கள் அடைந்த சந்தோஷம் கொஞ்ச நஞ்சமல்ல.

இரண்டு குழந்தைகளும் நேரே அம்மாவிடம் ஓடின.

"அம்மா! அம்மா! நேற்று இராத்திரி நானும் ராஜாவும் நாங்கள் தெரியாமல் செய்த தப்புக் காரியத்தை மன்னித்து விடும்படி சுவாமியை வேண்டிக் கொண்டோம். அவர் எங்களை மன்னித்து, எங்கள் இரண்டு பேருக்கும் இரண்டு பொம்மை அனுப்பியிருக்கிறார் பார்த்தாயா, அம்மா! சுவாமி நல்லவரம்மா!" என்றாள் சரஸ்வதி.

தாயார் சிரித்துக் கொண்டே, "சுவாமி அனுப்பவில்லையடா, கண்ணு! அப்பாதான் காலங்காத்தாலே கடைக்குப் போய் வாங்கிக் கொண்டு வந்து உங்கள் தலைமாட்டிலே வைத்தார்!" என்றாள்.

இதைப் பின்னாலிருந்து கேட்டுக் கொண்டிருந்த தகப்பனார், "இல்லையடா குழந்தைகளா! சுவாமிதான் உங்கள் சமர்த்தைக் கண்டு மெச்சி, இந்த இரண்டு பொம்மைகளையும் தலைமாட்டிலே வைத்தார்" என்று சொல்லிவிட்டு மனைவியைப் பார்த்து, "குழந்தைகளுடைய தெய்வ நம்பிக்கைகெடும்



ஜோஸ்யர் :— இன்றைக்கு உங்களிடம் யாரோ ஒருவர் ஏமாறப் போகிறார்!

வந்தவர் :—யாரோ, என்ன? நீங்கள் தான் ஏமாறப் போகிறீர்கள். நான் உங்களுக்குக் காலணா கொடுக்கப் போவதில்லை!

படியாக என் அப்பா வாங்கிக் கொடுத்தார், ஆட்டுக்குட்டி வாங்கிக் கொடுத்தார் என்கிறாய்" என்று கடிந்து கொண்டார்.

"அவர்களுடைய தெய்வ நம்பிக்கையைக் கெடுக்கும்படியாக நான் ஒன்றும் சொல்லவில்லை. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற வாக்கியத்தில் நம்பிக்கை ஏற்படத்தான் அப்படிச் சொன்னேன்" என்றாள் அதே கடுமையான குரலில்.

'இந்த அப்பா அம்மா சண்டை நமக்கு ஒன்றும் புரியவில்லை' என்று குழந்தைகள் இருவரும் பொம்மை வந்த சந்தோஷத்தில் விளையாடப் போய்விட்டார்கள்.

* * *

காலை காப்பி தயார் செய்துகொண்டு, அதுவே சமாதானத்துக்குகந்த உபகரணமாக அவள் தன் புருஷன் அறைக்குச் சென்றாள்.

மனைவியின் முகத்தை ஏறெடுத்துப் பார்க்காமல், காப்பியை வாங்கி அருந்தினார்.

பேச்சு ஆரம்பிக்க வேண்டுமல்லவா?

"காப்பிக்குச் சர்க்கரை போதுமா?" என்றாள்.

ஒரு கணம் யோசித்தார். "அரை ஸ்பூன் சர்க்கரை போட்டால், காப்பி வெகு சுகமாக இருக்கும்" என்றார்.

"அப்படியானால் இருங்கள், கொண்டு வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு உள்ளே போய்ச் சர்க்கரை சீசாவைக் கொண்டு வந்தாள். ஸ்பூனில் கொஞ்சம் சர்க்கரை எடுத்துக் காப்பி டம்ளரில் போட்டுக் கலக்கிக் கொடுத்தாள்.

"இப்போ எப்படி காப்பி?"

"ஏ ஒன்!" என்றார்.

சரி, பரிபூரண சமாதானம் ஏற்பட்டுவிட்டது என்பது அந்த வார்த்தைகளிலிருந்தும் குரலிலிருந்தும் தெரிந்துவிட்டது அவளுக்கு. இனிமேல் நிர்ப்பயமாக எதுவும் பேசலாம் என்ற தைரியம் ஏற்பட்டது.

"காலையிலே பொம்மை வாங்கினீர்களே— எவ்வளவு ஆச்சு?"

"ஐந்து ரூபாய்!"

"ஐந்து ரூபாயா? அம்மாடி! வேறு சிறு பொம்மைகளா, சொற்ப விலையிலே வாங்கப்படாதோ?"

"அந்தக் கடைக்காரனிடம் வேறு இல்லையே? மேலும் எனக்காக, எட்டு மணிக்குக் கடை திறக்கிறவனை ஆறு மணிக்கே கடை திறக்கச் சொல்லி எடுத்துக் கொடுக்கச் சொன்னேன். அவன் அவ்வளவு நமக்காகச் சிரமப்பட்டதற்கு அவனிடம் வாங்காமல் இருந்தால் நன்றாக இருக்குமா? என்ன நினைத்துக்கொள்வான்! அதனால்தான் விலை அதிகமானாலும் போகட்டும் என்று வாங்கினேன்."

"உங்களிடம் ஐந்து ரூபாய்தான் இருந்தது என்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே?" என்றாள்.

"ஆமாம், அந்த ஐந்து ரூபாயைக் கொடுத்துத்தான் வாங்கினேன்."

"இன்றைக்கு அரிசி வாங்கணும். இன்றைக்குச் சமையலுக்கு அரிசி போட்டுவிட்டால், அப்புறம் வீட்டில் ஒரு மணி அரிசி கிடையாது......"

"பார்! நேற்று ராத்திரி நாழி கழித்து வந்ததில் நன்றாகப் பசித்தது. வயிறு நிறையச் சாப்பிட்டோம். ஆனாலும் நேற்று ராத்திரி குழந்தைகளின் முகத்தை நினைத்துப் பார்க்கப் பார்க்க, சாப்பிட்ட சாதமெல்லாம் எங்கேயோ போய்விட்டாற் போலிருந்தது. ஆனால் இன்றைக்குக் காலையில், குழந்தைகளின் முகத்தில் தாண்டவமாடிய ஆனந்தத்தைப் பார்த்தபோது ஏழு நாளைக்குச் சாப்பாட்டைப் பற்றிய நினைவே இராதுபோலிருக்கிறது. மனசு, வயிறு எல்லாம் அப்படி நிறைந்திருக்கிறது...அதனாலே இந்தக் கஷ்ட சமயத்திலே ஐந்து ரூபாய் செலவழித்துவிட்டேனே என்று கவலைப் படாதே! சாயங்காலத்துக்குள்ளே ஏற்பாடு பண்ண முடியாமலா போய்விடப் போகிறது? உலகம் அப்படியொன்றும் சிறிது அல்ல!" என்றார்.

இதற்குள், குழந்தைகள் இருவரும் பெற்றோர் பேசிக் கொண்டிருந்த இடத்துக்கு வந்தார்கள்.

"அப்பா! அப்பா! இந்தக் குதிரை கதையிலே வர குதிரை மாதிரி பறக்குமா, அப்பா?" என்று கேட்டாள் சரஸ்வதி.


"ஊம்ம்ம்!" என்றார்.

"இது சமுத்திரத்திலே நீந்துமா, அப்பா!" என்று கேட்டான் ராஜா.

"ஊம்ம்ம்" என்றார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அவள், அவரைப் பார்த்து இலேசாக ஒரு புன்னகை புரிந்தாள். அவரும் சற்றே சிரித்தார்.


உங்களுடைய குழந்தைக்கு
இருவித
போஷாக்கு அவசியம்
ஸ்காட்ஸ் எமல்ஷன் மிகவும் சுத்தமான காட்லிவர் எண்ணெய். இயற்கையின் மிகவும் புஷ்டி மிக்க உணவு டானிக். அதில் விடமின் D நிறைந்திருப்பதால் ஒரு தேக்கரண்டி ஸ்காட்ஸில் நான்கு டம்ளர் பாலில் உள்ள எலும்பு வளர்க்கும் சக்தி நிறைந்திருக்கிறது. ஸ்காட்ஸில் உள்ள விடமின் A குழந்தைகளை தொற்று நோய்களும் இதரவியாதிகளும் அணுகாமல் பாதுகாக்கிறது. ஸ்காட்ஸ் எமல்ஷனை விட எளிதில் ஜீரணமாகக் கூடிய காட்லிவர் எண்ணெயே கிடையாது.
வளர்ச்சிக்கு
குழந்தைகளின் எலும்புகளையும் தசைகளையும் வளர்த்து—அவர்கள் செலவழிக்கும் சக்தியை மீட்டுத்தரவும்—பலத்தையும் வலிமையையும் சேகரித்து வைத்திருக்கவும், அவர்களுக்கு சரியான போஷாக்கு அவசியம். ஸ்காட்ஸ் எமல்ஷனில் எலும்பை வளர்க்கும் சத்துக்களும், வலிமையை உண்டுபண்ணும் போஷணையும் நிறைந்திருப்பதால், அது மேற்கூறிய வேலைகளை செய்கிறது.
நோயை எதிர்க்க
இளம் வயதில் குழந்தைகளின் ஆரோக்கியம் வியாதியால் பீடிக்கப்பட்டால் நிச்சயமாகவும் நிரந்தரமாகவும் பாதிக்கப்படலாம். குழந்தைகளை தொற்றுநோயினின்று காப்பாற்றவும், அவர்களுடைய நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரிப்பதற்காகவும் டாக்டர்கள் ஸ்காட்ஸ் எமல்ஷனை 79 வருடங்களாக சிபார்சு செய்துவருகிறார்கள்
SCOTT'S Emulsion
ஸ்காட்ஸ் எமல்ஷன்
ஒவ்வொரு தேக்கரண்டியிலும்
ஆரோக்கியம் நிறைந்திருக்கிறது
விநியோகஸ்தர்கள்
இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிட்.
கல்கத்தா, பம்பாய், மதராஸ், கொச்சின், புது டெல்லி, கான்பூர்
S.3439



மாணவர்களின் மைசூர்ப் பிரயாணம்

டி. எஸ். ரங்கநாதன்



பிரயாண தினத்தன்று காலை நிகழ்ந்த வாழ்த்து விழாவில் மாணவர்கள்

"நீ இனிமேல் திருச்சிக்குப் போய்ப் படிக்க வேண்டி யிருக்கும். போகிறாயா?"

"ஓ, போகிறேன்!" என்று உடனே ஒப்புக் கொண்டான் அந்தச் சிறுவன்.

அதற்குக் காரணம் ஒன்றிருந்தது. தஞ்சை ஜில்லா வாசியான அந்தச் சிறுவன் வெகு நாட்களாக மலையைப் பார்க்க வேண்டும் என்று ஆசை கொண்டிருந்தான். ஆகவே, திருச்சிக்குப் போனால் மலைக் கோட்டையை யாவது பார்க்கலாம் என்ற காரணத்துக் காக ஒப்புக் கொண்டானாம்.

பிரயாணம் போவது என்றாலே, சிறு பிள்ளைகளுக்கு ஒரு தனியான உற்சாகம் ஏற்படுவது இயற்கை.

சென்ற மாதம் நவராத்திரி விடுமுறையின் போது சென்னை, தியாகராயநகர், ராமகிருஷ்ண மிஷன் பள்ளிக்கூட மாணவர்கள் சுமார் 185 பேரும் ஆசிரியர்கள் 25 பேருமாக பங்களூர், மைசூர் முதலிய இடங்களுக்கு உல்லாசப் பிரயாணம் செய்து வரப் புறப்பட்டோம். அப்படிப் புறப்பட்ட அன்று, காலை கல்கி ஆசிரியரை அழைத்துத் தமது பிரயாண அனுபவங்களைக் குறித்து எங்களுக்கும் மாணவர்களுக்கும் கூறும்படி கேட்டுக் கொண்டோம். 'கல்கி' அவர்கள் தாம் சிறுபையனாக இருந்த போது செய்த பிரயாணங்களைப் பற்றியும், இன்னும் பிற பால்ய நினைவுகளைப் பற்றியும் சிறுவர்கள் சிரிக்கச் சிரிக்கப் பேசி எங்கள் பிரயாணத்துக்கு நல் ஆசி கூறினார். அந்தப் பேச்சின் போதுதான் தமது முதல் திருச்சி விஜயத்தைப் பற்றிய மேற்கண்ட ரகசியத்தை ஆசிரியர் "கல்கி" வெளியிட்டார்.

அந்தச் சிறு கூட்டத்திற்கு ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் ஸ்ரீ கைலாசானந்த சுவாமிகள் தலைமை வகித்துப் பிரயாண கோஷ்டியை ஆசீர்வதித்தார். ராஜாஜியிட மிருந்தும், "ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஒரு மகத்தான ஆன்மீக சக்தி ஊக்கியும் உருவாக்கியும் வருகிறது. எங்கே போனாலும் இதை நீங்கள் நிரூபித்துக் காட்டுவீர்களாக!" என்ற ஆசிச் செய்தி வந்திருந்தது. பின் எங்கள் உற்சாகத்துக்கும் ஒரு எல்லை இருந் திருக்க முடியுமா?

அன்று இரவு பங்களூர் பாஸஞ்சரில் எங்களுக்கென்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட இரண்டு பெட்டிகளில் நாங்கள் ஏறிக் கொண்டோம். எங்களை வழியனுப்பப் பல பிள்ளைகளின் பெற்றோர்கள் சென்டிரல் ஸ்டேஷனுக்கே வந்திருந்தனர். தக்ஷிண ரயில்வேயைச் சேர்ந்த சீப் கமர்ஷியல் சூப்பரின்டெண்ட் ஸ்ரீ எஸ். ஆர். கல்யாணராமன் எங்களை வழியனுப்ப வந்திருந்தது குறிப்பிடப்பட வேண்டிய விஷயம்.

மறு நாள் காலையிலிருந்து, அதாவது பங்களூர் போய்ச் சேர்ந்ததிலிருந்து, ஜாகை, சாப்பாடு முதலியவை சம்பந்தமாக நாங்கள் முன் கூட்டியே ஏற்பாடு செய்து கொண்டிருந்த படியே யாவும் ஒழுங்காக நடந்தன. ஆகவே, எங்கெங்கே எதை எதையெல்லாம் பார்த்தோம், மாணவர்கள் எப்படி அனுபவித்தார்கள் என்பதை மட்டும் இங்கே சுருக்கமாகக் கூறி விடுகிறேன்.

பங்களூரில் இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஸைன்ஸ் என்ற பெயரில் நடக்கும் விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைக்குப் போயிருந்தோம். விஞ்ஞானத்திலேயே மிகவும் ஆழ்ந்து ஊறியவர்களுக்கே, அங்கே நடக்கும் ஆராய்ச்சிகள் முதலியவற்றைக் கேட்டுக் கிரகித்துக் கொள்வது கஷ்டம். அயினும் மாணவர்கள் 'பெரியதோர் ஆராய்ச்சிக் கூடத்தைப் பார்த்தோம்' என்ற திருப்தியடைந்தனர்.


அந்த ஆராய்ச்சிக் கூடத்திலிருந்தபோது, ரஸாயன ஆராய்ச்சியாளர் ஒருவரை, "தாகமாக இருக்கிறது. குடிப்பதற்கு ஜலம் கொடுங்கள்" என்று கேட்டேன். "இதோ, இந்தத் தண்ணீரைக் குடியுங்கள்" என்று அங்கு ஓடிக்கொண்டிருந்த அழுக்குத் தண்ணீரைக் காண்பித்தார். எனக்கு ஆத்திரமாக வந்தது. "குடிக்கத் தண்ணீர் கொடுக்காமற் போனால் போங்கள். என்னை ஏன் இப்படி அவமானப் படுத்துகிறீர்கள்?" என்று அவரைக் கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டே கையில் அந்த ஜலத்தை எடுத்துத் தம் வாயில் ஊற்றிக் கொண்டார். "நாங்கள் ஓர் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறோம். முதலில் இது சாக்கடைத் தண்ணீராகத்தான் இருந்தது. நோய்க் கிருமிகளோ எண்ணி முடியாது. அவ்வளவு இருந்தன. ஆனால் வெகுதூரம் காற்றும் சூரிய ஒளியும் படும்படியாக இத் தண்ணீரை ஓடச் செய்திருக்கிறோம். அதன் பயனாக இதிலுள்ள நோய்க்கிருமிகள் எல்லாம் அழிந்து விட்டன. இத்தண்ணீரை இப்போது சோதனை செய்தாகிவிட்டது. பார்ப்பதற்கு அழுக்காக இருந்தாலும், இது நோய்க் கிருமிகள் அற்ற சுத்தமான தண்ணீர்தான் இப்போது" என்றார். நம் நாட்டில் ஓடும் தண்ணீருக்கு எப்போதுமே ஒரு மகிமை யுண்டு. அதைத்தான் இது நிரூபிக்கிறது என்று நினைத்தேன்.

பிறகு அங்கிருந்து அரசாங்கத்தின் பீங்கான் தொழிற்சாலைக்குப் போனோம். அங்கு சீமைக் களிமண்ணால் பொம்மைகள் செய்யும் விதத்தையும், மின்சார சம்பந்தமான விளக்கு டோம்கள், இன்ஸுலேட்டர்கள் முதலியவை செய்வதையும் பார்த்தோம்.

பிறகு சர் ஸி. வி. ராமனுடைய ஆராய்ச்சிக் கூடத்திற்குப் போனோம். அங்கே சர் ஸி. வி. ராமன் தமிழிலேயே பிள்ளைகளுக்குப் புரியும் வண்ணம் சில விஷயங்களைச் சொன்னார். அவர் பிரசங்கம் புரியும் அறையைப் பற்றிச் சொன்னார். அந்த அறையிலிருந்து பிரசங்கம் செய்பவர் எவ்வளவு மெதுவாகப் பேசினாலும் அந்த அறையின் எந்த மூலையிலிருப்பவர்க்கும் கேட்கும் வகையில் அறை அமைந்திருப்பதாகச் சொன்னார். ஒரு வேளை அந்த அறையில் நடக்கும் பிரசங்கங்கள் கேட்பதற்குத் தலைவலியாக இருந்தால், ஜன்னல் வழியாக நந்தி மலைச் சாரலின் இயற்கை அழகைக் கண்டு ரஸிக்கலாம் என்றும் கூறினார். பிறகு சில தாதுப் பொருள்கள் ஒரு அறையில் வைக்கப் பட்டிருந்ததைப் பார்வையிட்டோம். அவை சாதாரணக் கண்களுக்கு வெறும் கல்லாய்த் தோன்றுகிறது. ஆனால் அவற்றின் மீது அல்ட்ரா வயலட் கிரணங்கள் செலுத்தினால் அற்புதமான பச்சை, சிவப்பு வர்ணங்கள் பளிச்சிடுகின்றன. "இவற்றை எத்தனையோ முறை நான் பார்த்திருக்கிறேன். இன்னும் எனக்கு அலுக்கவில்லை. இயற்கையின் மாயஜாலத்தை நினைக்க நினைக்க அதிசயமாயிருக்கிறது!" என்று வியந்து கூறினார் ராமன். சர் ராமன்



சென்டிரல் ஸ்டேஷனில் பிரயாண கோஷ்டி.



ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி கைலாசானந்தா அவர்கள், ஸ்ரீ ராமகிருஷ்ண உயர்தரப் பள்ளியின் நிர்வாகத் தலைவர் ஸ்ரீ எஸ். கிருஷ்ணய்யர் அவர்கள், பள்ளிக் கூடத்தின் தலைமை ஆசிரியர் ஸ்ரீ என். சுப்பிரமணியம், உதவி ஆசிரியர்களில் சிலர் ஆகியோர் பள்ளி மாணவர்களை ஆசிர்வதித்து வழி அனுப்பினர்கள்.

அவர்களைத் தரிசித்தது, அபூர்வக் கற்களைப் பார்வையிட்டது யாவும் மாணவர்களின் மனத்தில் என்றும் நிலைத்து நின்று இன்பம் அளித்துக்கொண்டேயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பலவன்குடியிலிருக்கும் 'ராமகிருஷ்ண மடத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் வாழ்க்கைத் துணைவியான சாரதாமணி தேவியார் ஜீவியவந்தராக இருந்த காலத்தில் ஒரு சமயம் அந்த ஆசிரமத் தோட்டத்தில் ஒரு கற்பாறையில் அமர்ந்து தியானம் செய்தாராம். அந்தப் புனிதக் கல்லைச் சுற்றி, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கும், சாரதாமணி தேவியாருக்கும், சுவாமி விவேகானந்தருக்கும் மூன்று கோவில்கள் கட்டப்போவதாக ஆசிரமத்தைச் சேர்ந்த யதிச்வரானந்த ஸ்வாமிகள் கூறினர்.

அதற்கு மறுநாள் லால் பாக் என்ற தோட்டத்தில் ஆசிரியர்களும் மாணவர்களும் சிறிது உல்லாசமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தோம். அங்குள்ள மான் குட்டிகள் துள்ளி ஓடுவதைக் கண்டவுடன், கல்கி ஆசிரியர் கோடிக்கரையில் தாம் மான் கூட்டம் ஒன்று துள்ளிக் குதித்து ஓடியதைப் பார்த்து வியந்ததைக் கூறியது, பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் நினைவுக்கு வந்து விட்டது.

பெங்களூரில் இந்திய சர்க்கார் பெரிய மாட்டுப் பண்ணை நடத்துகிறார்கள். அங்கே நூற்றுக் கணக்கான உயர்ந்த ஜாதிப் பசுக்கள், எருமைகள், பொலி காளைகள் இருக்கின்றன. அங்கே இயந்திர சாதனங்களைப் பயன்படுத்திப் பால் கறக்கிறார்கள். ஒரு மாடு சராசரி ஆறு, ஏழு படி பால் கொடுக்கிறது. அங்கு பூர்ணியா ஜாதி எருதுகளும் ஏராளமாக இருக்கின்றன.

மண்டையத்திலிருக்கும் பெரியதோர் சர்க்கரை ஆலையை அடுத்தாற்போல் பார்க்கச் சென்றோம். ஆலை இருக்கும் பிரதேசத்துக்குச் சர்க்கரை நகர் (Sugar Town) என்று பெயர். இந்த ஊர் எங்கே கரைந்து போய் விடுமோ என்ற பயத்தில்தான் இந்தப் பிரதேசத்தில் மழையே பெய்வதில்லை போலும்!

பிறகு நாங்கள் மைசூருக்குப் பிரயாணமானோம். மைசூரில் வாணிவிலாஸ் மொஹல்லாவில் ராமகிருஷ்ண ஆசிரமத்தைச் சேர்ந்த பிரும்மாண்டமான ஹாஸ்டலில் தங்கியிருந்தோம். மைசூர் ராமகிருஷ்ண ஆசிரமத்தைச் சேர்ந்த சுவாமி சாம்பவானந்தா அங்கு தங்கியிருந்த நான்கைந்து நாட்களும் எங்களுக்குச் செய்துள்ள உதவி இவ்வளவு அவ்வளவல்ல. அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த வணக்கங்கள் தெரிவித்துக் கொள்வதைத் தவிர வேறு எவ்வித கைம்மாறு செய்ய இயலும்?

மைசூரில் 'ஜகன்மோகன் பாலஸ்' என்று வழங்கும் சித்திரக் கண்காட்சிச் சாலையைப் பார்த்தோம். அங்கே பல அற்புத சித்தி



தகப்பனார்:— ஏண்டா சந்துரு, உன்னிடம் நேற்றுக் கொடுத்த அரை ரூபாய் எங்கேடா?

சந்துரு:—அரை ரூபாயா, அப்பா? ஆகாசத்திலே பறந்து போய் விட்டது!

தகப்பனார்:—என்னடா, என்னிடம் விளையாடுகிறாய்?

சந்துரு:—நிஜமாகத்தான் அப்பா! அரை ரூபாய்க்கும் ஏரோப்ளேன் வாணம் வாங்கி விட்டேன்!

ரங்களைப் பார்த்தோம். ஒரு பெண் கையில் விளக்கு ஏந்தி நின்றுகொண்டிருந்தாள். உள்ளே நுழைந்து நெருங்கியவுடன்தான், அது நிஜ உருவமல்ல, சித்திரம் என்பது தெரிந்தது.

பொருட்காட்சிச் சாலை, மகாராஜா தர்பாரில் வீற்றிருக்கும் காட்சி, தேஜோ மயமாகப் பிரகாசிக்கும் மின்சார விளக்கு ஜோடனைகள் யாவும் மாணவர்களுக்கும் பெரியவர்களுக்கும் எங்கே கந்தர்வ லோகத்துக்கே வந்து விட்டோமோ என்ற மலைப்பை உண்டாக்கியது.

ஸ்ரீரங்கப் பட்டணத்திலுள்ள [பழங்காலக் கோட்டையையும் அகழிகளையும் பார்த்தோம். ஹைதர், திப்பு இவ்விருவரும் ஆங்கில ஆட்சியை எதிர்த்து நின்று போராடிய தீரர்கள். இன்றும் அந்தப் பக்கத்து வாசிகள் அவர்களைப் பற்றிய வீரக் கதைகளை அங்கு வருவோர்களுக்குச் சுவை படக் கூறி வருகின்றனர். அங்கே சில பாதாள அறைகள் இருக்கின்றன. அவற்றில் தாம், ஆங்கில தளகர்த்தர்களைச் சிறைப்பிடித்து வைத்திருந்து கடும் தண்டனை விதித்தார்களாம் ஹைதரும் திப்புவும். திப்பு, தனது கடைசி மூச்சு இருந்த வரை ஆங்கிலேயரை எதிர்த்துச் சண்டை செய்து வீரமரணம் எய்திய இடத்தைப் பார்வையிட்டோம். கல்கி ஆசிரியர், அந்த வீர பூமியைத் தவறாமல் பார்த்து வரும்படி சொல்லியிருந்தார். அவர் ஏற்கெனவே திப்புவைப் பற்றிக் கூறி யிருந்ததால், அந்த இடத்தைப் பார்த்தபோது மாணவர்களுக்கு அப்படியே மெய்சிலிர்த்து விட்டது.

இந்திய அரசாங்கத்தின் உணவு ஆராய்ச்சிச் சாலைக்குச் சென்றிருந்தோம். அங்கே செயற்கை முறையில் தயாரிக்கப்படும் அரிசியையும் பார்வையிட்டோம். இதன்றி, நிலக் கடலையிலிருந்து பால் தயார் செய்கின்றனர். இந்தப் பாலை, பசுவின் பாலை உபயோகிப்பது போலவே, காப்பிக்கும் தயிருக்கும் உபயோகிக்கலாம் என்று அங்கிருந்த ஆராய்ச்சியாளர் கூறினார். பாலிலுள்ள உணவுச் சத்தைவிடச் சற்று அதிக உணவுச் சத்து இருப்பதாகவும் கூறினார். மைசூரிலுள்ள ஹோட்டல்களில் கொடுக்கப்படும் காப்பி பூராவும் இந்த நிலக் கடலைப் பாலை விட்டுத் தான் தயார் செய்கிறார்கள் என்று வேறு கூறினார். அது எவ்வளவு தூரம் உண்மை என்பதைச் சோதிக்க நாங்கள் தலைப்படவில்லை.

கிருஷ்ணராஜஸாகரம், கண்ணம்பாடி அணை இவைகளைப் பார்க்கப் போயிருந்தோம். நல்ல மழையின்மையால் சாகரம் வெறும் ஏரியாகத் தோற்றமளித்தது!

இரவு வேளையில் பிருந்தாவனத்தில் வர்ண பேதங்கள் இறைத்துத் தண்ணீர் புரியும் அற்புதக் காட்சிகளை மாணவர்கள் கண்டு உற்சாகமும் குதூகலமும் அடைந்தனர்.

இவையெல்லாம் பார்த்து விட்டு, நாங்கள் ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்தால் எங்களுக்கு இன்னொரு அதிசயம் காத்திருந்தது. எங்களுடன் வந்த மாணவர்கள் ஐந்தாறு பேருக்கு ஜுரம் வந்துவிட்டது. அவர்களை ஹாஸ்டலில் விட்டு விட்டுத் தான் மற்ற மாணவர்களும், ஆசிரியர்களும் கண்ணம்பாடி சென்றோம். ஆனால் இந்த மாணவர்களை சுவாமி சாம்பவானந்தா அவர்கள் ஆசிரமத்துக் காரில் கிருஷ்ணராஜசாகரம், பிருந்தாவனம் எல்லாம் காண்பித்து விட்டு அழைத்து வந்திருந்தார். ஆகவே நாங்கள் பிருந்தாவனத்திலிருந்து திரும்பி வந்தவுடன் இந்த மாணவர்கள் தாங்களும் இதெல்லாம் பார்த்ததாகக் கூறவே, எங்களுடைய ஆச்சரியத்துக்கு எல்லை இல்லை. சுவாமிகளின் மறைமுகத் தொண்டை நினைத்துப் பெரிதும் வியந்தோம்.

ஆசிரமத்தில் ஒரு சிறு விழா நடந்தது. எங்களுக்காக மைசூர் மகாராஜா அவர்கள் எங்களை வரவேற்று எங்களுக்கு நல்வரவு கூறி ஆசிச்செய்தி அனுப்பி யிருந்தார். அது எங்களுக்கு வாசித்து அளிக்கப்பட்டது: "உங்கள் வரவு நல்வரவாகுக. ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸருடைய முதல் சீடரான சுவாமி விவேகானந்த சுவாமிகள் என் பாட்டனார் காலத்தில் இந்தச் சமஸ்தானத்துக்கு எழுந்தருளி யிருந்தார். அதற்குப் பிறகு இந்தச் சமஸ்தானம் பல துறைகளிலும் வெகுவாக முன்னேறி யிருக்கிறது. ஆகவே, உங்களுக்கு இந்த விஜயம் மகிழ்ச்சியூட்டுவதாகவும் அறிவூட்டுவதாகவும் இருக்கும்

என்று நம்புகிறேன்.'' அந்த நிகழ்ச்சியின் போது மைசூர் பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ தாசப்பா அவர்கள் மாணவர்களுக்குச் சில நல்லுரைகளைக் கூறினர்,

நாங்கள் பத்ராவதி போவதாக முதலில் திட்டம் வகுத்திருந்தோம். ஆனால் பத்ராவதிக்குப் போகும் மார்க்கத்தில் காலரா இருப்பதாகச் செய்தி வரவே, அத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தோம். அந்தச் சமயத்தில் ஆசிரமத் தலைவர் ஸ்ரீ சாம்பவானந்தா, அரை மணி நேரத்தில் எங்களைச் சிவசமுத்திரம் அருவிக்குப் போய்வர ஏற்பாடு செய்து விட்டார். அன்று 'கல்கி' ஆசிரியர், ''எத்தனை பேர் அருவியைப் பார்த்திருக்கிறீர்கள்?'' என்று கேட்ட போது வெகு சொற்பப் பேரே கையைத் தூக்கினர். ஆனால் இப்போது கேட்டால் அத்தனை பேரும் பெருமிதத்தோடு கை தூக்குவார்கள். அதற்குக் காரணம் சுவாமிகளே. சுவாமிகளின் செல்வாக்கை அறிந்த போதுதான், ''ஒன்றுமிலார்க்கு இயையாதவை யாவையே!'' என்ற மணிவாக்கின் உண்மை புலப்பட்டது.

பள்ளிக்கூடத்தில் மின்சார உற்பத்தி செய்யும் விதத்தைப் பற்றி நாங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்கும் முறையிலிருந்து, அருவியிலேயே பல் சக்கரம் வைத்து மின்சாரம் உற்பத்தியாகிறது என்றுதான் நினைத்துக் கொண்டிருப்பார்கள். அப்படியல்ல, அருவியிலிருந்து தண்ணீரை வாய்க்கால் வழியாகக் கொண்டுவந்து இயந்திரங்களை இயக்கி மின்சாரத்தை உற்பத்தி செய்கிறார்கள் என்பதை சிவசமுத்திர மின்சார உற்பத்திச் சாலைக்கே அழைத்துப் போய்க் காண்பித்தோம். அது சுமார் நேர் செங்குத்தாக அளந்தால் 400 அடி கீழே இருக்கிறது. ஆனால் டிராலியின் மூலமாகச் சென்றால் 700 அடியாகும் ஒரு டிராலியில் பத்து அல்லது பன்னிரண்டு பேர்தான் உட்காரலாம். இப்படி டிராலியில் சென்று அத்தனை மாணவர்களும் ஆசிரியர்களும் மின்சார உற்பத்திச்சாலையைப் (Power-House) பார்த்துவிட்டு வந்தோம். மாணவர்களுக்கு டிராலியில் சென்றது அசாத்திய உற்சாகத்தை அளித்தது!

சிவ சமுத்திரத்துக்குப் போகும் வழியில் சோமநாதபுரத்திலிருக்கும் ஆலயத்துக்கும் போயிருந்தோம். மைசூரில் கலைக்குப் பேர் போன ஆலயத்துச் சிற்பங்கள், மூக்கு உடைந்து, கை உடைந்து நின்றாலும், அவையெல்லாம் நிறைவு பெற்றிருந்தால் எவ்வளவு அழகாக இருந்திருக்கும் என்ற வியப்பையுண்டாக்கியது.

இன்னும் எத்தனையோ இடங்களுக்குப் போய் வந்தோம். இப்படிச் சுமார் ஒரு வாரம் மாணவர்களும், ஆசிரியர்களும் வீட்டை மறந்து, பள்ளிக்கூடத்தை மறந்து பல அரிய விஷயங்களை அறிந்து கொண்டோம். மைசூரில் எவ்வளவோ சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் பொழுதைப் போக்கினோம்.

கந்தன் நல்லவன்

அனந்தன்



பழக் கடைகளின் பக்கத்திலுள்ள சாலையில் கூடையைத் தலையில் கவிழ்த்துக்கொண்டு கந்தன் நின்று கொண்டிருந்தான். குச்சிபோலிருந்த அவனது பிஞ்சுக் கால்களில் முழங்கால் மட்டும் ஒரே புழுதி. அவைகளும் நிற்க மாட்டாமல் தள்ளாடியதாலோ என்னவோ கூடையைக் கவிழ்த்துக் கீழே போட்டுக்கொண்டு கந்தன் அதன்மேல் உட்கார்ந்தான்.

குழைந்து கிடந்த வயிற்றை அவனது இடது கை அமுக்கிப் பிடித்துக் கொண்டது. அவனது கண்கள் சற்று தூரத்தில் பிளாட்பாரத்தின்மீது சோறு பொங்கிக் கொண்டிருக்கும் தாயையே உற்று கவனித்தது. அதோடு அவனது தங்கை தாயின் முதுகைப் பிடித்துக் கொண்டு அழுவதையும் கண்டது.

அழுகி, நசுங்கிப் போன கதம்பக் காய் கறிகளை அடுப்பிலுள்ள சட்டியில் வேகப் போட்ட காத்தாயி, திட்டுத் திட்டாக எண்ணெய்பட்ட இடங்களைப் போலத் தெருப் புழுதி ஒட்டிக் கொண்டிருக்கும் தன் சேலை மேலும் கிழிந்து போகாதவாறு இழுத்து விட்டுக் கொண்டே எழுந்திருந்தாள். அப்பொழுது கூடையின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்த கந்தன் மேல் அவள் பார்வை விழுந்தது.

“ஏண்டா, இங்கே குந்திகிட்டு இருக்கே? ஏதாச்சும் துட்டு கொண்டாந்தயா இல்லையா?” என்று கேட்டுக் கோபத்தோடு புருவத்தை நெரித்தாள்.

கந்தன் உதட்டைத்தான் பிதுக்கினான். பேச அவன் உடலில் சக்தியில்லை.

அதைப் பார்த்த காத்தாயியின் முகமும் மாறிற்று. “கேட்கிறேன், என்னடா உதட்டைப் பிதுக்கறே? அப்பப்ப கிடைக்கிற துட்டுக்கெல்லாம் ஏதாச்சும் வாங்கித் தின்னு விடுகிறாயோ, என்னவோ?” என்று சீறினாள். ஆனால் தனக்குக் கிடைக்கும் கூலி முழுவதையும் அவன் அப்படியே அவளிடம் கொண்டுவந்து கொடுத்து விடுகிறான் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்?

“உண்மையாக எனக்குக் கிடைக்கிற துட்டு எல்லாத்தையும் உன்னிடம் கொண்டு வந்து கொடுத்துடறேன், அம்மா! அதிலே காலணாகூட நான் செலவு செய்கிறது கிடையாது. இன்னிக்கு எனக்கு கூலியே வரவில்லை. வந்ததே நாலணா வரும்படிதான்” என்று கண்களில் நீர் ததும்பக் கந்தன் முனகினான்.

“சோத்துப் பானையைச் சுத்திச் சுத்தி வந்தா கூலி தானே வந்து கிடைக்குமோ? இப்போ சோறு ஆக்கறத்துக்குள்ளேயும் இரண்டு வாட்டி ஸ்டேஷனுக்கும், கொத்தவால் சாவடிக்கும் போய் விட்டு வரலாமே!” என்று காத்தாயி சொல்லி முடிப்பதற்குள் “சோறு தின்னு விட்டு நான் போறேன், அம்மா! பசி வவுத்தைச் சுருட்டுது” என்று கந்தன் தொப்பென்று கீழே உட்கார்ந்தான்.

இது காத்தாயிக்குத் தெரியாது என்பதல்ல. வறுமையின் கொடுமையினால் அவள் உள்ளம் அடிக்கடி தான் பெற்ற குழந்தைகளிடமே வெறுப்பைக் கக்கி வந்தது.

“சோறு தின்ன உடனேயே போயிடறேன், ஆத்தா”, என்று அலறிய கந்தன் குரல் அவள் காதில் விழவேயில்லை. வெறி பிடித்தவளைப் போலச் சுரீர் சுரீர் என இரண்டு விறு விறிவிட்டாள். அடி பொறுக்க மாட்டாத கந்தன் வெடுக்கெனத் தன் கையை அவள் பிடியிலிருந்து உதறிக் கொண்டான். ஆனால் மறுகணம் அதே வேகத்தில் சாலையில் போய்க் கொண்டிருந்த காரின் அடியில் போய்த் தடாரென விழுந்தான்.

வீலென அலறிய காத்தாயி இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டாள். அவள் உடல் ஆழம் காணாத பயத்தில் வெட வெடவென்று நடுங்கிற்று.

திடீரென்று ப்ரேக் போடப்பட்டதின் காரணமாகச் ‘சர்ர்’ ரென்ற பெரிய சத்தத்தோடு அந்தக் கார் உடனே நின்றது.

கண்ணைத் திறந்த காத்தாயி, காரின் பக்கத்தில் உயிருக்கு ஆபத்து ஒன்றுமில்லாமல் கிடக்கும் கந்தனைக் கண்டவுடன் ஓடிப்போய் அவனை எடுத்து அணைத்துக் கொண்டாள். உடலில் ஏற்பட்ட அதிர்ச்சியால் கந்தன் விம்மினானே தவிர அவனால் பேச முடியவில்லை.

டிரைவர் இவர்களைத் திட்டிக் கொண்டே காரை மறுபடியும் கிளப்பிக் கொண்டு போய்விட்டான்.

'சோறு சோறு' என்று கேட்ட குழந்தை காருக்கு அடியில் அகப்பட்டு இறந்திருந்தால்?' என்று காத்தாயி எண்ணினாளோ, என்னவோ, "கந்தா, சோறு திங்க வா", என்று அவனைப் பரிவோடு வாய் குழற அழைத்தாள்.

தாயின் உள்ளத்தைத் தன் கற்பனையால் தொட்டுப் பார்த்த கந்தன், "ஆண்டவன் இருக்காரு அம்மா, நம்மைக் காப்பாத்த! இதுக்கு நீ ஏன் அழுவறே? நீ சோறு பொங்கு. நான் அதற்குள்ளாகக் கொத்தவால்சாவடிக்குப் போய்விட்டு வந்துடறேன்" என்று கூறி எழுந்தான். துன்பத்தை மறந்திடும் குழந்தை தானே அவன்!

காத்தாயி, "வேண்டாம், கந்தா!" என்றாள்.

"இல்லே, அம்மா! இன்று முழுவதும் நான் நாலணாகூடச் சம்பாதிச்சுக் கொடுக்கவில்லே. நீதான என்ன பண்ணுவே... பாக்குக் கடிக்கிற நேரத்திலே ஒரு நடை போய் வந்துடமாட்டேனா!" என்று சொல்லிக் கொண்டே கந்தன் கூடையை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

கந்தன் உருளைக் கிழங்கு மண்டியின் வாசலில் போய் நின்றான். அவன் கண்கள் அங்கே நின்ற ஒரு வைரக் கடுக்கன்காரரையே சுற்றி வட்டமிட்டன.

"எடுங்க சாமி, கிழங்கு விசை பத்தணா, விசை பத்தணா", என்று கடைக்காரன் ஜில் ஜில்லென சும்மாவாவது தராசை எடுப்பதும் வைப்பதுமாக ஓசைப்படுத்திக் கொண்டிருந்தான்.

வைரக் கடுக்கன்காரர் கிழங்கு ஒன்றை எடுத்து அழுத்தியும், அமுக்கியும் ஏனோ முகர்ந்தும் கூடப் பார்த்தார்.

"சாமி, கூலியிருக்குங்களா?" என்றான் கந்தன். கைக் கிழங்கைத் தொப்பென்று சாக்கில் போட்டவர், திரும்பிப் பார்த்தார். கந்தனது பரதைக் கோலத்தைக் கண்டவுடன் அவர் உள்ளம் ஏனோ பதறிற்று. சட்டெனச் சட்டைப் பையிலுள்ள பர்ஸைத் தம் சட்டையோடே சேர்த்துப் பிடித்துக் கொண்டவர், "தூரப் போடா! யாரும் இங்கே ஏமாந்திருக்கவில்லே, உன்கிட்டே பர்ஸைக் கொடுத்து விட்டு நிற்க! கழுதை மாதிரி மேலே வந்து உரசிக்கிட்டு நிற்கிறதைப் பாரு" என்று அவனை அடிக்கமாட்டாக் குறையாகச் சீறினார்.

"திருடறது என் தொழில் இல்லேங்க. 'உழைச்சுப் பிழை கந்தா... திருடாதே, பிச்சை வாங்காதே', என்று எங்க அம்மா சொல்லிக் கொடுத்திருக்காங்க. கூலி இருக்குங்களா? சுமை தூக்கிக்கொண்டு வருகிறேன் என்று தான் கேட்டேன்!" என்றான் கந்தன் குழைவோடு. அதை அந்த மகானுபாவர் பொருட்படுத்தவேயில்லை.


கந்தன் கொத்தவால் சாவடி முழுவதும் சுற்றி, கண்ணில் கண்டவர்களையெல்லாம் கூலி கேட்டான். இவன் என்ன? இவனைப் போலவே இன்னும் அனேக நூற்றுக் கணக்கான கூலியாட்களும் கொத்தவால் சாவடிக்குள் சுற்றிச் சுற்றித் தான் வந்து கொண்டிருந்தார்கள்.

பல தடவை சுற்றியும் கூலி கிடைக்காததால் கந்தன் உள்ளத்தில் மனச்சோர்வு அதிகரிக்க ஆரம்பித்தது. இருந்தாலும் வெறுங் கையுடன் அம்மாவிடம் திரும்பிச் செல்ல அவன் விரும்பவில்லை. ஏதாவது சம்பாதிக்க வேண்டுமென்ற வைராக்கிய உள்ளத்தோடு, சாவடியை மறுமுறையும் சுற்றி வந்தான்.

இரண்டடி கூடச் சென்றிருக்க மாட்டான். தூரத்தில் ஒருவர் கையில் காதறுந்த இரண்டு மூன்று பைகளுடன் நடக்க முடியாமல் நடந்து வருவதைக் கண்டான். போதாக் குறைக்கு அவரது வேஷ்டி வேறு அவிழ்ந்து தரையிலே எந்த வினாடி விழுமோ என்ற நிலையிலே தொங்கிக் கொண்டிருந்ததையும் கண்டவன், "சாமி, சுமை தூக்கி வரட்டுங்களா?" என்று கேட்டுக் கொண்டே அவரிடம் ஓடினான். கஜேந்திரனைக் காப்பாற்றச் சென்ற சக்கரதாரியாக இவனை அவர் எண்ணினாரோ என்னவோ, முகத்தில் மலர்ச்சி தோன்ற, "கோட்டை ஸ்டேஷனுக்குக் கூலி என்னப்பா?" என்றார்.

கந்தன், "ஏதாவது கொடுங்க சாமி" என்று அவர் கைப் பையைத் தான் முதலில் பிடுங்கச் சென்றான்.

பைக்காரர், கந்தனை ரிக்ஷா வண்டிக்காரன் என்று எண்ணினாரோ என்னவோ, "முத



கடைக்காரர்: பீரோவில் எவ்வளவோ புஸ்தகம் இருக்கிறது. முட்டுக் கொடுத்திருக்கிற புஸ்தகம்தான் வேணும் என்கிறீர்களே......ஏன்?

வந்தவர்: எங்கள் வீட்டிலும் ஒரு பீரோவுக்கு இதேமாதிரி முட்டுக் கொடுக்க அது வேண்டியிருக்கிறது!

பிலே கூலி இவ்வளவுதான்னு கண்டிப்பாய்ப் பேசிவிடு, சொல்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே அவன் கையில் பையை விடாமலேயே நிமிர்னார்.

"சாமி, நாலணா கொடுங்க! நான் தூக்கிக் கிட்டுப் போறேன்'' என்று அவர்களிடையே புகுந்தான் மற்றொரு பெரிய ஆள். கந்தன் அந்தப் பெரிய ஆளை வெட்டி விடுபவனைப் போலப் பார்த்து விட்டு, "சாமி! நான் தாங்க முதல்லே கூலி கேட்டேன். என் கிட்டேதான் பையைக் கொடுக்கணும்'' என்று கெஞ்சிக் கொண்டே பையை வாங்கக் கையை நீட்டினான்.

"போடா பொடிப்பயலே! நானும்தான் முதல்லேயே வந்துட்டேனேடா'' என்ற அந்தப் பெரிய ஆள், "இங்கே கொடுங்க சாமி, பையை. அவன் கிடக்கிறான் வாண்டுப் பயல். முதல்லே இரண்டு பையைச் சேர்த்துத் தூக்க உடம்பிலே தெம்பு கிடையாது'' என்று கந்தனது கைகளை அப்பால் தள்ளிவிட்டு அவர் கைப் பையைப் பிடுங்கிக் கொண்டுபோனான். அவர் அவன் பின்னாலேயே ஓடினார்.

கந்தன் ஏமாற்றத்தோடு நின்றான். 'கந்தா, மரம் நட்டவன் தண்ணி ஊத்துவான். அதனாலே யார் கிட்டேயும் சண்டைக்குப் போகாதே!' என்ற அவன் தாய் வார்த்தைகள் ஞாபகத்திற்கு வரவே, 'தோல்வியிற் கலங்கேல்' என்றபடி தன் கோபத்தை அடக்கிக் கொண்டு மெள்ள நகர்ந்தான்.



"ஸார், காலணா கொடுங்க, ஸார்!'' என்ற சத்தம் வந்த பக்கம் கந்தன் திரும்பினான்.

"ஏலே கந்தா, கூடையைத் தலையிலே கவிழ்த்துக்கிட்டுச் சாவடியைச் சுத்திச் சுத்தி வந்தயே! எம்புட்டுக் கூலிகிடைச்சுது? இதோ பார்த்தியா, கொஞ்ச நேரத்திலே பத்தணா சேர்த்துப்புட்டேன்!'' என்று ஒரு சிறுவன் உற்சாகத்தோடு ஒரு அணாவை மேலே சுண்டிவிட்டுப் பிடித்தான்.

வேலை கிடைக்காததாலோ, சோம்பேறித் தனத்தாலோ பிச்சை வாங்கும் அவனது சகபாடியை ஆர்வத்தோடு கந்தன் ஒரு கணம் பார்த்தாலும் மறு நிமிஷம் வெறுப்போடு முகத்தைச் சுளித்துக் கொண்டான்.

"அம்மா சொன்னாப்பலே, நான் உழைத்து உண்ணுவேனே தவிரப் பசியாலே செத்தாலும் பிச்சை வாங்க மாட்டேன்'', என்று முனகிக் கொண்டே தலை குனிந்த வண்ணம் நடந்தான்.

சற்று தூரம்கூடப் போயிருக்க மாட்டான். "டேய்! டேய்!'' என்ற குரல் கேட்டுத் திரும்பினான். ரிக்ஷாவில் வந்து கொண்டிருந்த மிலிட்டரி-ஹோட்டல் முதலாளி அப்துல்காதர் கந்தனைப் பார்த்துச் சிரித்ததோடு, "வாடா தம்பி, கூலியிருக்குது!'' என்று அவனைக் கூப்பிட்டார்.

கந்தன் ஒரு குதி குதித்துக் கொண்டு அவர் ரிக்ஷாவின் அருகில் ஓடினான். அவன் முகத்தில் தெளிவும் மலர்ச்சியும் காணப்பட்டது. இரண்டு மூன்று வாரமாகக் கந்தன் தான் அவருக்குச் சாமான் தூக்கிச் செல்வது வழக்கம். குறைந்த கூலிக்குத் தூக்கி வருகிறான் என்பதனாலோ, பையன் யோக்கியமானவன் என்பதனாலோ கந்தனைத்தான் காதர் கூலிக்கு அமர்த்திக் கொள்வார். அதோடு கந்தனிடம் சாமானைத் தூக்கிவிட்டு விட்டு, காதர் பின்னோடு போகவேண்டுமென்பதும் கிடையாது. கந்தனுக்கு அவரது கடை தெரியுமாதலால் காதர் சாயபு வருவதற்கு முன்னதாகவே அங்கே போய்க் காத்துக் கொண்டிருப்பான்.

காதர் சாவடியை எவ்வளவு தடவை சுற்றி வந்தாரோ அவ்வளவு தடவை கந்தனும் அவர் பின்னாலேயே தலையில் கூடையுடன் சுற்றிவந்தான். கடைசியில் ஒரு கால் பவுண்டு பெப்பரமெண்டும், கால் டஜன் ஆஸ்டிரேலியா ஆப்பிள் பழமும் வாங்கிக் கூடையில் போட்டவர், "டேய், கூடையைக் கடைக்கு எடுத்துக்கிட்டு போ. நான் வந்துடறேன்'' என்று சொல்லிவிட்டுக் காதர் ரிக்ஷாவில் ஏறிக் கொண்டார்.

சீத்தாயி உணவை ஆக்கி அழுது கொண்டேயிருந்த பெண் குழந்தைக்குப் போட்டாள். தானும் உண்டாள். கந்தன் வராததால் அவனது பங்கை எடுத்துத் தனி

யாக மூடி வைத்துத் தன் பெண்ணையும் காவல் வைத்துவிட்டு வழக்கம்போலப் பழக்கடையிலிருந்து ஆரஞ்சுப் பழங்களை எடுத்துக்கொண்டு விற்கச் சென்றான். நூறு பழம் விற்றுத் தந்தால் இவ்வளவு பணம் என்று கடைக்காரர்கள் இவர்களுக்குக் கூலி கொடுப்பார்கள். கந்தனைக் காணோமே என்ற கவலையாலேயே அவள் கொத்தவால் சாவடியிலிருந்து வெளியே வரும் பாதையிலே நின்று பழம் விற்றுக் கொண்டிருந்தாள்.

கூடை கனத்தால் கழுத்து நரம்பு புடைக்கக் கந்தன் கால்களைப் பின்னிப் பின்னிப் போட்டுக்கொண்டு ஓட்டமும் நடையுமாக வருவதைக் கண்ட அவள் உள்ளம் பச்சாதாபப்பட்டது. "கந்தா! யாருக்குக் கூலி தூக்கிக்கிட்டு போறே? பின்னாடி யாரையும் காணோமே!" என்றாள்.

"மிலிட்டரி கடைக்காரருக்குத் தான் தூக்கிக்கிட்டுப் போறேன், அம்மா! அவருடைய கடை எனக்குத் தெரியும்", என்ற கந்தன் கூடையைத் தூக்கி நன்றாக வைத்துக் கொண்டான். அவனது கழுத்து நெரிந்து கிடப்பதையும், அவனது வயிற்று நரம்பு சுருட்டிக் கொண்டு குழைந்து கிடப்பதையும் கண்ட காத்தாயியின் தாயுள்ளம் இளகி விட்டது.


"கந்தா! கூடையை இங்கேயே இறக்கி வச்சிட்டுப் போய்க் கஞ்சி குடிச்சிட்டு வந்து தூக்கிக்கிட்டுப் போயேன். அப்பவே வவுத்தைப் பகக்குதுன்னயே!" என்றாள், கண்களில் நீர் பொங்க. கந்தன்முதலில் ஊஹூம் என்றாலும் பசி உண்மையில் அவன் காதை அடைத்ததால் தாய் வார்த்தையைத் தட்டவில்லை. கூடையைக் கீழே இறக்கி வைத்துவிட்டு, கந்தன் நெற்றியிலும், முகத்திலும் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளை அரை வேஷ்டியால் துடைத்துக் கொண்டே, "இதைக்கொண்டு போய்க் கொடுத்தா ஐயா உடனே நாலணா கொடுப்பாரு!" என்றான் உள்ளப் பூரிப்போடு. அந்தச் சின்ன உள்ளத்திற்கு நாலணா பூரண திருப்தியை அளித்தது.

ஆனால், 'பு' எனப் பெருமூச்சு விட்டாள் காத்தாயி. அல்லும் பகலும் அன்றாடம் வறுமையில் அல்லற்படும் அவள் உள்ளத்திற்கு நாலணா ஒரு பெரிய வருமானமா?

கந்தன் அதைப் பொருட்படுத்தாமல் இரண்டு எட்டில் ஓடிப்போய்க் கஞ்சியைக் குடித்துவிட்டு வந்தான். அவன் வரும் வரையில் காத்தாயி அந்தக் கூடையின் அருகிலேயே நின்று பழம் விற்றுக் கொண்டிருந்தாள். உணவு உண்டிருக்கும் வயிற்றை இறுக்கிக் கச்சம் போட்டுக் கொண்ட கந்தன், "அம்மா, எனக்கு ஏன் அதிகமாகக் கஞ்சி வச்சிருக்கே......நீ, தங்கச்சி யாரும் சாப்பிடவில்லையா?" என்றான்.

அவனது முக மலர்ச்சியைக் கண்டு உள்ளுக்குள் மகிழ்ந்து காத்தாயி, "நீதானே ரொம்பவும் வவுத்தைப் பசிக்குதுன்னே? அதனாலேதான் உன் தங்கச்சிக்குக் கூடக் கொஞ்சம் தான் போட்டேன்!" என்றாள்.

"அப்போ சரி. நான் எனக்கு வச்சிருந்ததிலே கொஞ்சம்கூடத் தங்கச்சிக்கிட்டே



கொடுத்து விட்டு வந்துட்டேன்!'' என்று சொல்லி விட்டுக் கந்தன் கூடையைத் தூக்கிக் கொண்டு நடந்தான்.

காதர் கடையை அவன் அடைவதற்குள் இருட்டி விட்டது. கந்தனுக்கு முன்பே கடையை அடைந்த காதர் வழக்கம் போலக் கந்தன் இல்லாததால் உள்ளூரும் வெளிக்குமாகப் புனுகுப் பூனையைப் போல நடையிட்டார். கவலை படிந்திருந்த அவர் முகத்தில் கந்தனைக் கண்டவுடன் தான் தெளிவு ஏற்பட்டது.

''ஏண்டா, தம்பி! இவ்வளவு நேரம்?'' என்று கேட்டுக் கொண்டே அவன் தலைக் கூடையை இறக்கினார்.

''சோறு தின்னுபிட்டு வந்தேனுங்க. அதனாலேதான் நேரமாகி விட்டது'' என்று சொல்லிக் கந்தன் கூடையை இறக்கி வைத்து விட்டுப் பெரு மூச்சு விட்டான்.

காதர் மடியிலிருந்த நாலணாவை எடுத்து அவன் கையில் போட்டுவிட்டுக் கூடையிலிருக்கும் சாமான்களை எடுத்து வைத்துக் கொள்ளலானார். கந்தன் நாலணாவைத் தனது வேஷ்டியில் முடி போட்டுக் கொண்டே நின்றான்.

மறு கணம் காதர் திடுக்கிட்டு நிமிர்ந்தார். ''டேய், இதிலிருந்த மிட்டாய்ப் பொட்டலம் எங்கேடா?'' என்ற வார்த்தைகள் கந்தன் உள்ளத்தில் ஆயிரம் தேளைப் போலக் கொட்டிற்று.

பரபரப்பும் பீதியும் அடைந்த கந்தன், ''கடையிலேயே ... ஒரு வேளை...மிட்டாய்ப் பொட்டலம் விட்டுப் போச்சோ......!'' என்றான் சந்தேகத்துடன்.

''அயோக்கியப் பயலே, யார்கிட்டே காது குத்தரே? மரியாதையாகச் சொல்லிவிடு...நீ எடுக்க வில்லையா?'' என்று காதர் உறுமினார்.

கந்தன் உடல் கிடுகிடுத்தது. ''உண்மையாகச் சொல்றேனுங்க...எங்கம்மா திருடக்கூடாதுன்னு சொல்லியிருக்காங்க.......!''

காதர் கந்தனை மேலே பேச விடவில்லை. அந்தப் பொட்டலத்தைத் தவிர வேறு எதுவும் கெட்டுப் போகாததாலோ என்னவோ, ''போடா திருட்டுக் கழுதே'' என்று சொல்லி அவன் கழுத்தைப் பிடித்துக் கடையை விட்டு வெளியே தள்ளினார்.

கந்தனுக்கு முன் அவனது கூடையும் குடுகுடுவெனக் காதர் உதைத்த உதையில் நடு ரோடில் உருண்டு கொண்டுபோய் விழுந்தது.

ரோடில் விழுந்த தன்னை யாரோ தூக்குவதை உணர்ந்த கந்தன் திரும்பினான். பிரேதம் போல் வெளிறிக் கிடக்கும் தன் தாய் காத்தாயியைக் கண்டவுடன், ''அம்மா, நான் திருடல்லே!...சத்தியமாச் சொல்லறேன்... நான் திருடல்லே!'' என்று அலறினான் கந்தன்.

காத்தாயியின் மடியிலிருந்து கீழே விழுந்த பொட்டலத்தை அவன் பார்க்க வில்லை. உழைத்து, அலுத்து, பசியோடு வரும் தன் குழந்தைக்கு அதைக் கொடுக்க எண்ணிக் காத்தாயி அதை எடுத்தாளோ என்னவோ? கடைக்காரன் கவனித்து விட்டால் கொடுத்து விடலாம். இல்லா விட்டால் வைத்துக் கொண்டு விடலாமென எண்ணிக் கந்தன் பின்னோடேயே ஓடிவந்தாளோ என்னவோ?

தன்மை இழக்காது, தாழ்ந்து நடவாது, 'கற்றதொழுகு' என்றபடியே நடந்துவரும் கந்தன் தனக்கு ஏற்பட்ட பழியைக் கண்டு அலறினான். அவன் அலறுவதைக் கண்டு காத்தாயியால் சும்மா இருக்க முடியவில்லை.

''கந்தா! நீ திருடவில்லையடா!...நான் தான் திருடிவிட்டேன். இதோ கிடக்குதே பொட்டலம்!'' என்று தன் குற்றத்தை ஒப்புக்கொண்டவள் தணல்போலக் கொதிக்கும் மகன் உடலைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

கந்தன் உடலை உதறிக் கொண்டான். ''அம்மா, நீயா திருடினே? எனக்கு புத்தி சொல்லி வரும் நீயா திருடினே?'' என்ற வார்த்தைகள் ஆச்சரியத்தோடும், கோபத்தோடும் அவன் வாயிலிருந்து உதிர்ந்தன.

''புத்தி சொல்றவங்கள் எல்லாம், தாங்கள் சொல்றபடியே எப்போதும் நடந்துப்பாங்கன்னு எண்ணாதே, கந்தா!'' என்று கூறிக் காத்தாயி தன் முன்னே நிற்கும் கந்தன் முகத்தைக் கூடப்பார்க்க வெட்கப் பட்டவளாய்த் தலையைக் குனிந்து கொண்டாள். சில விநாடிகள் யோசனையில் ஆழ்ந்திருந்த கந்தன் முகத்தில் பளிச்சென்று உற்சாகம் பிறந்தது.

அடுத்த கணம் கீழே கிடந்த பொட்டலத்தை எடுத்துக் கொண்டு கடைக்குள் கந்தன் வேகமாக நுழைந்தான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த காத்தாயி உணர் விழந்து நின்றாள். ''என்னை மன்னிச்சுடுங்க... தவறிப் போய் அம்மா சொன்னதைக் கூட மறந்து நான் திருடிவிட்டேனுங்க. எனக்கு என்ன தண்டனை வேணுமானாலும் கொடுங்க ஐயா, நான் பட்டுக்கறேன்!'' என்று தழுதழுத்த குரலில் அவன் சொன்னது கணீரெனக் காத்தாயிக்குக் கேட்டது.

''என் குழந்தை கந்தன் திருடவில்லை. நான்தான் திருடினேன்!'' என்று காத்தாயி மகனுக்கு ஆபத்து ஏற்படக் கூடாதேயென்று தானே குற்றத்தை ஒப்புக் கொள்ளக் கடையை நோக்கி ஓடினாள். வாசற்படி வரையில் போனவள் கடை முதலாளியின் பேச்சைக் கேட்டுக் கொஞ்சம் நின்றாள்.

''கந்தா, நீ நல்லவன்! உன் கிட்டே எனக்குக் கோபம் கிடையாது. அந்த மிட்டாய்ப் பொட்டலத்தை நீயே எடுத்துக் கிட்டுப்போ'' என்று சொல்லிக் காதர் கந்தன் முதுகில் அன்போடு தட்டிக் கொடுத்துக் கொண்டே வெளியே வந்தார்.

தனக்கு அவமானம் ஏற்படாமல் காப்பாற்றிய கந்தனைக் கண்டவுடன் காத்தாயியின் கண்களில் நீர் தாரை தாரையாகக் கொட்டிற்று. ஆமாம். கந்தன் தாயை உயர்வு செய்த தனயன் அல்லவா?



இந்திராணி

'கௌசிகன்'

நொங்கித் துவண்டு ஊசலாடும் அந்தப் பயனற்ற பாகத்தையும் இழுத்துக் கொண்டு அது மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. அதற்குக் கால் மட்டும் ஒடியவில்லை. இடுப்பும் சரிந்து விட்டது. சற்று நேரத்துக்குமுன் அது சிங்காரப் பாட்டி சைத்துக் களிப்புடன் திரிந்த வண்டுதான். இப்போதோ உருத்தெரியாதபடி துகைக்கப் பட்டு ஒரு உயிர்ப்பிண்டமாக அது ஊசலாடிக் கொண்டிருந்தது.

அவள் அசையாமல் அதைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவள் பார்வையிலே ஒரு தவிப்பு. நெஞ்சிலே ஒரு துடிப்பு. அவள் அந்தக் கால் ஒடிந்த, உடல் சிதைந்த ஜந்துவின் அசைவை, அவஸ்தையைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளோ சின்னஞ் சிறு பெண். தளிர் விட்டுத் தக தகக்கும் பச்சைக் கொடியைப் போல அவளுக்குப் பத்து வயதுதான். பாவாடை விரித்த வட்டத்தின் நடுவே அவள் அழகுப் பிம்பமாக உட்கார்ந்திருந்தாள். சொக்க வைக்கும் அழகு வழியும் அந்தச் செக்கச் சிவந்த மேனிக்கு அவள் முதுகிலே நீண்டு நெளிந்து துவண்டு கிடந்த அந்தக் கருநாகப் பின்னல் ரொம்ப எடுப்பாக இருந்தது.

அவள் கருவண்டுக் கண்களிலிருந்து இரண்டு ஒளி முத்துக்கள் உருண்டு கீழே விழுந்து சிதறின. அந்த அநாதரவான ஜந்துவின் அவஸ்தையைக் கண்டு அவள் அழுது விட்டாள். யாருடைய பரபரப்பான காலடியின் கீழோ சிக்கித் தன் பொன்னுடலைச் சிதைத்துக் கொண்டு பரிதவிக்கும் அந்த வண்டின் நிலை அவள் நெஞ்சைக் கரைத்து விட்டது. பாவாடைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டு மறுபடி அதைப் பார்த்தாள்.

அது நகரவில்லை. அசைவற்றுக் கிடந்தது.

அதன் உடலிலே தெம்பில்லை. களைத்து விட்டது போலும். 'அதன் மீது கொஞ்சம் குளிர்ந்த ஜலத்தை விட்டால் களைப்பு நீங்கி நகர்ந்து ஆபத்தில்லாத மூலைக்குப் போய்விடு மல்லவா!'

இப்படி நினைத்த அவளால் உடனே ஓடிச் சென்று தண்ணீர் கொண்டுவர முடியவில்லை.

ஏனெனில் இயற்கை அவள் காலை ஒடித்து விட்டது. அவள்...அவள், அவள் நொண்டி.

அவள் பெயர் இந்திராணி. பெண் இந்திராணியைப் போல இருந்தாள் என்றுதான் அந்தப் பெயரை வைத்தார்கள் அவள் பெற்றோர். ஏன்! இன்றைக்கும் அவள் இடுப்புக்கு மேலே இந்திராணியாகத்தான் திகழ்ந்தாள்.

இந்திரா நகர்ந்து சென்று செம்பிலிருந்து தண்ணீரை எடுத்து வந்து அந்த வண்டின் மேல் ஊற்றினாள். அது குலுங்கக்கூட இல்லை. அவளுக்கு நெஞ்சு தவித்தது. அழுகை முட்டிக் கொண்டு வந்தது. சின்னக் குழந்தைதானே!

“செத்துப் போயிட்டயா...போ ... போ ... நல்லதுதான். உயிரோடிருந்து என்னைப் போல் அவதிப் படுவதைவிடச் செத்துப் போவதே நல்லது.”

இப்படித்தான் அந்தப் பிஞ்சு மனசு நினைத்தது. அடிபட்டவளைப் போல இந்திரா விம்மி விம்மி அழுதாள். தான் குளிப்பாட்டி விட்ட அந்த வண்டையும் ரப்பராகத் துவண்டு கிடக்கும் தன் கால்களையும் பார்த்துப் பார்த்து அழுதாள்.

* * *

பார்வதி தனக்குப் பெண் பிறக்க வேண்டும் என்று கொள்ளை ஆசைப் பட்டதனால்தான் இந்திரா பிறந்தாள். கொழு கொழு வென்று குழந்தை கன்னங்குழியச் சிரித்து விளையாடியபோது தம்பதிகள் தங்களையே மறந்து மகிழ்ந்து போனார்கள்.

இந்திரா கையையும் காலையும் உதைத்துக் கொண்டு விளையாடினாள். பார்வதி குழந்தையின் காலுக்குத் தண்டையும் கொலுசும் வாங்கிப் போட்டு ஆனந்தப் பட்டாள்.

இந்திரா முழங்காலை ஊன்றி ஜல் ஜல் என்று தவழ்ந்து விளையாட ஆரம்பித்தாள். பார்வதி தன் கணவரிடம் சொல்லிக் குழந்தையின் இடுப்புக்குத் தங்கச் சலங்கை வாங்கிக் கட்டினாள். சலங்கை குலுங்க அவள் தவழ்ந்து வரும்போது “என் கண்மணிக்கு முழங்கால் வலிக்குமே!” என்று வாரி எடுத்து மார்போடணைத்து மகிழ்ந்தாள் பார்வதி.

இந்திரா தளர்நடை போட ஆரம்பித்தாள். தள்ளாடித் தடுமாறித் தன்னிடம் நடந்து வரும் அழகைக் கண்டு ஆனந்தம் பொங்கிய பார்வதியின் கணவர் குழந்தையின் காலுக்குச் சின்னஞ் சிறு பூட்ஸ் வாங்கிக் கொண்டு வந்தார்.

இப்படி எல்லாம் ஆசையைக் கொட்டிக் குழந்தையை அன்பாக வளர்த்து வந்தார்கள். இந்திராவும் ஓடியாடி விளையாடிக் குதித்துக் கொக்கரித்து வந்தாள்.

இப்படிப் பட்டுப் பூச்சிபோலப் பறந்து விளையாடிக் கொண்டிருந்த குழந்தை ஒரு நாள் திடீரென்று சோர்ந்து போய்ப் படுத்துக் கொண்டது. அதன் உடல் கொதித்தது. அதன் சூடு பாகீரதியின் நெஞ்சிலும் சுர்ர் என்று உரைத்தது.

டாக்டர் வந்தார். ஏதோ மருந்து கொடுத்தார். ஆனால் இரவு இந்திரா ஜுர வேகத்தில் பிதற்ற ஆரம்பித்து விட்டாள். பெற்றோர் வயிற்றை வேதனை பிசைந்தெடுத்தது. பெரிய பெரிய டாக்டர்கள் எல்லாம் வந்தார்கள். அவர்கள் இந்திராவின் உயிரைப் பிடித்து நிறுத்தி விட்டார்கள்.

ஆனால்......ஆனால்......அவர்கள் அந்தக் கால்களை மட்டும் மறந்து விட்டார்கள்! இல்லை. அவர்கள் மருந்துகளும் ஊசியும் அங்குபோக முடியாதபடி அவை ஸ்வாதீன மிழந்து விட்டன.

குழந்தை இந்திரா எழுந்து உட்கார்ந்தாள். கால்கள் தரையில் பாவி நிற்கவில்லை. துணிபோலச் சுருண்டு விழுந்தது. அவள் ஸ்வாதீனத்துக்கு அவை இயங்கவில்லை.

"ஐயோ, கண்ணே!" என்று அடிவயிற்றிலிருந்து சீறிக் கொண்டு வந்தது பாகீரதியின் குரல் அழுகையாக.

"இளம் பிள்ளை வாதம், சார்" என்றார் டாக்டர், தம் மருந்துப் பையை மூடிக் கொண்டே.

"இளம் பிள்ளை வாதமா!" என்று இடிந்து போய் உட்கார்ந்து விட்டார் இந்திராவின் அப்பா.

தாங்க முடியாத வேதனையால் குமுறிக் கொப்பளித்து வழிந்து கொண்டிருக்கும் அந்த உள்ளங்களுக்கு, குணப்படுத்த முடியாத ஒரு வியாதியைப் பற்றி வியாக்யானம் செய்து கொண்டிருப்பானேன் என்றுதானோ என்னவோ, அவர்களுக்குத் தேறுதல் சொல்லிக் கொண்டு அங்கு நிற்க விரும்ப வில்லை டாக்டர்.

வருஷங்கள் ஓடின. இந்திராவுக்கு இப்போது விவரம் தெரிந்து விட்ட வயது. தன்னை, தன் குறையை, தன் ஊனத்தை உணர்ந்து கொண்டாள். ஓடி விளையாடும் தன் வயதுக் குழந்தைகளை ஏக்கத்தோடு பார்ப்பாள். பாய்ந்து ஓடிப் புழுதியில் புரளும் நாய்க் குட்டியைப் பார்ப்பாள். துள்ளிக் குதிக்கும் கன்றுக் குட்டியைப் பார்ப்பாள் அவை செய்த பாக்கியம் கூட, தான் செய்யவில்லையே என்பதை நினைக்கும்போது அவள் கன்னத்தை ஈரமாக்கிவிடும், கண்கள் வடிக்கும் வெப்ப நீர்.

சூம்பிப் போய் விகாரமாக மடங்கிக் கிடக்கும் தன் கால்களையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாள் அவள். தன் குறையை எண்ணி எண்ணி மற்றவர்களோடு பழகவே அவளுக்கு வெறுப்பாகவும் வெட்கமாகவும் இருந்தது. மனம் புழுங்கினாள். காலைப் போலவே அவள் உள்ளமும் சுருங்கி விட்டது. பிறர் பரிதாபத்துடன் தன்னைப் பார்ப்பதையோ இரக்கப்பட்டுக் கருணை காட்டுவதையோ அவள் விரும்பவில்லை. பிறர் பார்வையின் முன்னால் அவள் புழுப்போலச் சுருங்கிப் போவாள். நாலு பேர் முன்னிலையில் வரவே கூச்சப் பட்டாள்.

"நடக்க முடியாத, எழுந்திருக்க முடியாத தன்னைப் பிறர் காட்சிப் பொருளைப் போல் அல்லவா கண் கொட்டாமல் பார்ப்பார்கள்!"

இந்த நினைப்பு அவளை யாருடனும் கலக்காமல் ஒதுங்கி வாழச் செய்தது.

ஆனால் ஒதுங்கி வாழ்ந்து விட முடிகிறதா, இந்த உலகில்! ஒன்றை மறக்க நினைக்கும்போதுதான் அது பூதாகாரமாக முன்னால் வந்து நின்று உறுத்திக் கொண்டிருக்கும். அதுபோலத்தான் இந்திராவின் நிலையும் இருந்தது.


இந்திராவின் அக்காவிற்குக் கலியாணம் நடந்தது. அந்த வைபவம் அவளுடைய ஊனத்தை, அவளுக்கு நேர்ந்துள்ள துர்ப்பாக்கியத்தை இன்னும் பிரும்மாண்டமாக்கிக் காட்டியது.

கலியாணக் கோலாகலத்திலே எல்லோரும் கலந்து கொண்டு மகிழ்ந்தார்கள். சின்னக் குழந்தைகள் குதூகலமாக ஓடியாடித் திரிந்தன. ஆனால் மணப் பெண்ணோடு கூடப் பிறந்த சகோதரியான இந்திரா கவனிப்பாரற்று ஒரு மூலையில் உட்கார்த்தி வைக்கப் பட்டிருந்தாள்.

அவளும் எல்லோரையும்போலப் பட்டுப் பாவாடை கட்டிக் கொண்டிருந்தாள். அவளுக்கும் பின்னிப் பூ வைத்துப் பொட்டிட்டுச் சிங்காரித்திருந்தார்கள். ஆனால் எல்லோரிடத்திலும் காணப் பட்ட மகிழ்ச்சி மாத்திரம் அவளிடம் இல்லை.

'என்னால் நடக்க மட்டும் முடிந்தால் நான் இப்படியா சும்மா உட்கார்ந்திருப்பேன்!'

'எல்லோரும் கூடிக் கொண்டு அங்கு என்னவோ அக்காவைக் கேலி செய்கிறார்களே, அதிலே கலந்து கொள்ள முடியாத பிறவியாக இருக்கிறேனே!'



இப்படி எல்லாம் உள்ளத்திலே ஆசாபாசங்களை தோற்றுவித்து வாடிக் கொண்டிருந்தாள்.

அப்போதுதான், தானும் இதுபோன்ற வைபவங்களை அனுபவிப்பதற்கென படைக்கப்பட்ட ஒரு பெண் பிறவி என்ற நினைப்பு அவளை உலுக்கி எடுத்து விட்டது.

'எனக்கா ......! எனக்கா ......! இந்த நொண்டிக்கா இந்த வைபவமெல்லாம்!' என்று தன் துவண்டு கிடக்கும் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கசந்து குன்றிப் போய் விட்டாள் குழந்தை இந்திரா.

தன் அக்காளின் காலைத் தூக்கி அம்மி மீது வைக்கும் தன் அத்திம்பேரிடமே அவள் பார்வை நிலைத்து நின்றது.

ஊஞ்சல் என்றும் ஊர்வலம் என்றும் நலுங்கு என்றும் மகிழ்ந்து போகும் மற்றவர்களை மௌனமாகப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் இந்திராணி.

அந்தக் கல்யாணக் காட்சிகள் அவள் நெஞ்சிலே ஒட்டிக் கொண்ட பிறகு அவளிடம் ஒரு பெரிய மாறுதலே ஏற்பட்டு விட்டது.

தன்னை எல்லோரும் மறந்து விட்டால் நல்லது என்று எண்ணினாள். எல்லோரையும்போலத் தான் இல்லை, அதனால் மற்றவர்களோடு கலக்கத் தனக்கு உரிமை இல்லை என்ற தாழ்வு மனப்பான்மை அவளுக்கு முன்னால் ஒரு சுவராக எழுந்து உயர்ந்து விட்டது.

இந்திராவின் பெற்றோர் உள்ளத்திலே அவள் ஒரு ஆறாத ரணமாகத்தான் இருந்தாள். தங்கள் குழந்தைகளில் ஒன்று இப்படி எதையும் அனுபவிக்க முடியாமல் அழிந்து கொண்டிருக்கிறதே என்ற வேதனை அவர்களை வாட்டி எடுத்தது. ஆனால் வெளிக்குச் சிரித்த முகம் காட்டி வாழ்ந்து வந்தனர்.

வருஷங்கள் இந்திராவின் எண்ணங்களை வளர்த்தன. இருதயத்தை வளர்க்கவில்லை. அவள் உடல் வளர்ந்தது. ஆனால் காலில் பலம் வளரவில்லை. பருவம் அவள் உடலில் துள்ளி விளையாடி அழகை அள்ளி அபிஷேகம் செய்திருந்தது. இப்பொழுது அவளால் நடக்க முடிந்தது. ஆனால் அவளால் துள்ளி நடக்க முடியவில்லை. அவள் நடை பிறர் கவனிக்கும் அளவுக்கு இருந்தது.


கண்ணிமைக்காமல், "ஐயோ. பாவம்! இவ்வளவு அழகான பெண்ணிற்கு இந்த ஒச்சம் வரணுமா!" என்று பிறர் அங்கலாய்க்கும்படி நடந்தாள். காலை இழுத்துத் தயங்கித் தயங்கி.

அன்றும் அப்படி நடந்து வந்துதான் கதவைத் திறந்தாள். திறந்த கதவின் பின்னால் தமையன் ரகுபதி மட்டும்தான் நிற்பான் என்று எண்ணி யிருந்தாள். ஆனால் ரகுவுடன் இன்னொரு வாலிபனும் நின்று கொண்டிருந்தான், அவளையே வியப்புடன் பார்த்துக் கொண்டு. அவன் பார்வை அவளைச் சுருங்க வைத்தது. அப்படியே குன்றிப்போய் கதவைப் பிடித்துக்கொண்டு கதவு மூலையில் போய் ஒண்டிக் கொண்டாள். கூச்சம், வெட்கம், அவமானம் ஆகியவை அவளைக் குத்தி எடுத்தன. அந்த வாலிபனை அவள் எதிர்பார்க்கவே இல்லை. அவள் அண்ணா ரகுவும் இதுவரை அந்தமாதிரி யாரையும் கூட்டி வந்ததில்லை. அவளைப் போலவே, அவளுக்காக அந்த வீட்டில் எல்லோரும் பிறரிடமிருந்து ஒதுங்கி வாழ்ந்து வந்தார்கள்.

ரகுபதிக்கு வயது இருபது. காலேஜில் படிக்கிறான். அவனுக்கு மூன்று வயது இளையவள்தான் இந்திரா. தன் அழகுத் தங்கை இப்படி இருக்கிறாளே என்ற வேதனை அவனுக்கு. அவள் மனத்துக்குப் பிடிக்காத எதையும் அவன் செய்யவே மாட்டான்.

"உன் தங்கையா, ரகு! எனக்கு நீ சொன்னதே இல்லையே!"—அந்த இளைஞனின் ஆவலான கேள்வியை அவள் காதுகள் ஏந்திக் கொண்டன.

"ம்...ஆமாம்..." என்று தயங்கினான் ரகு. பிறகு...பிறகு அவள் அவர்கள் சம்பாஷணையைக் கேட்கவில்லை. ரகு அவனை மாடிக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டான். தன் தங்கையின் தவிப்பு மனோ நிலை அவனுக்குத் தெரியாதா, என்ன!



ஆனால் அவளுக்குத் தெரியும், ரகு தன் நண்பனிடம் என்ன சொல்லி இருப்பான், எப்படித் தன்னைப் பற்றிப் பேசி இருப்பான் என்று! அந்தக் கற்டனையிலே ஓடவிட்டபடி பின்னல் வேலையில் பார்வையைச் சிக்க வைத்தாள்.

ஆனால் மாடிப் படியில் சப்தம் கேட்ட போது இருட்டிலே ஒண்டிக் கொண்டு மெல்லப் பார்த்தாள். அந்த வாலிபனும் ரகுவும் இறங்கி வந்தார்கள். ரகு அவனுக்கு விடை கொடுத்தான். புதிய உருவத்தின் வாய் பேசிற்று. ஆனால் கண்கள் தன்னைத் தேடு

வதை அவன், தான் பதுங்கியிருந்த இடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதற்குப் பிறகு ராமதுரை அவள் வீட்டுக்கு அடிக்கடி வர ஆரம்பித்தான். முதலில் இந்திரா அவன் கண்ணில் படவே யில்லை. அவன் பேச்சை மட்டும் கேட்டு வந்தாள். தன் உள்ளத்திலே ஏதோ ஒரு புதிய தெம்பு பிறப்பதை உணர்ந்தாள். ராமதுரை இந்திராவை வலிய அழைத்து வைத்துப் பேசினான். அவளைப் பிரமாதமாகப் புகழ்ந்தான். அவளிடம் குறையே காணாதவன்போல நடந்து கொண்டான். அவன் பேச்சும் அவன் நடத்தையும் இந்திராவிடம் அதிசயமான மாறுதலை உண்டாக்கி விட்டன. அவள் தன்னையும், தன்னிடமுள்ள குறைபாட்டையும் மறந்து பிறருடன் கலகலப்புடன் கலந்து கொள்ள ஆரம்பித்தாள்.

அவள் மிகுந்த திறமைசாலி. மற்றவர்களைவிடப் பல விதங்களில் உயர்ந்தவள் என்று சொல்லிச் சொல்லி அவள் உள்ளத்திலே பல வருஷங்களாகக் கட்டி தட்டிப் போயிருந்த தாழ்வு மனப்பான்மையைக் கரைத்து விட்டான் ராமதுரை.

“கால் ஊனமாகிவிட்டால் என்ன! எனக்கு வாழ உரிமை இல்லையா!” என்று கூட விவகாரம் பேசத் தொடங்கிவிட்டது அவள் உள்ளம்.

அப்படி இருக்கும்பொழுதுதான் ஒரு நாள் ராமதுரை, “இந்திரா! நீ என் கல்யாணத்துக்கு அவசியம் வரவேண்டும். சங்கோசப்படக் கூடாது. என்ன!” என்றான். சொன்ன பிறகு ஏதாவது தவறாகச் சொல்லி விட்டோமோ என்ற பயம் அவனைக் குலுக்கிற்று. காரணம், இந்திராவின் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்தான். ஏமாற்றம் அவள் முகத்தை இறுக்கி விட்டது. கண்களில் நீர் முட்டி நின்று பளபளத்தது.

“என்ன, இந்திரா! ஏன் அழுகிறாய்!” என்று பதறினான் ராமதுரை. ஆனால் இந்திரா பதில் சொல்லவில்லை. அவள் கற்பனையை அவன் அறியவில்லை. வாழ ஆசை ஊட்டியவனை அவனையே அடையலாம் என்று அவள் ஆசை கொண்டிருந்தாள். அது நிறைவேறாத ஆசை என்று அவள் சந்தேகப்படும்படியாகக்கூட இதுவரை அவன் நடந்துகொண்டதில்லை. ஆகவே, இந்திரா அவனை நம்பிக்கையோடு, ஆவேசத்தோடு தன் உள்ளக் கோயிலில் வைத்துப் பூஜித்து வந்தாள். இன்று அவனுக்கு வேறு ஒருத்தி மாலையிடப் போவதை அறிந்தபோது அவள் உள்ளம் இடிந்து போய் விட்டது. தன் பலவீனமும் தன் குறையும், தன் ஊனமும் அவள் மனத்தை உறுத்தின.

ராமதுரை சாமர்த்தியசாலி. முதலில் திகைத்தாலும் ஒரு நொடியில் அவள் உள்ளத்தை உணர்ந்து கொண்டுவிட்டான்.

“இந்திரா, நிஜமாகவா! நீ அப்படியா உன் எண்ணங்களை வளர்த்து வந்தாய்!” என்று வியப்போடு வார்த்தைகளை நிறுத்தி நிறுத்திக்கேட்டான்.

அதற்குப் பதிலாக இந்திராவின் அழுகைதான் பலமாயிற்று. நெஞ்சு வெடிக்க விம்மினாள். ராமதுரைக்கு மூளை கொதித்தது. அவள் விம்மல் அவனைப் பிழிந்தெடுத்தது. தன்னை அவள் தவறாகப் புரிந்து கொண்டு விட்டாளே என்பதை நினைத்தபோது அவனுக்கு வருத்தமாக இருந்தது. தாழ்வு மனப்பான்மையில் தன்னைப்பற்றி குறைவாக எண்ணிக் கொண்டுள்ள ஒரு பெண்ணின் வாழ்க்கை அவலமாக அழிந்து போகிறதே என்று எண்ணி அவள் சங்கோசத்தைப் போக்கி அவள் மற்றவரை விட எந்த வகையிலும் குறைந்தவளல்ல என்று உணரும்படி செய்து, அவளை வாழ வைக்க வேண்டும் என்றுதான் அவன் அவளோடு நெருங்கி சகஜமாக விகல்பமின்றிப் பழகினான். ஆனால் அவள்......அவள் நினைவு!

தன் நிலையை அவன் விளக்கியபோது அவள் சீறி விழுந்தாள். “உலகையே வெறுத்து ஒதுங்கிக் கிடந்தவளுக்கு வாழ வேண்டும் என்ற ஆசையை உள்ளத்திலே விதைத்து அது செழித்து வளரவும் செய்து விட்டீர்கள். வளர்த்த கையாலேயே அதை வேரோடு பிடுங்கி எறிந்தும் விட்டீர்கள்...... ஐயோ! என்னை ஏன் மாற்றினீர்கள்! என் நெஞ்சிலே ஆசாபாசங்களை உண்டாக்கி என்னை வாழத் தகுதியுடைய பெண் என்று உணரும்படி ஏன் செய்தீர்கள்!” என்று குமுறிக் குமுறிக் குமைந்து போனாள்.

அவள் வேதனை பொங்கி வழிந்து அடங்கிய பிறகு மெதுவாக ராமதுரை அவளைத் தன் வழிக்குக் கொண்டு வந்தான். தான் அவளைப் பார்த்த அன்றிலிருந்து சகோதரியாகவே பாவித்துப் பழகினதாகவும் தங்கை இல்லாத தனக்கு அவள் தங்கையாகி அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்றும் உருக்கமாக உபதேசம் செய்தான். அவள் உள்ளத்திலே மண்டிக்கிடந்த முட் செடிகளைத் தன் வார்த்தைகளால் வெட்டித் தள்ளினான். அவள் ஹிருதயத்தை நிர்மலமாக்கி அதிலே தன் நினைவு என்ற மண்ணைப் பரப்பி அதில் சகோதரன் என்ற விதையை ஊன்றி விட்டான்.

இந்திராவின் விழிகள் கக்கிய கண்ணீர் காய்ந்தது. முகத்திலே ஒரு புதிய ஒளி பரவிற்று. குரலிலே கரகரப்பு இல்லை. உறுதி படிந்துவிட்டது. “அண்ணா, நீங்கள் எனக்கு வாழ்வளித்தவர், தந்தைக்குச் சமானம். நீங்கள் எப்படிச் சொன்னாலும் கேட்கத் தயார்” என்றாள்.

“உனக்கு ஒரு கணவனையும் நானே ஏற்பாடு செய்து வைத்திருக்கிறேன், இந்திரா, கல்யாண நினைவு உன் உள்ளத்திலே உதயமாக வேண்டும் என்றுதான் காத்திருந்தேன். ரகுவுக்குக் கூடத் தெரியும்” என்றான் ராமதுரை.

இத்தனை நாள் அவளைத் தழுவிக் கொள்ளக் காத்திருந்த வெட்கம் அவளிடம் ஓடி வந்து ஒட்டிக் கொண்டது. குங்குமமாகச் சிவந்து விட்ட தன் முகத்தைத் தன் நடுங்கும் கைகளுக்குள் புதைத்துக் கொண்டாள் இந்திரா.


“அட! இவ்வளவு வெட்கமா? இந்திரா! அவன் யாரென்று கேட்கவில்லையே!...சொல்லட்டுமா! வேறு யாருமில்லை. என் தம்பி வேணுதான். ரொம்பக் கெட்டிக்காரன். உனக்கு ஏற்ற கணவன் அவன்தான்!” என்றான் ராமதுரை.

இந்திரா சட்டென்று தலை நிமிர்ந்தாள். அவள் இதழிலே ஒரு சுழிப்பும் பார்வையிலே ஒரு துவளிப்பும் கவர்ச்சியுடன் தாண்டவமாடின.

மணக் கோலத்திலே இந்திராணி இன்னும் அழகாயிருந்தாள். தன் தம்பி வேணுவின் அருகிலே அவள் ஒசிந்து நின்ற அந்த நிலையை அஜந்தா ஓவியமாகக் கற்பனை செய்து மகிழ்ந்து போனான் ராமதுரை. ஊனமடைந்த தன் பெண்ணுக்கு வந்து சேர்ந்த அதிர்ஷ்டம் பாகீரதியின் கண்களில் ஆனந்தக் கண்ணீராக வடிந்தது.

இந்திராணி பட்டுப்புடவை மொட மொடக்க மணக்கோலத்துடன் ராமதுரையின் அருகில் சென்று “நமஸ்காரம் செய்கிறேன், அண்ணா” என்று சொல்லி நமஸ்காரம் செய்தாள்.

அப்பொழுது ‘நானும் ஒரு கணவனோடு வாழப் போகிறேன். அதற்கு நீங்கள்தான் காரணம், அண்ணா!” என்று அவள் பார்த்த அந்தப் பார்வை அவளிடம் சொல்லிக் கொண்டிருந்தது.


ஆராய்ச்சி
வேலைத்திறனின் உயர் ரகம்
அதி நூதன சாதனங்கள்
உயர் ரக மூலப் பொருள்கள்
கம்-டிப்பிங்
நம்பிக்கையின் உறைவிடம்
Firestone
அதிக மைல் உழைப்பு, சுகம், நாகரீகப் பாங்கு, உங்கள் பணத்திற்குரிய மதிப்பு

மாமனாரின் உதவி

ஸி. வி. எஸ். ஆறுமுகம்

"தபால்!" என்ற குரலுடன் ஜன்னல் வழியாக விழுந்த கடிதத்தை ரகுராமன் எடுத்துப் பிரித்தான். அவனுடைய மாமனார் முருகேசம் எழுதியிருந்தார்.

"சிரஞ்சீவி மாப்பிள்ளை அவர்களுக்கு, தங்கள் கடிதம் கிடைத்தது. கிராமப்புறங்களின் தற்போதுள்ள கஷ்ட நிலை தங்களுக்குத் தெரிந்ததே! இந்த நிலையில் திடீரென்று ஆயிரம் ரூபாய் சேகரித்து அனுப்புவது சாத்தியமில்லையென்றே தோன்றுகிறது. நானும் முடிந்த வரையில் பார்க்கிறேன். கிடைத்தால் நானே அவ்விடம் கொண்டு வருகிறேன். ஆனாலும் இது விஷயத்தில் நான் உறுதி ஏதும் சொல்ல முடியாது என்பதைத் தெரிவிக்கவே இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

— முருகேசம்."

கடிதத்தை வீசி எறிந்து விட்டு, கையிலிருந்த ஆபீஸ் கட்டைப் படீரென்று மேஜையின்மேல் போட்டான் ரகுராமன்.

"எல்லாம் கஞ்சத்தனம்! கருமிகள்! பணம் எங்கே திரும்பி வராமல் போய் விடுமோ என்று காரியத்தைத் தட்டிக் கழிக்கும் சால்சாப்பு இது. பெரிய மிராசு என்று இருந்து கொண்டு ஒரு ஆயிரம் ரூபாய்க் காசு புரட்ட முடியாதாம்! சுத்த லோபிகள்!" என்று ஆத்திரத்துடன் உறுமிக் கொண்டு அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். அவன் மனைவி மீனாட்சி சப்த நாடியும் ஒடுங்கிப் போய் ஒரு மூலையோரமாக நின்று கொண்டிருந்தாள்.


"ஏய், மீனி! ஏண்டி கூர்ச்சம் மாதிரி நிற்கிறாய்? புறப்படு, அவர்கள் பிச்சைக் காசு இங்கே யாருக்கும் வேண்டாமென்று போய்ச் சொல். என்னால் இனி ஒரு நிமிஷம்கூட இந்த வேலையைக் கட்டிக் கொண்டு அழ முடியாது. இன்றைக்கே இதற்கு முழுக்குப் போட்டு விட்டு எங்காவது போகிறேன். நல்ல உத்தியோகம் ஏதாவது கிடைத்தால் உனக்குக் கடிதம் போடுகிறேன். அதுவரை நீ சௌக்கியமாக உன் பிறந்த வீட்டிலேயே இரு!" என்று மட மடவென்று பொரிந்து தள்ளினான்.

மீனா அங்கிருந்து மெல்ல நழுவினாள். ரகுராமன் அறுபது ரூபாய்ச் சம்பளத்தில் ஒரு கம்பெனியில் செக்கு மாடாக உழைத்துக் கொண்டிருந்தான்.

அவன் தகப்பனாரும் ஒரு குமாஸ்தாவாக இருந்தே வாழ்க்கையைக் கழித்தவர். அவர் மிகுந்த சிரமப்பட்டு ரகுவை பி. ஏ. வரை படிக்க வைத்தார். புத்திசாலித்தனமாக இன்ஷ்யூரில் போட்டிருந்த பணம் அவர் ரிடையரானபோது கைக்கு வந்தது. அதைக் கொண்டு தமது ஒரே பெண் மாலதியின் விவாகத்தை நடத்தி வைத்தார். மாதா மாதம் வரும் பென்ஷனையும், பிதுரார்ஜித நிலத்திலிருந்து வரும் சொற்ப வருமானத்தையும் கொண்டு கிராமத்தோடு இருந்தார்.

ரகுராமன் படிப்பு முடிந்த பிறகு ரொம்ப நாள் வேலை கிடைக்காமல் கஷ்டப்பட்டான். கடைசியாக நண்பன் ஒருவன் உதவியின் பேரில் பம்பாயில் ஒரு வேலை கிடைக்கும் போல இருந்தது. இதற்காக அவன் அங்கே போவதாக இருந்தான்.

இந்தச் சமயத்தில்தான் ரகுவின் காரியத்தில் குமரேசம் குறுக்கிட்டார். குமரேசம் ரகுவின் பேரில் ஏற்கெனவே ஒரு கண் வைத்திருந்தார். பையன் பார்வைக்கு லட்சணமாக இருந்தான். அதோடு தமது பெண் மீனுவின் ஜாதகத்துக்கும் ரகுவின் ஜாதகத்துக்கும் அபூர்வமான பொருத்தம் இருப்பதை முன்னமே



அறிந்து வைத்திருந்தார். இப்போது அவன் பம்பாய் போவதாக அறிந்தவுடன் எங்கே கையை விட்டு நழுவி விடுவானோ என்று பயந்தார். எனவே, அவர் பகீரதப் பிரயத்தனம் செய்து, சென்னையிலேயே ஒரு கம்பெனியில் வேலை தேடி ரகுவை வேலையில் அமர்த்தி வைத்தார்.

ரகுராமனுக்கு அந்த வேலையும் சம்பளமும் திருப்திப்படாவிட்டாலும், வேறு வழியில்லாததால் அப்போது ஒப்புக் கொண்டான்.

காரியக்காரரான குமரேசம் கூட்டோடு கூடாக அவனுக்குத் தமது பெண் மீனுவைக் கல்யாணமும் செய்து வைத்து விட்டார்.

இவ்விதம் ரகு அந்தக் கம்பெனியில் மூன்று வருஷமாக அறுபது ரூபாய்ச் சம்பளத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான்.

இப்போது அந்தக் கம்பெனியில் மேல் பதவி ஒன்று காலி ஏற்படுவதாக இருந்தது. ஆனால் கம்பெனி நிபந்தனைப்படி அதற்கு ஆயிரம் ரூபாய் டிபாஸிட் கட்ட வேண்டும். அதுவும் இன்னும் எட்டு நாட்களில், வருகிற முதல் தேதி யன்று கட்டா விட்டால், பிறகு அந்த வேலையை எதிர்பார்ப்பதற்கில்லை. ரகு தன் மாமனாருக்குக் கைமாற்றாக ஆயிரம் ரூபாய் அத்யாவசியம் தேவை என்று கடிதம் எழுதிவிட்டு, அதை வாங்கி வர அன்று மத்தியான வண்டியில் மீனுவையும் அனுப்பவதாக இருந்தான். இந்தச் சமயம்தான் குமரேசத்திடமிருந்து மேற்கண்ட கடிதம் வந்தது.

ரகுவுக்கு, எட்டிய பதவி கிட்டாமல் போய் விடும்போலிருப்பதை எண்ணியபோது எல்லோர்மீதும் அகாரணமான கோபம் வந்தது.

"உள்ளே என்னடி பண்ணுகிறாய்? ரயிலுக்கு நேரம் ஆகிறது!" என்று மனைவியை அதட்டினான். பிறகு, "இன்றைக்கே அந்தச் சனியன் பிடித்த வேலைக்கு முழுக்குப் போட்டு விடுகிறேன்" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

"இனி அவர்கள் பணமோ, தயவோ இங்கே யாருக்கும் வேண்டாம் என்று போய்ச்சொல்" என்று கருவினான். அன்று மத்தியான ரயிலிலேயே மீனுவை அவள் பிறந்த ஊருக்கு அனுப்பி வைத்தான்.



* * *

அன்று விடிந்தால் முதல் தேதி. மீனுவிடமிருந்து தகவல் ஏதும் இல்லை. டிபாஸிட் கட்ட முடியாத நிலைமையில் மேல் பதவி பற்றிய நம்பிக்கைக்கே இடம் இல்லை அல்லவா? மேற்கொண்டு அதே வேலையில் இருப்பதா என்று ரகு யோசித்தான்.

சிறிது நேரத்தில் வாசலில் ஒரு ஜட்கா வந்து நின்றது. மீனு அதிலிருந்து இறங்கி உள்ளே வந்தாள். அவள் முகத்தில் மகிழ்ச்சியும் பெருமிதமும் துள்ளாடியது. மடியிலிருந்து ஆயிரம் ரூபாய் அடங்கிய ஒரு நோட்டுக் கற்றை எடுத்து ரகுவின் முன்னால் வைத்து விட்டுப் பேசாமல் உள்ளே போனாள்.

பணத்தைக் கண்டதும் ரகுராமனுக்குத் தலை கால் புரியாத சந்தோஷம் வந்தது. மீனுவை அன்புடன் அழைத்து, ஊரில் மாமனார் குடும்பத்துச் சுகக்ஷேமங்களை அக்கறையுடன் விசாரித்தான். ஜேபிக்குள் பணத்தை எடுத்து வைத்துக்கொண்டு ஆபீசுக்குப் புறப்படத் தயாரானான்.

இந்தச் சமயம் ஜல் ஜல் என்ற சதங்கை ஒலியுடன் வாசலில் ஒரு ஜட்கா வந்து நின்றது. ரகுராமன் எழுந்து வாசலில் வந்து பார்த்தான். அவன் தங்கை மாலதி வாடிய முகத்துடன் இறங்கி உள்ளே வந்தாள்.

தன் மடியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து அண்ணனிடம் கொடுத்தாள். அது மாலதியின் கணவன் வேணுவால், ரகுவின் தகப்பனாருக்கு எழுதப்பட்டிருந்தது.


"கனம் மாமா அவர்களுக்கு,

......கடந்த நாலு வருஷகாலமாக சொற்பச் சம்பளத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இப்போது இந்தக் கம்பெனியின் கிளை ஆபீஸில் மானேஜர் பதவி ஒன்று காலியாகப் போகிறது. அந்த ஸ்தானத்தில் என்னை நியமிக்க மேலதிகாரிகளின் தயவும் இருக்கிறது. ஆனால் அதற்கு நான் ஆயிரம் ரூபாய் டிபாஸிட் கட்டவேண்டும். உங்கள் உதவியை நாடுகிறேன். —வேணு"

கடிதத்தை முடித்தவுடன் ரகுராமன் இடி இடி யென்று சிரித்தான். மாலதிக்கு அவன் சிரிப்பின் காரணம் விளங்க வில்லை.

"நேற்று அப்பாவிடம் கிராமத்துக்குப் போயிருந்தேன். அவரிடம் இப்போது பணம் இல்லை யென்று உன்னிடம அனுப்பினார்" என்று பரிதாபமாகச் சொன்னாள் அவள்.

ரகுராமன் மேலும் சிரித்துவிட்டு, "கவலைப் படாதே, மாலதி! கொடுத்து வைத்தவன் நீதான்! இன்று சாயந்திர வண்டியிலேயே நீ பணத்துடன் ஊருக்குப் போகலாம். எனக்கு இப்போது ஆபீசுக்கு நேரமாகிவிட்டது. வந்து பேசிக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு அறைக்குள் போனான். ஜேபிக்குள் எடுத்து வைத்திருந்த ஆயிரம் ரூபாயை மீண்டும் பெட்டிக்குள் வைத்து மூடிவிட்டு வழக்கம் போல் ஆபீசுக்கு நடந்தான்.



9 இது முடியுமா?

மாதவி அந்த ஊருக்குச் சொந்தக்காரரான பட்டக்காரரின் பேத்தி என்று தெரிந்தவுடன் அந்த நாடோடிக் கூட்டத்தினர் எல்லோரும் அவளை ஆவலோடு பார்க்கத் தொடங்கினர். அவர்களுக்கு அவளிடம் ஒரு மதிப்பும் நம்பிக்கையும் ஏற்பட்டது. அவர்கள் உணர்ச்சியைச் சரியாகத் தெரிந்து கொண்ட ஆனந்தன் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ள நினைத்து அவர்களுக்குத் தலைவனாக இருந்த பெத்தண்ணனை நெருங்கி, "மாதவி உங்களுக்குக் கொடுத்த வாக்குப்படி நீங்கள் எத்தனை நாள் வேண்டுமானாலும் இந்த இடத்திலிருக்கலாம். அவளை யாரென்று நீங்கள் தெரிந்து கொண்டு விட்டீர்கள். இனி மேல் நீங்கள் எங்களைக் கண்ணியமாய்த்தான் நினைப்பீர்கள். எனக்கு உங்கள் ராணியோடு இரண்டு வார்த்தையாவது பேச வேண்டும் என்பதுதான் ஆசை. நான் அவளை ஏதாவது செய்து விடுவேனோ என்று பயமிருந்தால் யாராவது என்னோடு வரலாம்" என்று சொல்லிப் பெத்தண்ணனின் முகத்தைப் பார்த்தான்.

"நாங்கள் எதுவும் சந்தேகப்படவில்லை. நீங்கள் அவளோடு தாராளமாகப் பேசலாம். அதோ அவள் நிற்கிறாள். போய்ப் பேசுங்க" என்றான் பெத்தண்ணன்.

ஆனந்தன் ஆவலோடு அந்தப் பெண் நின்று கொண்டிருந்த இடத்தை நோக்கி நடந்தான். அவன் தனக்குச்சமீபமாக வருவதைக்கண்டு அவள் பயப்படவில்லை. அவனுடைய அடக்கமான தோற்றமும், இனிமையான பேச்சும் அந்தப் பெண்ணை வசீகரித்தன. ஆனந்தன் அன்போடும் ஆவலோடும் அவள் முகத்தைப் பார்த்து, "உன் பெயரென்ன, அம்மா!" என்று கேட்டான்.

"என் பெயரா! தங்கம்..." என்றாள் அவள் வெட்கத்தோடும் அடக்கத்தோடும்.

"என் சகோதரன் உன்னிடம் கொஞ்சம் அசட்டுத் தனமாக நடந்து கொண்டு விட்டான். ஆனால் உன்னபடி அவன் உனக்கு எதுவும் கெடுதல் செய்ய நினைத்திருக்க மாட்டான். இருந்தாலும் அவன் உன்னிடம் கொஞ்சம் மரியாதையாக நடந்திருக்கலாம்" என்றான் ஆனந்தன்.

"நீங்கள் இப்படி எல்லாம் என்னிடம் வந்து பேசுகிறதற்குக் காரணம் நான் இந்தக் கூட்டத்துக்கு ராணின்னு தெரிஞ்சுபோட்டதினாலே தான். இல்லையா...!" என்றாள் தங்கம் தன் அழகான கண்களை உருட்டி ஆனந்தனைப் பார்த்த வண்ணம்.

"இல்லை. நான் எப்பொழுதும் எந்தப் பெண்ணிடமும் மரியாதையாகத் தான் நடந்து கொள்வேன். அதுவும் உன்னையும் உன்னுடைய அழகையும் கண்ட பிறகு இயற்கையாகவே யாருக்கும் உன்னிடம் மிகவும் மரியாதையோடு நடக்கும்படிதான் தோன்றும். எங்களைப் போல் உயர்ந்த நிலையில் உள்ள எல்லா மனிதர்களுமே உங்களைப் போன்றவர்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொள்வார்கள் என்று நீ நினைத்தால் அது தவறு......" என்றான் ஆனந்தன். அப்பொழுது அவன் அவளுடைய கண்களைப் பார்த்தபொழுது அந்தக் கண்களிலிருந்து மின்னல் போல் பாய்ந்த ஒளி அவன் இருதயத்தையே வெட்டுவதுபோ லிருந்தது. அப்பொழுது அவர்களிருவரும் உன்மத்தம் பிடித்தவர்கள் போல் சில நிமிஷம் மௌனமாக நின்றனர். கடைசியில் தங்கம் ஒரு பெரு மூச்சு விட்டுக் கொண்டே, "நீங்களெல்லாம் எப்படிப் பட்டவர்களென்று எனக்குத் தெரியாது. நீங்கள் என்னிடம் பிரியமாக இருந்தால் அது எனக்கு ரொம்பச் சந்தோஷம்தான்" என்றாள்.

"உன்னோடு நெடுநேரம் பேச வேண்டுமென்று தான் எனக்கும் ஆசை. ஆனால் அதற்கு இது சமயமில்லை. நீங்கள் இன்னும் சிலநாள் இந்த ஊரில் தங்குவீர்களல்லவா! மறுபடியும் உன்னை நான் தனியாகச் சந்திக்கிறேன்" என்று கூறி அவளிடம் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினான் ஆனந்தன்.

தங்கம் அவனுக்குத் தயக்கத்தோடு விடை கொடுப்பவள் போல் தலையை ஆட்டி விட்டுச் சிறிது வெட்கத்தோடும் ஆவலோடும் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

கோவிந்தன் அந்தக் கூட்டத்தினரை விட்டுச் சற்று ஒதுங்கினாற் போல் ஒரு புறமாக நின்று கொண்டிருந்தான்.

அவமானத்தினால் அவன் முகம் கடுமையடைந்திருந்தது. மாதவியும் ஆனந்தனும் அவர்களிடம் அவ்வளவு பரிவு காட்டிப் பேசியது அவனுக்கு அருவருப்பையும் எரிச்சலையும் உண்டாக்கியது. அதெல்லாவற்றையும் விட மேலாக இப்பொழுது

மாதவிக்காகவும் ஆனந்தனுக்காகவும் அங்கு காத்துக் கொண்டு நிற்க நேர்ந்தது அவன் மனத்தில் உள்ள புகைச்சலை இன்னும் அதிகமாக்கியது.



அவனுக்குச் சிறிது தூரத்தில் மாதவி, அவனுக்கு அந்த இடத்தில் பரம வைரியாக முளைத்த சிங்காரத்தோடு சிரித்துச் சிரித்து ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். அதைக் கண்ணுற்ற அவனால் பொறாமையோடு இருக்க முடியவில்லை. "மாதவி! நாழிகையாகி விட்டது. வீட்டிற்குப் போக வேண்டாமா! வா" என்று சப்தமிட்டுக் கூப்பிட்டான்.

மாதவி அவனுடைய கடுமையான அவசர அழைப்பைக் கேட்ட பின்னரும் சிங்காரத்தோடு பேசிக் கொண்டிருக்க இஷ்டப் படவில்லை. கோவிந்தன் இருந்த இடத்தை நோக்கி வந்தாள். அவள் தனக்குச் சமீபமாக வந்ததும் கோவிந்தன் ஆத்திரத்துடன், "அந்தத் தடி முட்டாளோடு உனக்கென்ன பேச்சு! அவனுக்கு உன்னோடு பேசுவதற்கு யோக்கியதை 'இருக்கிறதா!" என்றான்.

"ஏன் அவனுக்கு என்னோடு பேச யோக்கியதை இல்லை! அவனும் உங்களைப் போல ஒரு மனிதன்தானே! அவர்களோடெல்லாம் பேசிப் பழகணும் என்கிற ஆவலில் தானே நான் இங்கு வந்தேன்! அத்தான்! நீங்கள் அநாவசியமாக இந்த ஜனங்களிடம் வெறுப்பைக் காட்டுகிறீர்கள் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் அப்படி இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் உங்களைக் கண்டாலே எனக்குப் பிடிக்காமல் போய்விடும்" என்றாள் முகத்தில் வருத்தக் குறியோடு.


கோவிந்தன் அந்தச் சமயத்தில் அவளோடு வாக்குவாதம் செய்து தன் காலத்தை விரயமாக்க விரும்பவில்லை. அவன் அவளைத் தனியாகச் சந்திக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைப்பதே அரிதாக இருந்தது. அந்த இடத்தில் அப்பொழுது ஆனந்தன் இல்லை. ஆகவே, அந்தச் சந்தர்ப்பத்தில் தன் மனத்தைத் திறந்து அவளோடு பேச நினைத்தான்.

"அது போகட்டும். நான் விளையாட்டுக்காகச் சொன்னேன், மாதவி! எனக்கு உன்னைவிட உயர்ந்தவர்கள் யார்......! என் உயிரே நீ என்று சொன்னால்தான் பொருந்தும். நாம் இரண்டு பேரும் தான் ஒருவருக்கொருவர் பொருத்தமானவர்கள். நான் உன்மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன், தெரியுமா! நீ ஏன் என்னைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று தாத்தாவிடம் சொல்லிவிடக் கூடாது!" என்றான்.

கோவிந்தன் திடீரென்று கல்யாண விஷயத்தைப் பற்றிப் பேசுவானென்று மாதவி நினைக்கவில்லை. ஆனால் ஆனந்தனை விட்டுத் தான் பிரிந்திருக்கும் சந்தர்ப்பத்தை அவன் பயன் படுத்திக் கொள்ளப் பார்க்கிறான் என்பதை மாத்திரம் அவள் உணர்ந்து கொண்டாள். ஆனால் மாதவி பளிச்சென்று அவனுக்குப் பதில் சொல்லக்கூடிய நிலையில் அப்பொழுது இல்லை. அந்த இரண்டு சகோதரர்களில் ஒருவரைத் தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று கெடுகாட்டாகத் தீர்மானம்

செய்து வைக்கப்பட்டிருப்பது அவளுக்குத் தெரியும். ஆனால் அவர்களில் யாரைக் கல்யாணம் செய்து கொள்வது என்று ஒரு நிர்மானத்திற்கு வருவது அவளுக்குக் கடினமாக இருந்தது. அவர்கள் இருவரும் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்பட்டனர். இந்த விஷயத்தில் கோவிந்தன் ஆனந்தனை விடச் சற்றுத் தீவிரமாகவே இருந்தான். அவன் சற்று முன் கோபமும் கர்வமும் உள்ளவனாக இருந்தாலும் அவளிடம் அதிகப் பற்றுதல் உள்ளவனாக இருந்தான். சில சமயம் கோவிந்தன் அவளுடைய அபிப்பிராயங்களுக்கு எதிராக இருந்தாலும் அவனிடம் மாதவிக்கும் அன்பு சிறிது அதிகமாகவே இருந்தது. ஆனந்தனின் நேர்மையான குணமும், அடக்கமும் அவளுக்குத் தெரியாமலில்லை. அவன் அவளை விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்பதையோ, அவளிடம் தனக்குத் தீவிர அன்பு இருக்கிறது என்பதையோ ஒரு நாளும் காட்டிக் கொண்டதில்லை. பொதுவாக அப்பொழுது மாதவியின் நிலைமை எப்படி இருந்த தென்றால் ஆனந்தன், கோவிந்தன் இருவருமே அவளுக்குப் பொருத்தமானவர்களாக இல்லாதது போலத் தான் அவள் மனதிற்குத் தோன்றியது. அவள் மனது வேறு எதையோ விரும்பியது. அவள் எண்ணமும் ஆசையும் வேறாக இருந்தன. "கல்யாணத்தைப் பற்றி இப்போது என்ன கவலை, அத்தான்! அதைப் பற்றி யோசிக்க இன்னும் காலம் இருக்கிறது. உங்களுக்கு என்னைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைதான். ஆனால் நான் உங்களுக்கு ஏற்றவளா என்பதுதான் சந்தேகம். உங்களிடம் எனக்குப் பிரியம் உண்டு. ஆனந்த அத்தானிடமும் உண்டு. யாரைக் கல்யாணம் செய்து கொள்ளலாமென்ற எண்ணமே இன்னும் என் மனத்தில் எழவில்லை. உங்கள் இருவரில் யாரையாவது கல்யாணம் செய்து கொள்ளத்தான் வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருப்பதை நினைத்தால் மனத்தில் இடி விழுந்தது போல ஒரு கலக்கம் ஏற்படுகிறது......" என்றாள்.

கோவிந்தன் ஒரு பெரு மூச்சு விட்டான். திடீரென்று அப்பொழுது அவன் தன்னை யறியாத ஒரு உணர்ச்சித் துடிப்



பிற்கு உள்ளானான். அவன் அவளுக்குச் சமீபமாக நெருங்கி வந்து அவளது கையைப் பிடித்துக் கொண்டு, "நீ இன்றாவது என்னைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டம் அல்லது இல்லை யென்று சொல்ல மாட்டாயா! உன்னைத் தனிமையில் சந்திக்கும் சந்தர்ப்பம் அகப்படுவதே கடினமாயிருக்கிறது. எப்பொழுது பார்த்தாலும்

ஆனந்தனும் கூடவே இருந்துகொண் டிருக்கிருன். உன்னேடு தனியாகப் பேச வேண்டு மென்று எனக்கு எவ்வளவோ துடிப்பு. நீ என்னேடு ஒரு நாளாவது தனியாக வந்தால்தான், மாதவி, என்னைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ள முடியும்'' என்ருன் அவளை ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டே.

மாதவி அவனுடைய கைப்பிடியை உதறிக் கொண்டு சற்று விலகி நின்று, '' உங்களைப் பற்றி இன்னும் நான் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன இருக்கிறது! உங்கள் விருப்பம்தான் என்ன !'' என்ருள்.

'' உன்னேடு எவ்வளவோ பேச வேண்டும், மாதவி இன்று ராத்திரி என்னைத் தனியாகச் சந்திக்கிருயா !''

'' ராத்திரியா......? ஏன் ! ''

''பகல் முழுவதும் ஆனந்தன் என்னேடு சுற்றிக் கொண்டிருக்கிருன். அந்த வேலைக்காரி வள்ளி வேறு உன்னைச் சிறை வைத்ததுபோல் சதா பாதுகாத்துக் கொண்டே இருக்கிருள். அதற்குத் தான் இரவில் எல்லோரும் தூங்கிய பிறகு நீ வந்தால் இருவரும் மனம் விட்டுப் பேச சௌகரியமாயிருக்கும்'' என்ருன்.

மாதவி ஒரு பெரு மூச்சு விட்டாள். '' சரி! ஆனல் இது தாத்தாவிற்குத் தெரிந்தால் எவ்வளவு விபரீதமாக முடியும், தெரியுமா! வள்ளி எனக்காக எதுவும் செய்யத் தயாராய் இருக்கிருள். அவளிடம் நான் என் உயிரையே ஒப்படைத்திருக்கிறேன். இருந்தாலும் இன்று ராத்திரி உங்களை நான் தனியாகச் சந்திக்கிறேன். ஆனல் எங்கே...!''

'' எங்கேயா! இன்று ராத்திரி நல்ல நிலவு. பெரிய ரஸ்தாவில் ஆலமரம் ஒன்று இருக்கிறது, பார். அங்கே நான் இரவு ஒன்பது மணிக்குமேலே உனக்காகக் காத்திருப்பேன். கட்டாயம் வந்து விடு'' என்ருன் கோவிந்தன்.

மாதவி இதைக் கேட்டதும் வியப்படைந்தவளாய், '' அந்த இடத்திற்கா! அந்த இடத்தில்தான் அப்பாவும் அம்மாவும் மோட்டாரை மரத்தில் மோதிச் செத்தார்களாம். ஆனல் நான் அதற்காகப் பயப்படவில்லை. இரவு வேளையில் அந்த இடத்



மந்திரவாதி :—இதோ பாருங்கள், ஸார்! இந்தக் கைக்குட்டைக்குள் உங்கள், கடிகாரம் ஓடும் சத்தம் கேட்கிறது! திருப்திதானே!

கடிகாரம் கொடுத்தவர் :—திருப்தி மட்டும் இல்லை. ஆச்சரியமாகக் கூட இருக்கிறது. நான் கொடுத்த கடிகாரம் நின்று போய் ஆறு மாதம் ஆகிறது!

திற்குப் போய் என் தாயாரும் தகப்பனும் பேய் ரூபத்திலாவது என் கண்ணில் பட மாட்டார்களா என்று பார்க்க வேண்டுமென்று எனக்கு நெடுநாட்களாக ஆசை. நான் கட்டாயம் வருகிறேன். எனக்காக நீங்கள் தவருமல் வந்து காத்திருங்கள்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஆனந்தனும் அவர்கள் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

அவர்கள் மூவரும் அந்த அதிக நேரம் தாமதிக்காமல் வீட்டை நோக்கி நடந்தனர்.

மாதவி வீட்டிற்கு வந்ததும் அவசர அவசரமாக வள்ளியைப் போய்ப் பார்த்தாள். வள்ளியும் அவள் வரவை எதிர்நோக்கித் துடித்துக் கொண்டிருந்தாள். மாதவிக்குத் தன் தாத்தா பட்டக்காரரிடமுள்ள அன்பைவிட வள்ளியிடம்தான் அன்பு மிகுந்திருந்தது. அந்தக் கிழவரின் நீண்ட பிரசங்கங்களும் உபதேசங்களும் அவளுக்குத் துளிக்கூடப் பிடிக்காது. அவர் எப்பொழுதும் தன் குடும்ப உயர்வைப் பற்றியும் குலத்தின் பெருமையைப் பற்றியுமே பேசிக் கொண்டிருப்பார். தங்கள் குடும்பத்திலிருந்த பெண்களெல்லாம் எப்படி இருந்தார்களென்பதையும் மாதவி எப்படி இருக்க வேண்டு மென்பதையுமே மாதவியைக் கண்ட போதெல்லாம் சொல்லித் திருத்த நினைப்பார். ஆனல் மாதவியின் குணமே அலாதியாக இருந்தது. அவருடைய கட்டுப்பாடுகளெல்லாம் அவளுக்குப் பிடிக்கவில்லை. அவள் சிட்டுக் குருவிபோல எங்கு வேண்டுமானுலும் சுதந்திரமாகப் போவதும், பலரோடு சரிசமமாகப் பேசுவதுமாக இருந்ததால் அது அவருக்குப் பிடிக்கவில்லை.

குன்னத்தூர் பட்டக்காரர் திருவேங்கட உடையார் நல்ல குணமும், நேர்மையான நடத்தையும் பெருந்தன்மையும், கௌரவமும் உடையவர்தான். ஆனல் பரம்பரையாக வந்த குல கௌரவத்தையும், பெரிய மனிதர் என்ற கர்வத்தையும் அவர் விடுவதற்கு இஷ்டப்படவில்லை. துரதிர்ஷ்ட வசமாகக் கார் விபத்தில் இறந்துபோன தன் ஒரே மகன்மீது வைத்திருந்த அன்பு முழுவதையும் அவனுடைய குமாரியாகிய மாதவியிடம் செலுத்த நினைத்தார். ஆனல் அந்தப் பெண்ணிடம் அத்தகைய அன்பைச் செலுத்துவது கடினமாக இருந்தது. மாதவியின் குணங்கள் அவளை அந்தக் குடும்பத்திற்கும் குலத்திற்கும் எட்டாத தனிப் பிறவி போலத்தான் அவரை நினைக்கும்படி செய்தது. இதற்குக் காரணம் குழந்தைப் பருவத்திலிருந்து அவள் தன் தாயிடம் வளரும் பாக்கியம் பெருமல் போய் விட்டதுதான் என்று நினைத்துச் சிறிது ஆறுதல் அடைவார்.

மாதவிக்கு வள்ளி தன்மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிருள் என்று நன்கு தெரியும். சாதாரண வேலைக்காரியாகிய வள்ளி தன்மீது இவ்வளவு அன்பு வைத்திருப்பது அவளுக்குச் சில சமயம் வியப்பையும் ஆச்சரியத்தையும் கொடுக்கும். வள்ளி ஒரு நாடோடி கூட்டத்தைச் சேர்ந்தவள் என்பது மாத்திரம் மாதவிக்குத் தெரியுமே தவிர, அவளுடைய வாழ்க்கை ரகசியம் முழுவதும் தெரியாது. வள்ளி இத்தனை வருடகாலமாகத் தன் இருதயத்தில் தீபோல் தகிக்கும் இயற்கையான தாய் உணர்ச்சியினுல் உந்தப் பட்டுத்தான் தன்னிடம் அவ்வளவு பாசத்தோடு நடந்து கொள்கிருள் என்பதை மாதவி எப்படி அறிவாள்!

வள்ளி மாதவிக்குச் சிறு குழந்தைப் பருவத்திலிருந்து நாடோடிகளின் வாழ்க்கையைப் பற்றியும், தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களைப் பற்றி

யும் கதை கதையாகச் சொல்லியிருக்கிறாள். அந்தக் கூட்டத்தாரின் கண்டிப்பான குணத்தையும், சுதந்திரமான நடத்தைகளைப் பற்றியும் சொல்லியிருக்கிறாள். இவையெல்லாம் மாதவியின் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்திருந்தன. வள்ளி கதை சொல்லும் போதெல்லாம் தானும் ஒரு நாடோடிப் பெண்ணாக இருந்து இத்தகைய அனுபவங்களை யெல்லாம் பெற மாட்டோமா என்று அவளுக்குத் தோன்றும். பெரிய வீட்டிலிருந்து அதிகாரத்தோடும் அந்தஸ்தோடும் வாழ்வதை விட நாடோடியாக ஊர் ஊராகச் சுதந்திரத்தோடு சுற்றி வாழ்வதில்தான் இன்பம் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. குழந்தைப் பருவத்தில் எத்தகைய உபதேசமும், உணர்ச்சியும் மனத்தில் பதிகிறதோ, அவைதான் வாழ்நாள் முழுவதும் பிரதிபலிக்கும் என்பதை வள்ளியின் பேதை உள்ளம் அறியவில்லை. அவள் இப்பொழுது மாதவியின் குணத்தைத் திருத்தப் பார்த்தாள். மாதவியின் சில துணிகரமான, சுதந்திரமான நடத்தைகளைத் தடுத்து நிறுத்தப் பார்த்தாள். அவள் விளையாட்டாக விதைத்த விதை இப்பொழுது பிரும்மாண்டமான விருக்ஷமாகிக் கவிந்து கொண்டிருந்தது. மாதவியின் மனத்தில் வளர்ந்து விட்ட அந்த விருக்ஷத்தை வெட்டிவிட வேண்டும். அல்லது வேரோடு கெல்லிவிட வேண்டும் என்று வள்ளி நினைத்தாள். ஆனால் அது முடியக்கூடிய காரியமா......!


வள்ளி மாதவியைக் கண்டதும், சிறிது கோபத்தோடு, "உனக்காக நான் எவ்வளவு நேரம் காத்திருக்கிறது! நீ ரொம்ப நேரம் கழித்து வந்திருக்கிறாய். நீ இனிமேல் இப்படியெல்லாம் இருக்கக் கூடாது. சாப்பாட்டுக்கு நேரமாச்சு. வா" என்று அவளை அழைத்துக் கொண்டு போனாள்.

வள்ளியிடம் அந்த நாடோடிக் கூட்டத்தினரைக் கண்டு அவர்களோடு தான் பேசியதை யெல்லாம் சொல்ல வேண்டுமென்று மாதவியின் உள்ளம் துடித்தது.

அவள் தட்டிலிருந்த சாதத்தைச் சாப்பிட்டுக் கொண்டே, "வள்ளி, இன்றைக்கு எனக்கு எவ்வளவு சந்தோஷமாகப் பொழுது போயிற்று, தெரியுமா! எனக்கு நெடுநாளாக இந்தமாதிரி ஜனங்களைக் கண்டு பேசவேணும் என்று ஆசை. இன்றுதான் அதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் அவர்கள் குடிசைக்குள்ளே யெல்லாம் போய்ப் பார்த்தேன். வள்ளி! அங்கே நம்ம கோவிந்த அத்தானுக்கும் இன்னொரு வாலிபனுக்கும் பெரிய சண்டை. அந்த வாலிபன் அத்தானை நன்றாக அடித்துவிட்டான். அத்தானுக்கும் இது வேணும்தான். அந்த வாலிபன் எப்படி இருந்தான், தெரியுமா! வள்ளி, அவர்களுக்குள்ளேயும் நல்ல அழகானவர்கள் இருக்கிறார்கள்" என்றாள் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே.

வள்ளி அப்பொழுது மாதவியின் முகத்தில் தோன்றிய ஆவலையும் ஆர்வத்தையும் பார்க்கவில்லை. வேறு ஏதோ காரியமாக இருந்த அவள் மாதவியின் முகத்தைப் பார்க்கா விட்டாலும் அவள் சொல்லிய வார்த்தைகளிலிருந்து மாதவியின் உணர்ச்சி எப்படிப்பட்டது என்பதை உணர்ந்து கொண்டாள். அவள் மனத்தில் ஒரு பயமும் கலக்கமும் ஏற்பட்டது. வள்ளி அவளுடைய கூட்டத்தினரை விட்டு விலகி வந்த பிறகு மறுபடியும் தன் வாழ்நாளில் அவர்களை நெருங்குவதில்லை என்ற திடத்தோடு இருந்தாள். இதற்குக் காரணம் அவர்களை நெருங்குவதினால் மாதவியின் பிறப்பும் வளர்ப்பும் பற்றிய ரகசியம் எங்காவது வெளியாகிவிடப் போகிறதோ என்ற பயந்தான். அவளுடைய பெண் மாதவி இப்பொழுது ஒரு பெரிய பணக்காரர் வீட்டுச் செல்வக் குழந்தை. உண்மையாக அது வள்ளியைப் போன்ற ஒரு ஏழை நாடோடி ஸ்திரீயின் குழந்தைக்குக் கிடைக்கக் கூடிய பெருமையா! மாதவி அப்படியே ஒரு பெரிய மனிதர் வீட்டுப் பெண்ணாகவே வாழ்க்கை நடத்த வேண்டுமென்பது தான் அவளுடைய ஆவல். மாதவியின் பிறவி ரகசியத்தைத் தன் உயிரைக் கொடுத்தாவது அவளுடைய வாழ்க்கைச் சுகத்திற்காக வெளியே தெரியாதபடி காப்பாற்றிவிட வேண்டுமென்பதுதான் அவள் விருப்பம். ஆனால் இப்பொழுது அவள் எண்ணமெல்லாம் பாழாகிவிடும் போலிருந்தது. தன் வாழ்க்கையில் வந்து குறுக்கிட்டது போல் தன் மகளுடைய வாழ்க்கையிலும் இந்த நாடோடிகள் வந்து குறுக்கிட்டது அவளுக்குப் பெரும் திகிலை உண்டாக்கியது. மாதவிக்கு அவர்களிடமும் அவர்கள் வாழ்க்கையிலும் ஒரு மோகம் ஏற்பட்டிருப்பது வள்ளியின் மனத்தைக் கலங்க வைத்தது. இப்படியே அவளுடைய போக்கிற்கு விட்டு விட்டால் எத்தகைய விபரீதத்தில் முடியுமோ என்று வள்ளி அஞ்சினாள். மாதவியிடம் இனி கண்டிப்பாகவும் கடுமையாகவும் நடந்து அவளுடைய போக்கையும் குணத்தையும் மாற்ற வேண்டுமென்று தீர்மானித்தாள். மாதவி அவர்களை யெல்லாம் பற்றிப் பேசும் பேச்சுக்களைத் தந்திரமாக மாற்றி விட வேண்டுமென்று வள்ளி நினைத்தாள்.

(தொடரும்)



டாக்டர் (கிராமத்துக்குப் புதிதாய் வந்தவர் கிராம வாசியைப் பார்த்து):—ஏன் அப்பா, இந்தக் கிணற்று ஜலத்தை எல்லோரும் உபயோகப்படுத்துகிறீர்களே! தொற்று நோய் வராமல் இருப்பதற்கு என்ன செய்கிறீர்கள்?

கிராமவாசி:—முதலில் நாங்கள் தண்ணீரை நன்றாய்க் காய்ச்சுகிறோம்!

டாக்டர்:—அதுநான் சரி! பிறகு?

கிராம:—பிறகு நாங்கள் அதை வடிக் கட்டுகிறோம்.

டாக்டர்:—பேஷ், பேஷ்! அப்புறம்?

கிராம:—அப்புறம் ... நாங்கள் இந்த உபத்திரவம் எல்லாம் எதற்கு என்று வெறும் தண்ணீரைச் சாப்பிடாமல் காப்பி தயாரித்துச் சாப்பிடுகிறோம்!

அவன் சாமர்த்தியம்!



பி.எஸ். மணி

திவான்பகதூர் தில்லைநாயகம் வராந்தாவிலிருந்த சோபாவில் சாய்ந்தபடி ஏதோ புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் தோட்டக்கார முனிசாமி பவ்யத்துடன் அவர்முன் வந்து நின்றான்.

“எசமான்!” என்று மிகவும் தளர்ந்த குரலில் முனிசாமி கூப்பிட்டதும் தில்லைநாயகம் புத்தகத்திலிருந்து தமது பார்வையைத் திருப்பினார்.

“என்னடா, முனிசாமி! என்ன வேணும்?” என்று அதிகார தோரணையில் கேட்டார்.

“எசமான்! நீங்கள் கூப்பிட்ட குரலுக்குக் கேட்க ஒரு பையன் வேணுமின்னு சொன்னீர்களே! ஒரு பையனை அழைச்சிக்கிட்டு வந்திருக்கிறேனுங்க. நல்ல தங்கமான பையன். அவனும் ஏதோ நாலு எழுத்து எழுதப் படிச்சிருக்கானுங்க” என்று கூறிக் கொண்டே போனான் முனிசாமி.

“உன் வியாக்கியானம் போதும்! பையன் எங்கே? அழைத்து வா” என்றார் திவான் பகதூர் தில்லைநாயகம் சலித்துக் கொண்டே.

“இதோ கூட்டிக்கிட்டு வரேனுங்க” என்று கூறிவிட்டுப் பாய்ந்தோடிப் போய்ப் பதினைந்து வயது மதிக்கத் தகுந்த பையனை இழுத்து வந்தான் முனிசாமி. அந்தப் பையனைப் பார்த்தவுடனேயே திவான்பகதூருக்குப் பிடித்து விட்டது.

“சரி! பையன் ஒரு மாசம் வேலை செய்யட்டும். சரியாயிருந்தால் நம்ம வீட்டிலேயே வைத்துக் கொள்ளலாம்” என்றார் திவான்பகதூர். முனிசாமியும் ஆனந்தத்தினால் தலையை யசைத்து விட்டான்.

முனிசாமி அழைத்து வந்த பையன் கருப்பையா திவான்பகதூர் கூப்பிடும் குரலுக்குக் கேட்கும் பையனாக அமர்த்தப்பட்டான். அடிக்கடி அவருக்கு வேண்டிய சிசுருஷைகள் செய்வதும் அவரைப் பார்க்க வருபவர்களை உட்கார வைத்துப் பின் அவரிடம் சென்று அறிவிப்பதுந்தான் அவனுடைய முக்கிய வேலை.

அன்று மத்தியானம் இரண்டு மணியிருக்கும். திவான்பகதூர் தில்லைநாயகம் தனது சயன அறையில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். வாசலில் கருப்பையா சுவரில் சாய்ந்தபடி பேசாமல் உட்கார்ந்திருந்தான்.


வாசலில் வயதான கிழவர் ஒருவர் வந்து, “ஐயா இருக்கிறாரா? அவரை உடனே பார்க்க வேண்டும்” என்றார். கருப்பையா சிறிது தயங்கினான். முதியவர் இடைவிடாது வற்புறுத்தவே, கருப்பையா திவான் பகதூரைப் போய் எழுப்பினான். நல்ல தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்ட தில்லை நாயகத்துக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. கருப்பையாவைக் கண்டபடி திட்டி விட்டு, “பார்! இனிமேல் என்ன தலை போகிற விஷயமாயிருந்தாலும் சரி, என்னை நடுத் தூக்கத்தில் எழுப்பக் கூடாது. தெரிந்ததா? இதுமாதிரி இன்னொரு முறை செய்தால் உன்னை வேலையிலிருந்து நீக்கி விடுவேன்” என்று கடிந்து கொண்டார். கருப்பையா பயந்து போய், “என்னை மன்னித்து விடுங்கள்! இனிமேல் அத்தகைய தவறு செய்ய மாட்டேன்” என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டான்.

ஒரு வாரம் கழிந்தது. அன்று திவான் பகதூர் தில்லைநாயகம் கருப்பையாவை விளித்து, “நாளைக் காலையில் ஆறு மணிக்கு ஒரு கல்யாண வீட்டுக்குப் போக வேண்டும். என்னை ஐந்து மணிக்கு எழுப்பி விடு. மறந்து விடாதே!” என்று கூறினார். “ஆகட்டும்” என்று தலையசைத்தான் கருப்பையா.

மறுநாள் காலையில் கருப்பையா ஐந்து மணிக்கே எழுந்திருந்து விட்டான். தில்லை நாயகத்தின் அறைக்குள் பூனைபோல் மெதுவாக அடிமேல் அடி வைத்து நடந்து சென்று, அவர் படுக்கைக்கு அருகிலுள்ள மேஜையில் அவர் கண்ணுக்குத் தெரியும்படியாக ஒரு சீட்டை வைத்து விட்டுத் திரும்பினான்.

வெகு நேரம் கழித்துத் திவான் பகதூர் தில்லைநாயகம் கண் விழித்தார். எதிரிலிருந்த கடிகாரத்தில் மணி ஏழுக்கு மேலாகியிருந்தது தெரிந்தது. ஆறு மணிக்குக் கல்யாணத்துக்குப் போக வேண்டியது ஞாபகம் வந்ததும் உடனே அவர் விடுவிடென்று கட்டிலிலிருந்து கீழே இறங்கினார். அவர் கண்களை மேஜைமேலுள்ள சீட்டு கவர்ந்தது. அதை எடுத்துப் படித்துப் பார்த்தார். அதைப் படித்ததும் அவருக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. அந்தக் காகிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித்து எறிந்து தமது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டார். அவரை ஆத்திரப்படும்படியாகச் செய்தது அச்சீட்டில் எழுதியிருந்தது கீழ்க்கண்ட விஷயந்தான்.

“ஐயா! மணி ஐந்து அடித்து விட்டது. தயவு செய்து எழுந்திருங்கள்!”



LIPTON'S
HIMALAYAN BRAND
FINEST GOLDEN DUST TEA
லிப்டன்ஸ்
ஹிமாலயன்
கோல்டன் டஸ்ட்
டீ
'சிறந்த
தங்க நிற
பானம்'
LGDX (B) 46 TM

திருக்குறட் குமரேச வெண்பா கதைச் சித்திரங்கள்

பாஞ்சாலங் குறிச்சி மன்னன் வீர பாண்டியக் கட்டபொம்மன் வம்சத்தில் வந்தவர் கவிராஜ பண்டிதர் ஜகவீர பாண்டியனார். சிறந்த தமிழ்ப் புலவர். பல அரிய தமிழ் நூல்களை இயற்றித் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் அருந்தொண்டாற்றி யிருக்கிறார். "திருக்குறட் குமரேச வெண்பா" என்ற பெயரில் திருக்குறளில் உள்ள ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களுக்கும் ஒவ்வொரு உதாரண நிகழ்ச்சியுடன் மிகப் பொருத்தமாக இணைந்து வெண்பா பாடி யிருக்கிறார். அவற்றில் நான்கு வெண்பாக்களுக்கு நமது சைத்ரிகர் சந்திரா அற்புதமான வர்ண சித்திரங்கள்



தடுப்பதற்காக ஒளவைப் பிராட்டியார் தொண்டைமானிடம் தூதாகச் சென்றார். அதிகமான் வீரம் செறிந்த மன்னன். யுத்தம் ஏற்பட்டால் இரண்டு தேசத்து மக்களும் வீணே மாண்டு போவார்களே என்று எண்ணியே ஒளவையார் தூது சென்றார். காஞ்சிமா நகரை அடைந்து தொண்டைமானைப் பார்த்துப் போரால் ஏற்படும் விபரீதங்களை எல்லாம் எடுத்து விளக்கினார். அறிவிற் சிறந்த தொண்டைமான் ஒளவையாரைத் தன் ஆயுத சாலைக்கு அழைத்துச் சென்று தன் படை வலிமையை உணர்த்தினான். தொண்டைமானின் ஆயுதச் சாலையைப் பார்த்த ஒளவைப்

தீட்டி யிருக்கிறார். அந்தச் சித்திரங்களை "கல்கி" தீபாவளி மலரில் 89 லிருந்து 92 வரையில் உள்ள நாலு பக்கங்களில் காணலாம். சித்திரத்திலுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:

1. குசேலர் ஞானசீலராய் இல்லறம் நடத்தி வந்தார். இருபத்து ஏழு குழந்தைகளைப் பெற்றார். இருபத்து ஏழு குழந்தைகளுடன் பொல்லாத வறுமையால் அல்லல் பட்டார். உடல் மெலிந்து வாடினார். இன்பக் குழந்தைகள் பசியால் வாடுவதைக் கண்டு அவர் அருமை மனைவியார் கண்ணீர் பெருக்கினாள். தம் கணவரின் காலடியில் வீழ்ந்து "எங்கேயாவது சென்று யாரிடமாவது யாசகம் பெற்றேனும் பொருள் கொண்டு வாருங்கள். குழந்தைகளைப் பார்க்க முடியவில்லை" என்று கெஞ்சினாள். "யாசகம் செய்வதைப் போல் இழி செயல் வேறு ஒன்றுமில்லை. இரந்து உயிர் வாழ்வதைவிட இறந்தே போய் விடலாம்" என்று கூறி யாசிக்க மறுத்துவிட்டார் குசேலர். "வாறியும், அன்பும், தயாள குணமும் படைத்த நெருங்கிய தோழர்களிடம் யாசிப்பதால் கெடுதல் ஒன்றுமில்லை" என்று அவர் மனத்தை மாற்றி, குசேலரின் பள்ளித் தோழரான கண்ணனிடம் போகும்படி வற்புறுத்தினாள். குசேலர்

பிராட்டியார் தம் பொக்கை வாய் திறந்து புன்னகை புரிந்தார். அம் மன்னனைப் பார்த்துச் சொன்னார்: "எம் மன்னன் அதிகமானுடைய போர்க் கருவிகளை விட உம் போர்க் கருவிகள் அழகாகவும் புதிதாகவும் இருக்கின்றன. நெய் தடவிப் பளபளக்க மயில் பீலிகள் அணிந்து மலர் மாலை சூடி வைத்திருக்கிறீர். அதிகமானின் போர்க் கருவிகளோ எதிரிகளின் மார்பில் பாய்ந்த இரத்தக் கறையுடன் முனை மழுங்கி, காம்புகள் அற்று, உடைந்து கொல்லன் உலைக்களத்தில் தேங்கிக் கிடக்கின்றன" என்று பழிப்பும் புகழ்ச்சியும் கலந்து கூறி அதிகமானின் வீரத்தையும் அவன் போர்த் திறமையையும் எடுத்துக் காட்டினார். அமைச்சர்கள் ஒளவையின் அறிவுத் திறமையைக் கண்டு மகிழ்ந்தனர். அரசன் மனம் மாறினான். பெரும் போர் நின்றது. வள்ளுவரின் வாய்மொழியில் கூறியுள்ள தூய்மை, துணைமை, துணிவுடைமை ஆகிய மூன்று குணங்களுடன் வாய்மையும் பெற்று ஒரு சிறந்த தூதனுக்கு வேண்டிய எல்லாப் பண்புகளுடன் விளங்கினாள் ஒளவைப் பிராட்டியார்.

3. சாணக்கியன் பெரிய ராஜதந்திரி. எடுத்த காரியத்தை முடிக்கும் நெஞ்சுரம் படைத்தவன்.

கண்ணனைத் தேடித் துவாரகைக்குச் சென்றார். கண்ணன் குசேலரை அன்புடன் அழைத்து உபசரித்தார். கடைசியாக எல்லாவற்றையும் அள்ளிக் கொடுக்கும் வள்ளலிடம், துவாரகை மன்னராகிய கோபால கிருஷ்ணனிடம் ஒன்றுமே கேட்காமல் குசேலர் திரும்பி விட்டார். உள்ளதை மறைக்காது உள்ளம் உவந்து கொடுக்கும் உரிமையாளனிடத்தும் இரவாது இருத்தல் கோடி படங்கு நல்லது என்னும் குறளின் கருத்துக்கு எடுத்துக் காட்டாக நடந்து கொண்டார் குசேலர்.

2. அதிகமான் நெடுமான் அஞ்சிக்கும் தொண்டைமானுக்கும் நிகழ விருந்த போரைத்



அவனை நாடி, சகடாலன் என்ற பாடலிபுரத்து அமைச்சன் வந்தான். "தன் அரசனை வஞ்சித்துப் பாடலிபுரத்தைக் கைப்பற்றிக் கொண்ட அரசனைத் தொலைப்பதற்குத் துணைபுரிய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். சாணக்கியன் தன்னுடைய சாமர்த்தியத்தால் பாடலிபுரத்தை மீட்டுக் கொடுத்து விட்டுத் திரும்பினான்.

பிறகு ஒரு முறை சாணக்கியன் பாடலிபுரம் சென்ற போது பாடலிபுரத்து மன்னன், சாணக்கியன் உதவியால் அரசுரிமை பெற்ற மன்னன், சாணக்கியனை அவமதித்து அனுப்பி விட்டான். கோபங் கொண்ட சாணக்கியன், "உன்னை ஒரு கை பார்க்



கிறேன்!" என்று கூறி விட்டு வந்தான். ஏழே நாளில் பாடலி புரத்து மன்னனை வெல்லுவதற்கு வேண்டிய உபாயங்களை அமைத்துக் கொண்டு சென்று அவனை வென்றான். முன்னைய மன்னனின் மகனான சந்திரகுப்தனைப் பாடலிபுரத்து அரசனாக்கி முடிசூட்டினான். ஊக்க முடையவரே மக்களுள் உயர்ந்தவர், மற்றவர்கள் எல்லாரும் இழிந்தவர்கள் என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாகச் சாணக்கியன் வாழ்ந்து காட்டினான்.

4. தேவர்கள் எல்லாம் நான் முந்தி நீ முந்தி என்று போட்டியிட்டுக் கொண்டு வந்து திருமணம் செய்து கொள்ள முயன்ற பேரழகு வாய்ந்தவள் தமயந்தி. அவளை மணந்து நள மகாராஜன் புகழோடு புவியாண்டுவந்தான். சனி பகவானின் சூழ்ச்சியால் சொக்கட்டான் ஆடிச் சொந்த நாட்டை இழந்து காதல் மனைவியுடன் காட்டுக்குச் சென்றான். அரச போகத்தில் வாழ்ந்துவந்த தமயந்தியைக் கானகத்தில் அலைந்து திரிய முடியாது என்பதையறிந்த நளன் அவள் எப்படியாவது தன் தந்தையிடம் போய்ச் சேரட்டும் என்று நினைத்தான். நட்ட நடு நிசியில் தமயந்தியைத் தனியே விட்டுப் பிரிந்தான். கண் விழித்த தமயந்தி கணவனைக் காணாது நடு நடுங்கினாள். அழுது புலம்பினாள். கானகத்தில் இருந்த முனிவர்கள் தமயந்திக்கு ஆறுதல் கூறி அவள் தந்தையிடம் சேர்ப்பித்தனர். ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு நளன் திரும்பி வந்தான். கண்ணயர்ந்து தூங்கும்போது கானகத்தில் தனியே விட்டுச் சென்ற பழி யொன்றையும் எண்ணிப் பார்க்காமல் நளனைக் கண்டவுடன் எழுந்து ஓடித் தழுவிக் கொண்டாள் தமயந்தி. "காதலன் கண்ணெதிரே வந்தால் காதலி அவனுடைய பழைய குற்றத்தைக் கருதாது அவன் வயப்பட்டு நிற்பாள்" என்ற பொய்யா மொழிக்குச் சான்றாக விளங்கினாள் தமயந்தி.



எங்கு சென்றாரோ!

ராஜன்

வயது சென்ற கிழவர் ஒருவர் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்று கொண்டிருந்தார். அவருக்குப் பசி காதையும் கண்களையும் மறைத்தது. அவர் தீராப் பசிக்கு உதவ யாரும் முன்வரவில்லை. பலரின் உதவியை நாடிய அவர் கடைசியில் தோல்வியே அடைந்தார். அந்தத் தோல்வியே அவருக்கு வழிகாட்டியது; புதுத்தெம்பைக் கொடுத்தது.

ஒரு பெட்டிக் கடையைக் கண்டார். அதில் ரொட்டியும், வாழைப் பழமும் ஒரு கயிற்றில் கோர்த்துத் தொங்கவிடப் பட்டிருந்தன. அதைப் பார்த்தவுடன் இவர் நாக்கில் ஜலம் ஊறியது. சிறிது நேரம் அதையே உற்றுப் பார்த்து விட்டுக் கடைக்காரரிடம் சென்று "கடைக்காரரே! இரண்டணாவுக்கு ரொட்டி கொடுங்கள்" என்றார்.

பெட்டிக் கடைக்காரர் இரண்டணாவுக்கு இரண்டு ரொட்டிகள் கொடுத்தார்.

பிறகு அக்கிழவர் "இரண்டணாவுக்கு வாழைப் பழம் தாருங்கள்" என்றார்.

கடைக்காரர் மீண்டும் அந்தக் கிழவருக்கு இரண்டணாவுக்கு வாழைப் பழமும் கொடுத்தார். இவை இரண்டையும் வாங்கிக்கொண்டு கிழவர் கிளம்ப ஆரம்பித்தார்.

கடைக்காரருக்குத் தூக்கி வாரிப் போட்டது. கிழவரை ஒருதரம் ஏற இறங்கப் பார்த்தார். அவர் வாடிய முகத்தையும் வயது சென்ற தோற்றத்தையும் பார்த்தார். மிகுந்த மரியாதையுடன், "ஐயா, காசு!" என்றார்.

"எதற்குக் காசு தர வேண்டும்?" என்று கேட்டார் கிழவர்.

"ரொட்டிக்கு" என்றார் கடைக்காரர்.

உடனே கிழவர் ரொட்டியைத் திருப்பிக் கொடுத்து விட்டார்.

அதைப் பெற்றுக் கொண்ட கடைக்காரர் "பழத்துக்குக் காசு எங்கே?" என்றார்.

"அதற்குத்தான் ரொட்டி கொடுத்திருக்கிறேனே!" என்றார் கிழவர்.

கடைக்காரர் மீண்டும், "ரொட்டிக்குக் காசு?" என்றார்.

கடைக்காரர் கேட்டு முடிப்பதற்குள்ளாகவே கிழவர், "ரொட்டியைத்தான் வேண்டாமென்று திருப்பிக் கொடுத்து விட்டேனே!" என்றார்.

கடைக்காரருக்கு ஒன்றும் புரியாமல் "சரி" என்பதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டி விட்டார். கிழவர் அங்கிருந்து மறைந்து விட்டார். சட்டென்று கிழவரின் சூழ்ச்சி புரிந்தது. வாழைப்பழத்துக்குக் காசு கொடுக்காமல் சென்றதை அப்பொழுதுதான் புரிந்து கொண்டார். கிழவரைத் தேடிக்கொண்டு ஓடினார். கிழவர் எங்கு சென்று மறைந்தாரோ!

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

38. சந்தேக விளக்கம்

கேள்வி:—இது வரை "கல்கி"யில் வெளி வந்த எல்லா ஆசனங்களையும் சென்ற ஐந்து மாதங்களாகச் செய்து வருகிறேன். எனக்கு நெடுநாள் இருந்த வயிற்று வலி நீங்கி விட்டது. இதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனால் அவ்வப்போது உடல் உஷ்ணமாய் இருப்பது போல் தோன்றுகிறது. இதற்கு ஆகாரத்தில் தவறு இருக்கலாமென்று உணருகிறேன். நான் எந்த விதமான ஆகாரம் சாப்பிட வேண்டும்? நான் எல்லா ஆசனங்களையும் செய்கிறேன். அப்படிச் செய்யலாமா! அல்லது சிலவற்றைச் செய்து சிலவற்றை விட்டு விடலாமா! அப்படியானால் எந்தெந்த ஆசனங்களை விட்டு விடலாம். தயவு செய்து விளக்கமாய்த் தெரிவிக்கக் கோருகிறேன்.


பதில்:—ஆசனங்களைச் செய்து வயிற்றுவலி போக்கிக் கொண்டதை அறிந்து மிக்க சந்தோஷம். வயிற்றுவலி போக்க ஆசனங்களைப் போன்ற சிறந்த மார்க்கம் வேறெதுவும் இல்லை. ஆனால் அதற்கு எல்லா ஆசனங்களையும் செய்ய வேண்டு மென்பதில்லை. அப்படி எல்லாம் செய்ததினால்தான் உடல் உஷ்ணமாய் விட்டிருக்கிறது. சாதாரணமாய் எல்லா ஆசனங்களும் செய்ய வேண்டுமானால் அதற்குத் தகுந்த ஆகாரமும் தேவை. அதிலும் வயிற்று வலியாக இருந்து ஆசனம் செய்தால் அவசியம் ஆகார மாறுதல் தேவை.

அப்படி ஒன்றும் பிரமாதமான மாறுதல் இல்லை. அதற்காகவென்று அதிகப் பணச் செலவும் கிடையாது. நாம் சாதாரணமாய்ச் சாப்பிடும் ஆகாரத்தையே சற்றுக் கவனித்துச் சிறு சீர் திருத்தம் செய்து கொண்டால் போதும். முதலில் காரத்தை அவசியம் குறைக்க வேண்டும். புளிக்குப் பதில் எலுமிச்சை சேர்த்துக் கொண்டால் நல்லது. அரிசியை நன்கு தீட்டி வெறும் சக்கையைச் சாப்பிடுவதை விட்டு, தவிட்டுடன் அரிசியைச் சாப்பிட்டால் நல்லது. காப்பிப் பழக்கமிருந்தால் அதைச் சிறுகச் சிறுகக் குறைத்து நிறுத்தி விட்டால் உஷ்ணமாகாது. எப்பொழுதோ ஒரு சந்தர்ப்பத்தில் காப்பி சாப்பிடுவதால் பரவாயில்லை. மோர், இளநீர், எலுமிச்சை பானம் சாப்பிட்டால் குளிர்ச்சியாய் இருக்கும். வெந்நீர் குடிக்காமல் காய்ச்சி ஆறின தண்ணீரைக் குடிப்பது நல்லது. வெந்நீரில் குளிப்பதற்குப் பதில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தால் நல்லது. சிறு குழந்தைகள், நோயாளிகள், வயதானவர்கள் மட்டும் வெது வெதுப்பான நீரில் குளிக்கலாம். தொட்டி ஸ்நானம் மிக நல்லது. சோடா, கலர், விஸ்டோ போன்ற பானங்களைச் சாப்பிடக் கூடாது. வெண்ணெய் சேர்ப்பது நல்லது. சக்தியுள்ளவர்கள் பழ வகைகளைச் சேர்க்கலாம். பழயமுது, மோர், முதலியவைகளைச் சாப்பிட்டு வந்தால் மிகவும் நல்லது. அப்படியும் அதிக உஷ்ணமாயிருந்தால் இரண்டு ரோஜாப் பூவைச் சாப்பிடலாம். அல்லது இரவில் படுக்குமுன் குல்கந்து ஒரு கொட்டைப் பாக்களவு சாப்பிடலாம். வெங்காயத்தை அறுத்து நெய்யில் வதக்கிச் சாப்பிடலாம். கீரை, கீரை ரூப், தக்காளி, தக்காளி ரூப் சாப்பிடலாம். அது எல்லாவற்றுக்கும் நல்லது. இவ்வாறு சமயோசிதம் போல் நடந்து கொண்டால் உடல் அதிக உஷ்ணமாகாது சமநிலையில் இருக்கும்.

தவிர எல்லா ஆசனங்களும் செய்ய வேண்டிய அவசியமில்லை. உடலுக்கும் நோய்க்கும் தகுந்த ஆசனங்களை மட்டும் செய்தால் போதும். வயிற்று வலி பல விதத்தில் வரும். அதனை அறிந்துதான் எந்தெந்த ஆசனம் செய்யலா மென்று சொல்ல முடியும். அப்படி இல்லாமல் வயிற்று வலிக்கு ஆசனங்கள் செய்தால் நல்லது என்று எல்லா ஆசனங்களையும் செய்யக்கூடாது. சிலருக்கு வயிற்றில் புண் உண்டாகியிருக்கலாம். அவர்கள் தனுராசனம் மயூராசனம் போன்ற கடினமான ஆசனங்களைச் செய்தால் நன்மைக்குப் பதில் தீமைதான் விளையும். அதனால்தான் நன்கு தெரிந்தவர்களிடம் அறிந்து செய்வது நல்லது. சாதாரணமாய் மற்ற வயிற்று வலிகளாய் இருந்தால் புஜங்காசனம், பஸ்சிமோத்தானாசனம், சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், சிரசாசனம் சாந்தியாசனம் முதலியவைகளைச் செய்யலாம்.

கேள்வி:—வயிற்றில் கட்டி கரைய எந்த ஆசனம் செய்து வந்தால் நல்லது!

பதில்:—எந்த விதமான கட்டி யென்பது தெரிந்தால் தான், அது ஆசனத்தினால் குணமாக்க முடியுமா! முடியாதா! என்பதைச் சொல்லலாம். கட்டிகளில் பலவிதம் உண்டு மலேரியா அடிக்கடி வந்து, கணக்கற்ற கசப்பு மருந்துகள் சாப்பிட்டுச் சாப்பிட்டு, கடைசியில் மலேரியாக் கட்டி வந்து விடும். இந்த மலேரியாக் கட்டி யென்பது ஒரு தனிப்பட்ட முறையில் உண்டான கட்டியல்ல. மண்ணீரல் பெருத்து வீங்கிப் போதலுக்கே மலேரியாக் கட்டி யென்பது. நீம் மாதிரி கட்டி வெகு சுலப



சர்வாங்காசனம்


மாய் ஆசனங்களினால் போக்க முடியும். புஜங்காசனம், பஸ்சி மோத்தாஸனம், சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம் முதலியவைகள் ஒரு மாதம் செய்து பின் சிரசாசனமும் செய்து வந்தால் மூன்று நான்கு மாதங்களிலேயே கட்டாயம் மலேரியாக் கட்டி கரைந்து விடும். யாதொரு வித மருந்தும் அவசியமில்லை.

மற்ற விதத்தில் வயிற்றில் கட்டி உண்டாகியிருந்தால், அது உண்டாகி இருக்கும் இடம், தன்மை முதலியவைகளை நன்கு அறிந்துதான் சொல்ல முடியும். ஆகையால் ஒரு டாக்டரிடம் சென்று வயிற்றை நன்கு சோதித்து மலேரியாக் கட்டியாக இருந்தால், மேலே குறித்த ஆசனங்களைச் செய்யலாம். மற்றும் வேறு விதமான கட்டியாக இருந்தால் விவரம் தெரிவித்தால்தான் தெளிவாகப் பதில் சொல்ல முடியும்...

கேள்வி:—சோம்பல் நீங்கிச் சுறுசுறுப்புடன் இருக்கவும், குழம்பிய மூளை தெளிவு தரவும், ஞாபக சக்தி உண்டாகவும் எந்தெந்த ஆசனங்களைச் செய்து வர வேண்டும்?

பதில்:—புஜங்காசனம், பஸ்சிமோத்தாஸனம், ஹாலாசனம், மயூராசனம், சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், சிரசாசனம், சாந்தியாசனம் செய்ய வேண்டும். நாடி சுத்தி தினம் செய்யவும்.

கேள்வி:—ஆசனங்களைச் செய்யும்போது எந்த வித ஆடை அணிவது நல்லது?



சிரசாசனம்

பதில்:—ஆசனங்கள் செய்யும்போது கட்டாயம் கௌபீனம் அணிந்து அதன்மேல் லங்கோடு அல்லது அரை நிஜார் போன்றவை அணிந்து செய்ய வேண்டும். கோவணம் கட்டாமல் மற்ற வித ஆடைகள் மட்டும் அணிந்து ஆசனங்களைச் செய்யக் கூடாது. பெண்கள் பாடி அல்லது ரவிக்கையோடு அரை அல்லது முழு கால் சட்டை அணிந்து கொண்டு செய்து வரலாம்.

கேள்வி:—எனக்கு ஆசனம் செய்ய வேண்டுமென்று மிகவும் ஆசையாயிருக்கிறது. ஆனால் நாங்கள் ஒண்டுக் குடித்தனம் இருக்கிறோம். ஒரு அறையில் நான்குபேர் படுக்கிறோம். ஆசனங்கள் செய்ய வசதியில்லை. நான் எந்த விதத்தில் ஆசனம் செய்யலாம் என்று தோன்றவில்லை.

பதில்:—இம்மாதிரியான அன்பர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு உடலை நீட்டிப் படுக்கும் இடமாவது இருக்குமல்லவா! அந்த இடமே ஆசனம் செய்யப் போதும். மாடிக் கட்டிடமாயிருந்தால், மொட்டை மாடியில் செய்யலாம். அப்படியும் முடியவில்லையானால் சமீபத்தில் இருக்கும் பூங்காவுக்கு ஒரு விரிப்பைக் கொண்டு சென்று செய்யலாம். கடற்கரை, நதிக்கரை முதலிய இடங்களிலும் செய்து வரலாம்.

கேள்வி:—எனக்கு வயது அறுபது ஆகிறது. உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டு இருக்கிறேன். என் மீதந்த ஆயுளை நல்ல முறையில் நோய்களுக்கு இரையாகாமல் கழிக்க விரும்புகிறேன். அதற்கு எந்தெந்த ஆசனங்களைச் செய்து வர வேண்டும்! தெரிவிக்கவும்.

பதில்:—தங்களைப் போன்றுள்ள ஒரு மாஜி உத்தியோகஸ்தர் ஸ்ரீ எம். என். வி. ராமன் என்பவர் கீழ் வரும் கடிதத்தை எழுதியிருக்கிறார். அதைப் படியுங்கள். இந்தக் கட்டுரையில் வெளியாகியிருக்கும் படங்களும் அவருடையவைதான்.

"எனக்கு இப்பொழுது ஐம்பத்தைந்து வயது பூர்த்தி ஆகிறது. முறைப்படி உத்தியோகத்திலிருந்து விலகி உபகாரச் சம்பளம் பெற்றுள்ளேன். பெரிய குடும்பம் படைத்தவன். தாங்கள் 'கல்கி'யில் 'ஆரோக்கிய ரகசியம்' என்ற தலைப்பில் எழுதி வரும் கட்டுரைகளைப் படிக்க ஆரம்பித்த பிறகு சுமார் ஒன்பது மாத காலமாய்க் கீழ்க்கண்ட ஆசனங்களைத் தினமும் விடியற் காலையில் வெறும் வயிற்றோடு செய்து வருகிறேன்.

1. பத்மாசனம்; 2. சர்வாங்காசனம் 5 நிமிஷம் வீதம்; மத்ஸ்யாசனம் 3 முறையும், ஒரு முறை 4 நிமிஷம்; 4. சிரசாசனம், ஒரே முறை 10 நிமிஷம்; 5. சாந்தி ஆசனம் 20 நிமிஷம்; பத்மாசனம் தினம் மும்முறை; சந்தியாவந்தனம் பிராணாயாமம் அல்லது நாடி சுத்தி, காயத்திரி ஜெபம் செய்யும் போது செய்கிறேன்.

சாதாரணமாய் சுமாராக நல்ல தேகநிலையுள்ள நான் மேற்கண்ட ஆசனங்கள் செய்ய ஆரம்பித்த பிறகு இதுவரை இல்லாத நல்ல ஞாபக சக்தி, நல்ல சுறுசுறுப்பு, நல்ல பசி, நல்ல ஜீர்ணசக்தி, நல்ல தூக்கம் இவைகள் வெகு சுகமாய் அனுபவிப்பது மல்லாமல் நல்ல உற்சாகத்துடன் தினசரி வாழ்க்கையில் என் அலுவல்களைக் கவனித்து வருகிறேன். சர்வாங்காசனம், சிரசாசனம், இவ்விரண்டுமே சர்வரோக நிவாரணி—மணி மந்திர ஔஷதம் என்று நினைக்கிறேன்.

எல்லாச் சிறுவர்களையும் தவிர, என்னைப் போன்ற வயதானவர்கள் தங்களுக்கு இருக்கும் தேக அசௌக்யங்களை நீக்கிக் கொள்ள முழு நம்பிக்கையுடன் தங்கள் கட்டுரைகளைப் படித்து அதில் கண்ட யோக ஆசனங்களைத் தவறாமல் சரிவரப் பழகி வந்தால் நம் நாட்டில் பிணி, மூப்பு, துன்பங்கள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கி மறையும் என்பதில் சந்தேகமில்லை." (தொடரும்)

புதுமைப் பெண்கள்

கோமதி சுப்ரமணியம்

சாலையூரில் ஏற்பாடாகியிருந்த கச்சேரிக்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர் அவர்கள் இருவரும். அவர்கள் பிரயாணத்திற்கான வசதியைச் செய்து கொடுத்துக் கொண்டிருந்த சாவித்திரியின் மனம் கட்டுக்கடங்கா ஆனந்தத்தால் துள்ளித் திரிந்து கொண்டிருந்தது.

"சாவித்திரி, விலையுயர்ந்த துணிகளைக் கண்ட மட்டும் என் பெட்டியில் அடைக்காதே. சாதாரண டிரஸ் போதும்" என்று மஞ்சுளா கூறியதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் தனக்குத் தோன்றியதை எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள் சாவித்திரி.

"உன் அபரிமிதமான அன்பை என்னைப் பட்டாலும் பகட்டாலும் அலங்கரிப்பதில் தானா செலவிட வேண்டும்!" என்று அவள் மீண்டும் கூறிய போது சாவித்திரிக்குக் கோபம் வந்துவிட்டது.

"போ, அக்கா! நீ இன்னும் ஒன்றுமே தெரியாதவளாக இருக்கிறாயே. உலகம் பகட்டில்தான் மயங்குகிறது என்பதை உணர்ந்து கொள்ளாதது வருந்தத்தக்க விஷயந்தான்......"

"போடி பைத்தியம். உண்மை அன்பில்தான் உலகம் மயங்குகிறது என்பதை என் அனுபவத்தில் கண்ட பிறகுமா போலியில் மயங்கச் சொல்லுகிறாய்" என்று கூறிவிட்டுப் பின் பிரயாணத்துக்கான ஆகாரத்தைத் தயாரிக்கச் சென்று விட்டாள் மஞ்சுளா. அவள் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது.

'உண்மை அன்பு' என்று கூறிய அவள் வார்த்தை சாவித்திரியின் மனத்தை ஒரு புரட்டுப் புரட்டியது. இத்தனை அன்புடன் பழகும் அவர்கள் வாழ்க்கையில் நிகழ்ந்து விட்ட இறந்த காலச் சம்பவம் அவள் மனத்தில் தோன்றிக் கிறுகிறுக்க வைத்தது. தன்னை மறந்த நிலையில் பழைய நினைவுக் கயிற்றில் சிக்கித் தடுமாறினாள் சாவித்திரி. அவள் சிந்தனை சுழன்றது.

* * *

சங்கீத வித்துவான் சங்கரனுக்குத் தன்னைப் பெண் கேட்டு வந்தார்கள் என்பதை முதலில் நம்ப முடியாமல் திணறினாள் சாவித்திரி. பிள்ளையின் வரவுக்காகத் தன்னை அலங்கரிக்கச் சொன்ன போது கூட நம்பிக்கை பிறக்கவில்லை அவள் மனத்தில். "பிள்ளை நேரில் பார்க்க வேண்டிய அவசியமேயில்லை. தாயாருக்குப் பிடித்தால் தனக்குப் பிடித்த மாதிரிதான்" என்று சொல்லிவிட்டதாகக் கூறிப் பிள்ளையின் தாயார் முகூர்த்தம் வைக்க வந்தபோதுதான் உண்மையென நம்பினாள். ஏதோ புது உலகில் இருப்பதுபோல் மகிழ்ந்தாள்.

பிரபல பாடகரான சங்கரனை இதுவரை நேரில் பார்த்ததில்லையே தவிர அவன் குரலைப் பலதடவை ரேடியோ மூலமும் ரிக்கார்டுகள் மூலமும் கேட்டுப் பரவசமடைந்திருக்கிறாள் சாவித்திரி. அவனது புகழ்பாடும் கோஷ்டியோடு சேர்ந்து அவனையும் அவனது சங்கீதத்தையும் பன்முறை புகழ்ந்திருக்கிறாள். அவன்தான் அவள் கரம் பிடிக்கும் மணாளனாக வரப்போகிறான் என்பதை மட்டும் கனவிலும் கருதியிருக்கவில்லை. அவனுக்கு அவள் என்று நிச்சயம் செய்துவிட்ட பின்னர் தன்னையே மறந்த நிலையில் மாறி விட்டாள் சாவித்திரி.

விவாக தினத்தன்று மணமகனோடு இணைந்து பாடிய அந்தப் பெண்ணைப் பற்றிப் பந்தலிலுள்ளவர்களின் பேச்சு பலவிதமான தினுசில் வெளிப் புறப்பட்டது. மணப்பெண் சாவித்திரியின் மனத்தில் அவர்கள் பேச்சின் தரம் ஒன்றும் பதியவில்லை. அந்த நிமிஷமே அவள் கணவனாயிருக்க சங்கரனோடு—பிரபல வித்துவானோடு, சுருதி பேதமின்றி இணைந்து பாடும் அந்தப் பாடகியின் குரலைப் புகழ்வதில் மூழ்கியிருந்தது அவள் மனம். இசையும் நாதமும் போல இணைந்து ஒலித்த அவர்களது இசை வெள்ளத்தில் மிதந்து சென்ற சாவித்திரி தன்னைச் சமாளிக்க முடியாமல் திணறினாள். கீதத்தின் போதையிலே இறங்கிவிட்ட சாவித்திரி தன்னை மறந்தாள். தன் நிலையை மறந்தாள். தான் யார் என்பதைக் கூட மறந்து விட்டாள். சங்கீதத்தின் இன்பப் போதையிலே சிக்கித் தடுமாறி நின்ற அவள் தன் சுய உணர்வு பெற வெகு நேரம் பிடித்தது. பாட்டு முடிந்துவிட்ட பின்னரும் கூட, பாட்டின் நினைவு மயக்கத்திலே தடுமாறிய அவளை நலங்கிற்கு அழைக்க வந்த பெண்களின் குரல் தட்டி எழுப்பியது. அதன் பின்னர் தான் அவள் மணப் பெண் என்பதும் அமர்ந்திருப்பது மண மேடை என்பதையும் உணர முடிந்தது.

நலங்கு முடிந்து அவரவர்கள் வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். கழுத்தில் பாரமாய் அழுத்திய ரோஜா மாலையைக் கழற்றிய சாவித்திரி சட்டென்று எதையோ நினைத்துக் கொண்டவள் போல் வாசற்புறம் விரைந்தாள்.

அவள் வாசலுக்கு வந்தபோது அங்கே கச்சேரி நடத்திய கோஷ்டியார் காரில் ஏறிக் கொண்டிருந்தனர். கடைசியாக ஏறப்போன மஞ்சுளாவை "ஒரு நிமிஷம்" என்று எழுந்த மணப் பெண்ணின் குரல் தடுத்து நிறுத்தியது.

"யாரது சாவித்திரியா!" என்று வியப்புக் குறி விழிகளில் தெறிக்க வினவினாள் மஞ்சுளா.

"உங்கள் பாட்டு ரொம்பவும் அபாரம். அதுவும் அவரோடு இணைந்து ஒலித்த உங்கள் குரல் என் நெஞ்சில் அழியா ஒலியாகப் பதிந்து விட்டது" என்று ஆர்வம் பொங்கக் கூறி நின்ற சாவித்திரியை நன்றியோடு நோக்கினாள் மஞ்சு. அவள் மனத்தில் என்ன எழுந்ததோ தெரியவில்லை. மஞ்சுவின் கண்கள் கணத்தில் கலங்கி நின்றன. அவள் கலக்கத்தைக் கண்டு திகைத்துப் போய் ஒன்றும் புரியாமல் தடுமாறினாள் சாவித்திரி.

"ஏன், உங்கள் கண்கள் இப்படிக் கலங்குகிறது! நான் சொன்னதில் ஏதாவது தவறு இருந்தால் மன்னித்து விடுங்கள்."

"இல்லை சாவித்திரி. உனது அபரிமிதமான புகழ் மொழியால் எழுந்த ஆனந்தக் கண்ணீர் தான் இது" என்று கூறியவள் கையிலிருந்த கைக்குட்டையால் அவசரம் அவசரமாகக் கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டாள்.

மேலே நேரம் செல்வதால் நிலைமை விரஸமாக மாறிவிடக் கூடாதென்று அஞ்சியவனைப் போல "நேரமாகவில்லையா! கார் கிளம்பலாமே" என்று உத்தர விட்டான் சங்கரன்.

தனது மனத்தில் பொங்கிய இன்பத்தை நேரில் கொட்டிவிட வேண்டும் என்று மஞ்சுவிடம் வந்த

சாவித்திரி அங்கே சங்கரன் நின்று கொண்டிருப்பதைக் கூடக் கவனிக்கவில்லை.

மணமான சிறிது பொழுதிலேயே கணவனின் எதிரில் நின்று விட்டதை நினைத்து நாணம் மிகுந்தவளாய் உள்ளே ஓடிவிட்டாள் சாவித்திரி.

அவளது செயலைக் கண்டு திகைத்து விட்டான் சங்கரன். சாவித்திரியின் பேச்சில் தொனித்த அன்புப் ஆசையும் சங்கரனின் மனத்தைக் கலக்கி விட்டது. இந்தக் களங்கமற்ற அன்பு என்றும் நிலைத்திருக்குமா! என்றும் விகற்ப மில்லாமல் சாவித்திரி மஞ்சுவின் அன்பின் முன், தன்வாழ்க்கை நிம்மதியுடன் செல்ல முடியுமா என்பதைச் சிந்தித்தது அவன் மனம். முடியாது! எத்தனை நிர்மலமான உள்ளத்தையும் பிறரது போதனை என்னும் நஞ்சு கலந்து நாசமாக்கிவிடத் தான் செய்யும். அப்போது இந்த சாவித்திரி—மஞ்சு இவர்களது அன்பு எத்திசையில் செல்லுமோ தன் வாழ்க்கைப் படகு எத்தகைய புயலிலெல்லாம் சிக்கித் தவிக்கப் போகிறதோ என்கிற எண்ணமெல்லாம் கண நேர சிந்தனையில் மின்னிப் புரண்டன.

மணப் பெண் வாசலுக்குப் போய்க் "கச்சேரிக்காரியோடு" பேசிக் கொண்டிருந்தாள் என்கிற பேச்சு மெதுவாய்க் கிளம்பிப் பெண்ணின் மாமியார் காதிலும் பட்டு விட்டது. அவ்வளவு தான், அவள் உள்ளம் கொதியாய்க் கொதிக்கத் தொடங்கி விட்டது. இப்படியும் அசட்டுப் பெண் உலகத்தில் இருக்குமா! ஆற்றோடு போகிறவளை இவளைக் கொண்டு தூண்டில் போட்டுக் கரைக்கு இழுக்க நினைத்தால் இவளும் சேர்ந்து அவளோடு ஆற்றில் குதிக்கிறாளே. இப்படியே விட்டுக் கொண்டிருந்தால் நிலைமை மோசமாகி விடுமே' என்று கருதிய மாமியார் மருமகளை அழைத்துக் கண்டிக்க நினைத்தாள்.

தன்னை மாமியார் தனிமையில் சந்தித்துப் பேச விரும்பும் காரணமறியாத சாவித்திரி மனதில் பீதியுடன் மாமியின் அறையை நெருங்கினாள். மருமகள் வந்ததும் அவள் செய்கையைக் கண்டித்துப் பேசித் திருத்திவிட வேண்டும் என்று கருதிக் கொண்டிருந்த மாமியார் பதுங்கிப் பதுங்கி வந்து நின்ற மருமகளைக் கடுமை நிறைந்த பார்வையோடு ஏறிட்டு நோக்கினாள். சாவித்திரியின் களங்கமற்ற முகமே கணத்தில் மாற்றி விட்டது மாமியார் மனத்தை. 'சீ என்ன அசட்டுத்தனம்! மணமான அன்றே மாமியார் என்கிற மமதையைக் காட்டி என் அருமையைக் கெடுத்துக் கொள்ள இருந்தேனே' என்று தன்னை நொந்து கொண்ட மாமியார் தன் மனத்தைத் தேற்றிக் கொண்டாள். ஆனாலும் சொல்ல நினைத்த விஷயத்தைச் சொல்லாமலும் விட மனமில்லை.

"ஆமாம். அந்தப் பாட்டுக்காரியைப் பெரிதாக மதித்து அவளுடன் பேசப் போய்விட்டாயே! நம் அந்தஸ்தென்ன, நமது கௌரவமென்ன......!"

"அவள் பாட்டு என் மனத்தைக் கிறக்கி விட்டது" என்று தன் அபிப்பிராயத்தை அப்படியே வெளியிட்டாள் சாவித்திரி.

"அழகாகப் பாடுகிறாள் என்பது வாஸ்தவம். அவள் அழகான பாட்டையும் இளமை தவழும் மதி வதனத்தையும் கொண்டு அடுத்தவர்கள் வாழ்வைப் பாழடிப்பதை நினைத்து அவளை அடியோடு வெறுக்கிறேன்."

"அவள் எப்படியிருந்தால் நமக்கென்ன அத்தை! நான் ரசித்தது அவள் பாட்டைத்தானே......"

"நீ அவள் பாட்டை ரசிக்கின்றாய். உன் கணவன் அவள் அழகை ரசிக்கிறான்......"

"ஆ!" வென்ற திடுக்கிட்ட குரல் அவள் வாயினின்றும் புறப்பட்டது.

நிஷ்களங்கமான மனத்தில் நஞ்சைப் புகுத்தி விட்டாள் மாமியார். இனி அது தன் வேலையைத் தொடங்கும் என்பதில் நம்பிக்கை வைத்த மாமியார் அவ்விடம் விட்டகன்று விட்டாள்.

* * *

மாமியார் அதைக் கூறியதும் அப்படியுமிருக்குமா என்று எண்ணத் தொடங்கியது சாவித்திரியின் மனம். சங்கீதத்தில் இணையாய்த் திரியும் அவர்கள் ஏன் வாழ்க்கையிலும் ஒன்றாய் இணைந்திருக்கக் கூடாது என்ற ஓர் எண்ணம் எழுந்தது. அவர்களை ஜோடியாய்க் காண விரும்பாத மாமியார் தன்னைக் குறுக்குச் சுவராக எழுப்பி யிருக்க வேண்டும் என்கிற உண்மையை உணர முடிந்தது. தன்னால் அவர்களது இன்ப வாழ்வைப் பிரிக்க முடியுமா! மகன் அந்தப் பெண்ணுடன் சேர்ந்திருப்பது பிடிக்காத தாயார் அவர்கள் வாழ்வைப் பிரிக்கத் தன்னைக்கொண்டு வந்திருக்கிறாள். இது நியாயமான முறையாகுமா என்பன போன்ற கேள்விகள் பலப்பல எழுந்து வதைத்தன. எது வந்தாலும் சரி, அவர்கள் உறவைப் பற்றிச் சந்தேகம் நினைப்பதாகவே தன் கணவன் சிறிதும் அறிந்து விடாதபடி சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டுமென்று தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள்.


அன்று தன்னோடு பாடிய பெண் யார்! அவளுக்கும் உனக்கும் என்ன உறவு என்றெல்லாம் சாவித்திரி கேட்பாள் என்று எதிர்பார்த்த சங்கரன் ஏமாற்ற மடைந்தான். அவளாக ஒன்றும்



கேட்கா விட்டாலும் அவனுக்காக உண்டான குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்துக் கொண்டிருந்தது. ஏதாவது ஒருநாள் கேட்டாலும் என்ன பதில் சொல்லுவதென்றும் தீர்மானித்து வைத்திருந்தான். மணமாகி ஆறு மாதத்தில் ஒரு பொழுது கூட அந்தச் சந்தர்ப்பம் வாய்க்கவே யில்லை. சில சமயம் இரவு நேரத்தில் வீட்டிற்கு வராமலிருந்தும் அதைப்பற்றி ஒன்றுமே பேசாதிருந்தாள். அவள் தன்மை என்ன வென்பதை அறிய முடியாமல் தடுமாறினான் சங்கரன். ஒரு வேளை அவளுக்குத் தன் ரகசியம் தெரியாதா அல்லது தெரிந்தே வேண்டும் என்று அதைப் பற்றிப் பேசாதிருக்கிறாளா! தெரிந்தும் தெரியாதவள் போலிருக்க எந்தப் பெண்ணின் மனமும் இடம் கொடுக்காது. தெரியாமலிருக்க முடியாது. யார் சொன்னாலும் சொல்லா விட்டாலும் அவள் தாயார் கட்டாயம் கூறி அவளைத் திருத்தப் புத்தி சொல்லி யிருக்க மாட்டாளா? அவள் புத்தியை ஏற்றுக்கொண்டுமா தன்னிடம் அதைப் பற்றி ஒரு வார்த்தையும் பேசாதிருக்கிறாள் என்றெல்லாம் நினைத்துத் தனக்குள் குழம்பினான். மனத்தை அரித்த அந்த ரகசியத்தைப் பற்றி அவனோ அவளோ பேச முடியாமலே தவித்ததோடு காலம் ஓடியது.

வழக்கம் போல் மகன் அந்தப் பெண்ணைச் சுற்றிக் கொண்டு அலைவதும் அவளோடு சேர்ந்து கச்சேரிக்குச் செல்வது மாகவே திரிந்து கொண்டிருந்தது தாயாருக்கு வெறுப்பைக் கொடுத்தது. வீட்டுக்கு வந்த பெண்ணாவது ரகளை பண்ணி அதை அடக்கிவிடுவாள் என்று நினைத்தால் சாவித்திரியின் மௌனம் பெருத்த வேதனை யளித்தது. இப்படியே விட்டுக் கொண்டிருந்தால் மகன் திருந்துகிற வழியே கிடைக்காது என்று நினைத்துப் பீதியடைந்த தாயார் இதற்கு ஏதாவது வழி வகுக்காமல் முடியாது என்ற முடிவுக்கு வந்தாள்.

"சாவித்திரி உன் வாழ்க்கையை நீயே கெடுத்துக் கொள்கிறாய். அவனை இப்படியே விட்டுக் கொண்டிருந்தால் அவன் வீட்டோடு கதியாய்ப் போய் விடுவான். அப்புறம் உன்னுடைய கதி அதோகதிதான். உன் வாழ்க்கை வீணாகி விடும்."



"இல்லை, அத்தை! நான் ஒன்றுமே அறியாதவளைப் போலிருப்பதால்தான் இந்த மட்டுமாவது அவரது அன்பைப் பெற முடிகிறது. சண்டை போட்டு ரகளை பண்ணினால் இதற்குள் அவள் வீடே கதியென்று போய் இருப்பார்......" என்று கூறவும் ஆத்திரம் வந்தது மாமியாருக்கு.

"நீ எல்லாம் தெரிந்தவள். அதனால் உன் யோசனைதான் உசிதமானது. நான் கூறுவதெல்லாம் உன்னைக் கெடுப்பதற்கான அபிப்பிராயம். அப்படித்தானே!"

"தவறாக எடுத்துக் கொள்ளாதீர்களே, அத்தை! நான் அப்படி ஒன்றும் சொல்ல வில்லையே. வெகு நாளாக வீழ்ந்து விட்ட அவர் மனத்தை மெல்ல மெல்லத் தானே திருப்ப வேண்டும். அவர் போக்குக்கு விரோதமாக அவருடன் சண்டை போட்டு ரகளை செய்வதால் பலன் ஒன்றும் கிடைக்கப் போவதில்லை. தீராத பகையை ஏற்றுக் கொள்வதோடு அவரது அன்பையும் இழந்து நிற்க வேண்டியதுதான்."

"நீ படித்தவள். அதனால் இல்லாத மேதாவி யெல்லாம் பேசுகிறாய்" என்று கூறினாள்.

"என் படிப்பை நல்ல முறையில் செலவிட விரும்புகிறேன் அத்தை. என் மீதுள்ள அன்பினால் அவருக்காக மனம் திருந்தினால் திருந்தி வரட்டும். இல்லையானால் அவர் போக்குக்கே விட்டு விடுவது தான் நல்லது. இப்பொழுதுதான் என்ன! அவர் அவளுடன் சேர்ந்திருக்கிறார் என்பதற்காகக் குடும்பத்தில் பற்றில்லாமல் திரிகிறாரா! அல்லது என் மீது வெறுப்புடனிருக்கிறாரா!"

"இப்போ புதுசிலே அப்படித்தா னிருக்கும். ஆனால் போகப் போகத்தான் அதன் நிலைமை அறிந்து வருந்துவாய்."

"எனக்கென்னவோ அந்தப் பெண்ணைப் பார்த்த போது மனத்தில் நல்ல அபிப்பிராயம்தான் தோன்றுகிறது. அந்தப் பெண்ணுக்கும் அவருக்கும் மனமொன்றிய அன்பிருக்குமானால் அதைக் கெடுக்க நான் நினைப்பது பாவமில்லையா! ஒரு பெண்ணே மற்றொரு பெண்ணின் வாழ்வைக் கெடுக்க முயற்சிக்கலாமா!"

"அழகாய் தானிருக்கிறது உன் வேதாந்தம். அவன்தான் புத்தி கெட்டுப் போய்த் திரிகிறானென்றால் நீயும் அவனைவிட கேடுகெட்டவளாக வாய்த்திருக்கிறாயே. உங்கள் இருவரின் தலைவிதிப்படி கெட்டழிந்து போங்கள்" என்று மிகுந்த வெறுப்புடன் கூறிவிட்டாள்.

மாமியுடன் விட்டுக் கொடுக்காமல் பேசிவிட்டாள். ஆனாலும் அவள் மனம் கணவனை எப்படித் தன் வசம் திரும்பச் செய்வது என்கிற யோசனையில் மிகவும் ஆழ்ந்து போயிருந்தது. அதற்கான சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் காத்திருந்தாள் சாவித்திரி.

அவள் அந்தச் சந்தர்ப்பத்திற்காக அதிக நாள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. அந்த நாள் வெகு சமீபத்திலேயே கிடைத்து விட்டபோது தன் மனத்தைத் திடப் படுத்திக் கொண்டாள்.

* * *

ஒரு வாரமாக வெளியூர் கச்சேரிக்குப் போய் விட்டு அன்றைக்குத் தான் வந்திருந்தான்.



ஆசிரியர் :—என்ன ஐயா, நீர் கதை எழுதிய லக்ஷணம்! எழுத்தே புரிய வில்லையே! எப்படிப் படிக்கிறது?

கதை எழுதியவர் :—அதனால் என்ன? பத்திரிகையிலே அதை அச்சுப் போட்டுப் படித்துப் பாருங்கள், சரியாகப் புரியும்.

சாப்பாடு முடிந்து சற்று ஓய்வு எடுத்துக்கொண்ட பின் மெதுவாகப் பேசத்தொடங்கினாள் சாவித்திரி.

"உங்களுடன் ஒரு விஷயம்" என்று தயங்கிய சாவித்திரியின் குரல் சங்கரனின் மனத்தில் பல கேள்விகளை எழுப்பி விட்டது. இது நாள் வரை எதிர் பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கேள்வியைத் தான் இன்று கேட்கப் போகிறாளோ என்று நினைத்த சங்கரன் பதில் சொல்லுவதற்காகத் தன்னைத் தயார் செய்து கொண்டான்.

"முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டும். உங்களிடமிருந்து வரப்போகும் பதிலைப் பொறுத்துத்தான் இருக்கிறது குடும்பத்தின் தலையெழுத்து" என்று மென்று விழுங்கியபடியே கேட்டு விட்டுச் சற்று நிறுத்தினாள்.

சந்தேகமில்லை அவனுக்கு. அவள் என்ன கூறப் போகிறாள் என்பதை ஒரு வகையாக ஊகித்துக் கொண்ட சங்கரனின் முகம் பீதியினால் வெளிறத் தோன்றியது. மனத்தைத் தேற்றிக் கொண்டான்.

"அப்பா அவர்களின் வியாபார விஷயமாக கோர்ட்டில் வழக்கு நடந்து கொண்டிருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். 'கேஸ் முடிய இன்னும் இரண்டொரு மாதமே இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் சோதனையாக அப்பா உடல் நல மில்லாத நிலையிலிருக்கிறேராம். அதனால் ஓடியாடி கவனிக்க முடிய வில்லையாம். வெண்ணெய் திரளும் சமயம் தாழி உடைந்து விடும் போலிருக்கிறதே' என்று எழுதியிருக்கிறார்கள்."

"அதனால் நாம் போய் அதைக் கவனித்துக் கொள்ள வேண்டு மென்கிறாய் அதுதானே உன் நோக்கம்......" என்று முடித்தான் சங்கரன். அவன் நினைத்ததைப் போல் தன் விஷயத்தைக் கேட்க வராமல் இதைக் கூறினாளே என்றவரை ஒரு திருப்தி. அந்தச் சமயம் அவன் இருந்த நிலை அவன் விஷயம் தவிர மற்ற எது செய்யச் சொன்னாலும் செய்யத் தயாராக இருந்தான்.

கேஸ் சீக்கிரம் முடிந்துவிடும் என்று கூறியிருந்ததால் அவன் வேண்டு கோளுக்காக ஒரே ஒரு மாதம் அங்கு போக ஒப்புக் கொண்டு விட்டான். அது போதாதா அவளுக்கு. சந்தோஷம் தாங்க வில்லை. மறுகணமே தந்தைக்குக் கடிதம் பறந்தது.

கடிதத்தைக் கண்ட அந்த நிமிட முதல் அரை குறை படுக்கையாக இருந்த தணிகாசலம் பின்னை முழுப் படுக்கை போட்டு விட்டார். கடையை ஒப்புக் கொள்ள மருமகனும் விட்டு நிர்வாகத்தை ஏற்று நடத்துவதற்கு மகளும் வீட்டோடு வந்து விட்டார்கள். அதற்குப் பிறகு வேறு என்ன குறை இருக்கப் போகிறது அவருக்கு!

* * *

ஒரு மாதத்தில் முடிந்துவிடும் என்று நினைத்து வந்த கேஸ் இருக்கும் நிலையை ஆராய்ந்ததில் இன்னும் ஆறுமாதமாவது நீடிக்கும் என்பதை யூகித்துக் கொண்டான் சங்கரன். வந்து காலை வைத்த பின் வந்த விஷயம் முடியு முன்னால் பின் வாங்குவது தன் ஆண்மைக்கழகல்ல என்று நினைத்த சங்கரன் ஆறுமாதமல்ல ஆறு வருஷமானாலும் கேஸை முடிக்காமல் அந்த ஊரைவிட்டுப் போவதில்லையென முடிவு செய்து கொண்டான்.

மஞ்சளாவிடம் ஒரு மாதத்தில் திரும்பி விடுவதாகக் கூறி வந்திருந்தானாதலால் அங்குள்ள நிலைமையை விளக்கிப் பின்னும் இரண்டொரு மாதம் எந்தக் கச்சேரிக்கும் செல்லாமல் தனக்காக காத்திருக்குமாறு எழுதியனுப்பி யிருந்தான். அவன் எழுதுவதை அவனையறியாமல் கவனித்துப் படித்த சாவித்திரி தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

அந்தக் கடிதத்திற்குப் பதில் வரும். அது அவன் கைக்குச் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது தன்னுடைய கடமை என்று நினைத்துக் கொண்ட சாவித்திரி அன்றைய தினமே தனது வேலையைத் தொடங்கினாள்.

மஞ்சளாவின் கடிதத்தைக் கையில் பெற்ற சாவித்திரியின் மனம் குழம்பித் தவித்தது. அதைத் கைக்குக் கிடைப்பதற்காகப் படு பிரயத்தனங்கள் செய்து தன் கைப்பற்றிக் கொண்டாள். ஆனால் அவள் மனமென்னவோ கபடறியாத அந்தப் பெண்ணுக்குத் துரோகம் செய்வதை அவ்வளவாக ஒப்புக் கொள்ளவில்லை. அதோடுகூடத் தன் கணவனுக்கும் துரோகம் செய்வதான அந்தச் செய்கையைச் செய்ய அவள் மனம் கூசியது. ஆனால் அவள் அங்கே தன் கணவனை அழைத்து வந்த நோக்கமென்ன! அந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால் அவர்களிருவருக்கும் துரோகம் செய்துதானாக வேண்டும். அதற்காக அஞ்சினால் தன்னுடைய வாழ்க்கையே அடியோடு அழிந்தாலும் அழிந்து விடலா மல்லவா!

இந்த எண்ணம் தோன்றவும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள். கடிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித்தாள். எரிந்து கொண்டிருக்கும் அடுப்பில் போட்டு விட்டாள்.

வெளியே போய் வந்த கணவன் "எனக்கொன்றும் தபால் இல்லையே" என்று கேட்ட போது "இல்லை" என்ற சொல்லைத் தயக்கத்துடன்தான் கூற முடிந்தது. அச்சொல்லில் தொனித்த நடுக்கத்தை அவன் அறியாவிட்டாலும் அவள் மனம் ஏனோ சித்திரவதை செய்தது. இரவு படுக்கப் போன சாவித்திரியின் மனத்தில் நிம்மதியே யில்லாது தவித்தாள்.

பல கடிதங்கள் எழுதியும் பதில் வராமல் போகவே தந்தி யடித்தாள் மஞ்சளா. தபாலைத் தடுத்த சாவித்திரிக்குத் தந்தியை மறைக்கவா தெரியாது! தந்தி மேல் தந்தியாகப் பறந்ததைச் சாமர்த்தியமாக அமுக்கி விட்டாள். இனிமேல் அவளது தொந்தரவு அடியோடு ஒழிந்துவிட்டது என்று நினைத்த சாவித்திரியை அடியோடு திகைக்கச் செய்து விட்டது மறுநாள் நடந்த சம்பவம்.



அறிவாளி!
ஸெவன் ஓ'கிளாக்
ஸ்லாட்டெட்
பிளேடுகளினால்
தினசரி முகத்தை
க்ஷவரம் செய்து
கொள்கிறார்.



ஸெவன் ஓ' கிளாக்
ஸ்லாட்டெட் பிளேடுகள்

முகத்தைச் சுத்தமாக க்ஷவரம் செய்திருப்பது முன்னேற்றத்தின் அறிகுறியாகும். ஆனால் தினசரி க்ஷவரம் செய்து வருதல் அவசியம். தாழ்ந்தவைக் கொண்டு க்ஷவரம் செய்வதால் அதிகச் செலவு நேரிடும்.

ஆனால், தினமும் சிக்கனமான முறையில், சுத்தமாக க்ஷவரம் செய்து கொள்வதற்கு ஸெவன் ஓ' க்ளாக் பிளேடுகள் கிடைத்திருப்பது ஓர் அதிர்ஷ்டமே. ஸெவன் ஓ' க்ளாக் பிளேடுகள் அதி கூர்மையானவை, சுத்தமாக க்ஷவரம் செய்பவை, நெடுநாள் உழைப்பவை, உண்மையான சிக்கனம் வாய்ந்தவை.

வெற்றியடைந்த, வசீகரத் தோற்றமுடைய, மனிதர்களோடு சேர்ந்து கொள்ளுங்கள்! தினசரி ஸெவன் ஓ' க்ளாக் பிளேடுகளினால் க்ஷவரம் செய்யுங்கள்.

7 o'clock

ஸெவன் ஓ' கிளாக் ஸ்லாட்டெட் பிளேடுக



10 ப்ளேடுகள் கொண்ட
பாக்கெட் ரூ. 1

98(1) TAM.



தமிழர்கள் எங்கிருந்தாலும் தமிழையும் தமிழ் நாட்டையும் மறக்கமாட்டார்கள். அதற்கு எடுத்துக் காட்டாகப் பம்பாயில் வாழும் தமிழர்கள் இந்த மாத ஆரம்பத்தில் தமிழ் விழாவை விமரிசையாகக் கொண்டாடினார்கள். விழா பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் மாதுங்காவில் நடந்தது. மேற்படி விழாவுக்குத் தமிழகத்திலிருந்து சென்ற டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்தார். விழாத் தலைவரையும் விழாவில் கலந்து கொண்டு சொற்பொழிவு நிகழ்த்திய ஸ்ரீமதி ஆ. ரா. இந்திரா, சங்கத் தலைவர் ஸ்ரீ எஸ். ஏ. ஐயர், பரிசுகள் வழங்கிய ஸ்ரீமதி சட்டநாதன், விழாவின் வெற்றிக்குப் பாடுபட்ட சங்கத்தைச் சேர்ந்த தமிழன்பர்கள் ஆகியோரை மேலே படத்தில் காணலாம்.

வீட்டு வாசலில் வந்து நின்ற வண்டியிலிருந்து மஞ்சுளா இறங்கப் போகிறாள் என்பதைச் சிறிதும் எதிர்பார்த்திராத சாவித்திரி அவளைக் காணவும் தூக்கி வாரிப் போட்டு நின்றாள். 'செத்தோம் இனிமேல் தப்ப மாட்டோம்' என்று கலங்கிப் போயிருந்த அவளை அன்புடன் வந்து பற்றிக் கொண்டாள் மஞ்சுளா. "சௌக்கியமா சாவித்திரி!" என்று கேட்டவளிடம் ஏதும் பேச முடியாமல் கண்ணீர் வடித்தாள் சாவித்திரி. அவளது கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்ட மஞ்சுளா அவள் கலக்கத்தின் காரணமறியாமலே பதறினாள். "ஏன் சாவித்திரி! உன் உடம்புக் கென்ன! நீ சௌக்கியந்தானே! அவர் சௌக்கியமாயிருக்கிறாரா!" என்று பதறிய மஞ்சுளாவின் பாதங்களைப் பிடித்துக் கொண்டு கேவினாள் சாவித்திரி.

"அக்கா என்னை மன்னித்து விடுங்கள்! நான் உங்கள் அன்புக்கு அருகதையற்றவள். உங்களிருவருக்கும் துரோகம் செய்தவள். உங்கள் முகத்திலேயே விழிக்க லாயக்கற்ற என்னை மன்னிப்பாயா" என்று கெஞ்சிய சாவித்திரியை அன்புடன் தூக்கி நிறுத்தினாள் மஞ்சுளா.

"என்ன சாவித்திரி இதெல்லாம் என்ன பிதற்றல். நீ எனக்கு என்ன துரோகம் செய்து விட்டாய்! எதற்காக எனது மன்னிப்பைக் கோருகிறாய். அப்படி ஒன்றும் நீ கெடுதல் செய்ய மாட்டாய். எதையோ தவறாக நினைத்துக் கொண்டு பேசாதே..."

"தவறு! எது தவறு! என்னுடைய செய்கை தான் தவறு. ஆம். நீங்கள் அவருக்கு எழுதிய கடிதத்தை அவர் கண்ணில் காட்டாமலே ஒழித்தது பெரிய தவறில்லையா!"

"அடி பாதகி!" என்று இரைந்து கூறி அவள் கன்னத்தில் பளீரென்றறைந்தான் அவன்.

"ஐயோ" வென்று அலறிப் புரண்ட சாவித்திரியைத் தட்டியெழுப்பினான் சங்கரன்.

அவள் உடம்பு வெடவெட வென்று நடுங்கிக் கொண்டிருந்தது. பயத்தால் மேலெல்லாம் ஒரே அருவியாகப் பெருகியிருந்தது வியர்வை.

"என்ன சாவித்திரி ஏதாவது கனவு கண்டாயா!" என்று வினவினான் சங்கரன்.

"கனவா! ஆம். கனவுதான். என் வாழ்க்கையை யொட்டிய கனவு. என் புத்தியைத் திருத்திவிட்ட கனவு" என்று ஏதேதோ பேசலே திகைத்து நின்றான் சங்கரன்.

"என்ன சாவித்திரி! என்னென்னவோ பேசுகிறாயே! என்னத்தைக் கண்டாய் அதைத்தான் சொல்லேன். உனக்கு இருக்கும் சந்தேகத்தை; உன் மனத்தின் பீதியைத் துடைக்கிறேன்."

"கனவைச் சொல்லுமுன் உங்களிடம் ஒரே ஒரு வேண்டுகோள். இப்போது நான் கூறப்போகும் விஷயத்தைக் கேட்டு என்மேல் கோபம் கொள்வதில்லை யென்று ஒரு வார்த்தை,—ஒரே ஒரு வார்த்தை,—இல்லை யில்லை. நீங்கள் சொல்லவே வேண்டாம். நான் சொல்லி விடுகிறேன். அதன் பின் நீங்கள் மனமுவந்து என்னை ஏற்றுக் கொண்டாலும் சரி. உதறித் தள்ளி விட்டாலும் சரி..."

"இதெல்லாம் என்ன பேச்சு சாவித்திரி......"

"கூறுகிறேன்" என்று தொடங்கி அன்று கடிதம் வந்ததையும் அதை அவன் பாராதிருக்கக் கிழித்துப் போட்டதையும் கூறி அவளைப் பிரிக்கும் நோக்கத்துடனே அவனை அங்கு அழைத்து வந்ததையும் விவரித்து முடிவில் தான் கண்ட கனவையும் அதனால் தன் புத்தி திருந்தியதையும் எடுத்துச் சொல்லி அவன் மன்னிப்புக்கு மன்றாடி நின்றாள்.

ஆரம்பத்திலேயே நல்ல மனதோடிருந்து இடை இடையே தன் தாயாரின் போதனையினால் புத்தி குழம்பி முடிவில் நல்ல நிலைக்கே மாறித் தனது மன்னிப்பைக் கோரி நின்ற சாவித்திரியைப் பெரிய மனதோடு மன்னித்து விட்டான் சங்கரன்.

மறு தினமே மஞ்சுளாவைத் தந்தி கொடுத்து வரவழைத்தான். அன்றே தொடங்கிவிட்டது அவர்களது மாசற்ற அன்பு நிறைந்த வாழ்க்கை.

* * *

"ஏன், சாவித்திரி! பீரோவிலுள்ள அத்தனை புடவைகளையும் எனது பிரயாணப் பெட்டியிலேயே அடைக்கிறாயா!" என்று கேட்டுக்கொண்டே அங்கே வந்த மஞ்சுளா, சாவித்திரியின் பிரமித்த நிலையைக் கண்டு நகைத்து விட்டாள். "என்ன சாவித்திரி அப்படியே கல்லாய்ச் சமைந்து விட்டாயே. உன் மனத்தில் அப்படி என்ன தீராப் பிரச்னை ஓடுகிறது. அதைச் சொல்லேன்!"

"பிரச்னை ஒன்றுமில்லை அக்கா. எத்தனை இன்பமான வாழ்க்கையை என்னுடைய அற்ப புத்தியினால் பாழடிக்க நினைத்தேன் என்று நினைத்தபோது பிரமை பிடித்து உட்கார்ந்து விட்டேன்."

'அற்ப புத்தியா! உனக்கா! அப்படி யார் சொன்னது. இல்லை உலகத்துப் பெண்களிடம் காண முடியாத புதுமையைச் செய்து காட்டிய பெருமை தாங்கியவளல்லவா நீ. எந்தப் பெண் தன் கணவன் மற்றொரு பெண்ணுடன் நேசமாயிருக்க அனுமதி கொடுப்பாள்" என்று கேட்ட மஞ்சுளாவை இடைமறித்தாள் சாவித்திரி.

"அப்படியானால் அந்தப் பெருமைக்கும் நீயே உரியவள். உயிருக்குயிரான உனது அன்பர் மற்றொரு பெண்ணை மணம் செய்யும்போது சிறிதும் பொறுமைக்கு இடம் கொடுக்காமல் அவர்கள் விவாகத்தில் கச்சேரி செய்த உன் அன்பின் உயர்வைவிடவா நான் உயர்ந்தவளாகிவிட முடியும்!" என்று கூறியபோது பதில் சொல்ல முடியாத நிலையை அடைந்தாள் மஞ்சுளா.

"இரண்டு பெண்களின் உயர்ந்த குணத்தில் எழுந்தது நமது நிம்மதியான வாழ்க்கை" என்று கூறிய சங்கரனை அன்போடு நோக்கினர் இருவரும்.

வழி எப்படி?

இருபது வயது பூராப் பூரா நிரம்பி யிருந்த வத்ஸலா தன்னைப் பார்க்க வந்திருந்த இருபத்தோராவது வாலிபனை நமஸ்காரம் பண்ணி எழுந்தாள். அவள் முகத் தோற்றத்தைப் பார்க்கும் போது, "இருபதோடு இது ஒன்று" என்று அவள் எண்ணியது போலத் தோன்றிற்று.

"நான் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன்" என்றான் பெண் பார்க்க வந்த வாலிபன் ராகவன்.

"என்னையா அல்லது என் பெண்ணையா!" என்று கேட்டார் அவள் அருகில் அமர்ந்திருந்த வத்ஸலாவின் தகப்பனார் சாம்பசிவம்.

"உங்களைத்தான்!" என்றான் வாலிபன்.

"என் பெண்ணிற்குப் பாடத் தெரியாது; டான்ஸ் ஆடத் தெரியாது; நாகரிகம் ஒன்றும் தெரியாது; வீட்டில் சமையற்கார ரிருப்பதால் சமைக்கவும் தெரியாது" என்றார் சாம்பசிவம்.

"நான் அந்தமாதிரி அசட்டுக் கேள்வி யொன்றும் கேட்கப் போவதில்லை. இங்கு வரு முன்னர் ஒன்று கேள்விப்பட்டேன். அதைப் பற்றி......" என்று மெதுவான குரலில் ஆரம்பித்தான் ராகவன்.

சாம்பசிவத்திற்குத் திக்கென்றது. தம் பெண் வத்ஸலாவிற்குக் காது கொஞ்சம் மந்தம் என்ற விவரத்தை வழக்கம் போல் யாராவது வெடி வைத்து விட்டார்களா என்ன என்று எண்ணினார்.

பின்னர் சற்றுச் சமாளித்துக்கொண்டு, "என்ன கேள்விப்பட்டீர்!" என்று கேட்டார்.

'உங்கள் பெண்ணைப் பார்க்க வந்த ஒரு பிள்ளை அவளைக் கல்யாணம் செய்து கொள்ள இயலாததற்கு மிகவும் வருந்துவதாகவும், அதே சமயம் அவளுக்குக் கல்யாணமானால் அவள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய வகையில் எந்த உபகாரம் வேண்டுமானாலும் செய்யத் தயார் என்பதாகவும் உங்களுக்குக் கடிதமெழுதினானாமே!"

"அதுதான் ஊரறிந்த ரகசியமாயிற்றே! அப்பையன் நல்ல ஹோதாவில் இருப்பவன். சென்னையில் அவனுக்குத் தெரியாத பெரிய மனிதர்களில்லை. நான் கூட அவன் மாப்பிள்ளையாகக் கிடைத்து விடுவான் என்று மனக்கோட்டை கட்டினேன். கடைசியில் அப்படி எழுதி விட்டான். பைத்தியக்காரத்தனம்! அவன் உபகாரம் இப்போது யாருக்கு வேணும்!" என்று சொல்லி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார் சாம்பசிவம்.

"வேறு யாருக்கும் வேண்டி யிராவிட்டாலும் எனக்கு அவசியம் வேண்டும். இதோ என் அபிப்பிராயத்தையும் கேட்டுக் கொள்ளுங்கள். உங்கள் பெண் வத்ஸலாவை எனக்குப் பிடித்து விட்டது. அவளுக்கும், உங்களுக்கும் சம்மதமானால் எந்தத் தேதியிலும் நான் அவள் கை பிடிக்கத் தயார்!" என்றான் ராகவன் சற்று உரத்த குரலில்.

"ஸார்! உங்களை மற்ற இருபது பேரைப்போல எண்ணியதற்காக மன்னித்துவிடுங்கள். ஆனால்..." என்று தயங்கினாற்போல் நிறுத்தினார் அவர்.

"ஆனால் நான் எதற்காக அந்த அசட்டுக் கேள்வியைக் கேட்டேன் என்பது விளங்கவில்லை; இல்லையா! அதற்குக் காரணம் இதுதான். நான் ஒரு 'இன்ஷூரன்ஸ் ஏஜெண்டு' வத்ஸலாவைக் கல்யாணம் செய்து கொள்வதின் மூலம் நான் அந்தப் பணக்கார வாலிபனைப் போய்ப் பார்க்கலாம். அவன் கடிதத்தில் எழுதியபடி நடந்து கொண்டால் அது போதுமே. என் தொழில் விருத்தி யடைய!" என்றான் புன்னகையுடன்.

பெரியவர் 'ஹோ, ஹோ' வென்று சிரித்தார். வத்ஸலாவின் காதில் ராகவன் மெதுவான குரலில் சொன்னது ஒன்றும் விழா விட்டாலும் அவளும் சேர்ந்து கலகல வென்று சிரித்தாள். —டி. ஜி. எஸ்.

Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD No M, 4392

Registered as a newspaper in Ceylon

